# விவேகி

VIVEKI 1.7.67 40 சதம்



"என்னப்பா! வியாபாரி அம்மா ஏன் கோவிச்சுக்கொண்டு போரு?"
"ஒண்டுமில்லே ஐயா!.. ஔவையார் புடவை இருக்குது... பாக்கிறியளா அம்மா எண்டன். அதுதான்... என்னைப் பாக்க கிழவி மாதிரியா இருக்கெண்டு கோவிச்சிட்டுப் போரு..."

விவேகி

மலர் : 8 இதழ் : 7

கௌரவ ஆசிரியர் ;
மு. வி. ஆசீர்வாதம் ஜே. பீ.

நிர்வாகி
மாட்டீன்

ஆசிரியர்கள் :
செம்பியன் செல்வன்
செங்கை ஆழியான்

# புத்தக வாரம்

இம்மாத முதல் வாரத்தை இலங்கை நூலகச் சங்கம் 'புத்தக வாரமாக'க் கொண்டாடுகின்றது. இதனது அடிப்படை நோக்கம் ஈழமெங்கணும் நூல்களைப் படிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையும், அவர்களின் அவாவும் அதிகரிக்கச் செய்யவேண்டும் என்பதாகும்.

இந்த நோக்கம் இன்றைய நிலையில் மிக முக்கியமானதொன்றாக உள்ளது. உயர்ந்த நூல்களைக் கற்கவேண்டும் என்ற எண்ணம் குறைவாக வாசகர்களிடையே நிலவும் இக்காலத்தில் — வாசகர்களின் மனத்தைப் பண்படுத்த இத்தகைய விழாக்கள் அவசியம்.

இதன் முக்கியத்தை பெரியவர்களும், கல்விக்கூடங்களும் உணர்ந்து தகுந்த ஆதரவை அளிக்க வேண்டும். இன்றைய மாணவ சமூகம் தன்னுடைய அறிவிற்கு பாடநூல்களையே பிரதானமாக நம்பியிருக்கின்றது. இதனால் அதனது கல்வியறிவு குறுகிய வட்டத்திற்குள் அடங்கிவிடுகின்றது. இத்தகைய வாசக இரசனை — விருப்பு அதிகரிக்குமானால் மாணவ சமூகத்தின் பொது அறிவும் விருத்தியடையும்.

இத்தகைய இரசனைகள் பெருகினாற்றான் — நாட்டிலும் ஆக்கபூர்வமான நிலையில் எழுத்தாளரும் ஈடுபடுவர். ஆகவே நாட்டின் — கலை, கலாச்சாரம் என்பன விருத்தியுற இத்தகைய சேவைகள் மிகமிக அவசியம்.

இத்தகைய விழாவினை வட இலங்கை நூலகச் சங்கமும் கொண்டாடுகின்றது. அவர்களின் முயற்சிக்கு அன்பையும் ஆதரவையும் அளிக்கும் முகமாக உண்மையில் வாசகர்களே நன்மையடைகிறார்கள்.

ஆகவே,

இத்தகைய புத்தகவாரத்தினை ஒழுங்கு செய்த இலங்கை நூலகச் சங்கத்தினரைப் பாராட்டுகின்றோம். இந்த சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்தும்படி ஈழத்து மக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# பல்சுவை

## இரசனைக்கு வயது ஐம்பதா?

◉ இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கட்கு ஐம்பதாண்டுகள் நிறைந்துவிட்டதாம். ஆமாம். இலக்கிய அன்பர்கள் அவருக்கு 'பொன் விழா' எடுத்தால், அது இலக்கியத்திற்கு எடுத்த விழாவாகவே இருக்கும் தனது வாழ்நாளிலே—ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்கு மேலாக இலக்கியத்திற்கு உழைத்த இரசிகமணி அவ்வப்போது உதிர்க்கும் கருத்துக்கள் இலக்கிய உலகில் பரபரப்பையும், சிந்தனைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. பொல்லாத ஐம்பதாண்டு இளைஞன் அவர்.

"அவருக்கு எப்போது 'பொன்விழா'க்கொண்டாடப் போகிறீர்கள்?" என எழுத்தாள நண்பர் ஒருவர் செம்பியனைக் கேட்டாராம்:

"அவர் தான்பிறந்ததிலிருந்தேபொன்விழாகொண்டாடி வருகிறாரே!... அவர் கனக செந்தியல்லவா?..." என்று செம்பியன் பதிலளித்தபோது சுற்றியிருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்களாம்.

—தகவல்: எஸ். யோகராசா

## சோவியத் நூல் நிலையங்களின் சேவை

◉ உலகிலேயே சோவியத் யூனியனில்தான் அதிகமான நூல்நிலையங்கள் இருக்கின்றன. 230 கோடி நூல்களைக் கொண்ட, 3,80,000 நூல் நிலையங்கள் அங்கு உள்ளன. சோவியத் கலாச்சார அமைச்சு தரும் தகவலின்படி, 11 கோடி மக்கள், நூல் நிலையங்களை உபயோகிக்கின்றனர் எனத் தெரிய வருகிறது. பிரதி வருடமும், சோவியத் நூல் நிலையங்கள் 8 முதல் 10 கோடி நூல்களைப் பெறுகின்றன.

சோவியத், அயல் நாட்டு எழுத்தாளர்களின் சிறந்த சிறு கதைகள், நாவல்கள். பண்டைய இலக்கிய கர்த்தாக்களின் உன்னத படைப்புகள், விஞ்ஞான இலக்கிய சிருஷ்டிகள், பெரியார்களின் வாழ்க்கை ஞாபகங்கள் சம்பந்தமான நூல்கள், சோவியத் நூல் நிலையங்களில் உள்ளன.

## விவாக வயது

◉ சோவியத் யூனியனில் உள்ள 18 வயதடைந்த எவருக்கும் விவாகம் செய்ய உரிமை உண்டு. 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் விசேட அனுமதி பெற்று விவாகம் செய்யலாம். சோவியத் யூனியனிலுள்ள, உக்ரேய்ன், மால்டேவியா, அஸர்பைஜான், ஆர்மீனியா ஆகிய குடியரசுகளில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட கன்னியர்கள் விவாகம் செய்ய முடியும். இக்குடியரசுகளின் சட்டங்கள் 16 வயதடைந்த பெண்கள் விவாகம் செய்ய அனுமதிப்பதாக உள்ளன.

## ஏ. ரி. பொன்னுத் துரையின் இறுதிப் பரிசு

◉ யாழ் இலக்கிய வட்டத்தினர் சென்ற மாதம் 25—ம் திகதி ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய **இறுதிப் பரிசு** என்ற நாடக நூலை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் சிறப்பாக வெளியிட்டனர்.

கிராமப்புற மக்களிடையே ஈழத்து இலக்கிய உணர்வை அதிகரிக்கச் செய்வதன் மூலமே ஈழத்து இலக்கியங்களை வளர்க்க முடியும்' என்ற எண்ண உணர்வில் முதன்முறையாக இத்தகைய வெளியீடு ஒன்றினை யாழ். இலக்கியவட்டம் நடாத்தியது. அதில் பூரண வெற்றியும் அடைந்தது.

பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். அறிஞர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள் கூடிச் சிறப்பித்தனர். ரூ.101-கொடுத்து முதற் பிரதியை யாழ்மெட்டல் தாபன உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு வாங்கியதன் மூலம் கிராமப்புற மக்களின் இலக்கிய உணர்வினைப் புலப்படுத்திவைத்தார். வெளியீட்டு விழாவிலும் யாழ்ப்பாணத்தில் இதுவரை விற்பனையாகாத அளவு பிரதிகள் விற்பனையாயின.

இதன் மூலம் யாழ். இலக்கியவட்டத்தினரும் ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களும் பெருமையுற்றனர்.

—தகவல் : ரசிகன்

## நல்லறிஞர் பெர்னுட்ஷா வாழ்வில்

◉ உலகப் புகழ்பெற்ற, பெர்னுட்ஷா, மாமிசம் சாப்பிடுவது, மது அருந்துவது, புகை பிடிப்பது போன்ற தீய பழக்கங்களிலிருந்து வேறுபட்டவர். யாராவது விருந்துக்கு அழைத்தால், இலகுவில் அங்கு செல்லமாட்டார். காரணம், "விருந்தில் மது அருந்துபவர்களும், புகை பிடிப்பவர்களும் கலந்து கொள்ளக்கூடும்; விருந்தில் மாமிச உணவு பரிமாறக் கூடும்" என்பதுதான்.

இங்கிலாந்துப் பிரதமராகவிருந்த சேர். வின்சன்ட் சேர்ச்சிலின் மனைவிக்கு, பெர்னுட்ஷாவின் எழுத்துக்களில், தனி மதிப்பு உண்டு. ஒரு முறை சேர்ச்சிலின் மனைவி, பெர்னுட்ஷாவிற்கு விருந்திற்கு வருமாறு. டெலிபோனில் அழைப்பு விடுத்தார். பெரிய இடத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறதே என்று எண்ணவில்லை பெர்னுட்ஷா. உடனே, "செத்த பிராணிகளைச் சாப்பிட நான் வர மாட்டேன்" என்று சொல்லி டெலிபோனைக் கீழே வைத்து விட்டார்.

— தகவல்: அ. கனகசூரியர்

◉ தலைப்புப் பெயர்கள் வேறு வேருக இருக்க உள்ளடக்கத்தில் தம்முள் ஒத்தவையாக இருக்கின்ற இலக்கியப் படைப்புக்களும் அவற்றின் இலக்கியப் படைப்பாளரும் உள்ள தற்காலத்தில், தலைப்புப் பெயர் மட்டும் ''ஒன்ருக இருக்க உள்ளடக்கம் வேருக அமையும்படி இலக்கியம் படைத்தவர்களும், அவர்களின் படைப் புகளும் கூட இருக்கின்றன. இதோ! அத்தகைய படைப்பிலக் கியக்காரர் சிலரும், அவர்களின் படைப்புக்களும் : —

| | |
|---|---|
| 'பூரணி' (சிறுகதை) | 'பி. எஸ். ராமையா' |
| 'பூரணி' (சிறுகதை) | 'லா. ச. ராமாமிர்தம்' |
| 'அக்கரைச்சீமையில்' (சிறுகதைத்தொகுப்பு) | 'சுந்தரராமசாமி |
| 'அக்கரைச்சீமையில்' (பிரயாணநூல்) | 'சோமு' |
| 'இலக்கியக்கலை' | 'க. நா. சுப்பிரமணியம்' |
| 'இலக்கியக்கலை' | 'அ. ச. ஞானசம்பந்தம்' |
| 'தரங்கிணி' (சிறுகதை) | 'லா. ச. ராமாமிர்தம்' |
| 'தரங்கிணி' (நாவல்) | 'நாரண துரைக்கண்ணன் |
| 'நாசகாரக்கும்பல்' (சிறுகதை) | 'புதுமைப்பித்தன்' |
| 'நாசகாரக்கும்பல்' (சிறுகதை) | 'தாமரைமணாளன்' |
| 'மனக்கண்' (குறுநாவல்) | 'மணிவண்ணன்' |
| 'மனக்கண்' (தொடர்கதை) | 'அ. ந. கந்தசாமி' |
| 'பிறந்தமண்' (நாவல்) | 'மணிவண்ணன்' |
| 'பிறந்தமண்' (சிறுகதை) | 'சிற்பி' |
| 'மணிபல்லவம்' (நாவல்) | 'மணிவண்ணன்' |
| 'மணிபல்லவம்' (மொழி பெயர்ப்பு நாவல்) | 'தேவன்' — யாழ்ப்பாணம் |
| 'சடங்கு' (குறுநாவல்) | எஸ். பொன்னுத்துரை |
| சடங்கு' (நாவல்) | செ. கணேசலிங்கன் |
| 'பசி' (சிறுகதை) | 'தாமரைமணாளன்' |
| 'பசி' (சிறுகதை) | 'கே. இராமசாமி' |
| 'நீரோட்டம்' (நாவல்) | 'எஸ். ரங்கநாயகி' |
| 'நீரோட்டம்' (நாவல்) | 'பி. வி. ஆர்' |
| 'முள்ளும் மலரும்' (நாவல்) | 'உமாசந்திரன்' |
| 'முள்ளும் மலரும்' (நாவல்) | 'ஸி. ஆர். ராஜம்மா' |
| 'ஆதார சுருதி' (நாவல்) | 'ரஸவாதி' |
| 'ஆதாரசுருதி' (சிறுகதை) | 'ரத்ன' |

தகவல் :— அ. யேசுராசா

◉ ''நீங்கள் இன்னும் கலியாணம் செய்யவில்லையா...''

''ஓம்...''

''ஏன் விரைவில் திருமணம் செய்து கொள்ளக் கூடாது? இப்பவே உங்களுக்கு வயதாகிறதே !''

''நல்லவொரு பெண்ணைத் தேடுகிறேன்...''

''எவரும் கிடைக்கவில்லையா ?''

''இருவர் கிடைத்தனர்...... ஆனல், அவர்களும் நல்லதொரு ஆடவனைத் தேடுகிருர்கள்.''

# சிந்தை அடக்கியே....

★ சாலை இளந்திரையன் ★



சிந்தனை என்பது சின்னஞ் சிறியதோர்
செயல்ல வோ, மனிதா?–அதைச்
சிக்கெனக் கட்டி அடக்கி முடக்கிட
ஏன்விழைந் தாய்மனிதா?

சந்தன வார்ப்பிலே தேனுயி ரேறியே
தத்தித் தவழ்ந்துவரும்-உன்றன்
சண்டிக் குழந்தையைத் தூணிற் பிடித்துநீ
கட்டுவையோ மனிதா?

'இந்தப் படியில்லை, அந்தப் படியில்லை'
என்றது சொல்லுவதால்-அதை
எட்டிப் பிடித்துத் தட்டி மடக்குதல்
என்ன முறைப்படியோ?
அந்த உரலிலே கண்டுண்ட செய்க்கதை
அற்புதம் பாடுகிருய் - நெஞ்சின்
ஆழத்துச் சிந்தனை மற்றந்தச் சேவையையும்
ஆக்கிட்ட செயல்லவோ?

சிந்தனைச் செய்உன்னை ஏய்த்துவிட்டோடிச்
சிரிக்கலை யோ, தினமும்?–அதன்
செய்கையில் நீயும் உனைமறந் தேமகிழ்
தேக்க'லை யோ, தினமும்?
சிந்தை அடக்கிட வேண்டுமென் றேனின்னும்
நீவெறும் பேசுகிருய்?-எழிற்
சிந்தனை தீட்டிடும் சித்திரம் அல்லவோ,
இத்தரை வாழ்க்கையப்பா?...

★


புதிய சமூக நாவல்!

மலைநாட்டு மக்களின் வாழ்க்கைப் பின்னணியில்
உருவாகிய உன்னத நாவல்.

## மலையின் கீதம்

விரைவில் ஆரம்பமாகின்றது.



# திருமணமாம்...
# திருமணமாம்...!

ஓர் அமெரிக்க மாது, பெரியதொரு கடைக்குச் சென்றுள்.

''நாளை எனக்குத் திருமணம். என்ன நிறத்தில் கலியாண ஆடையை நான் தெரிவு செய்யலாம்"

''இது முதல் திருமணமாயின் இளஞ் சிவப்பு நிற ஆடை ஏற்றது. இரண்டாவதாயின் ஒரேஞ் நல்லது. மூன்ருவதாயின் நீல நிறம் நல்லது. நான்காவதாயின் பச்சை...... ஐந்தாவதாயின் வெள்ளை ....''

''ஒன்பதாவதாக இருந்தால்......?" என்று வினவினுள், அப்பெண்.

★

''உன் அப்பாவுடன் நமது காதல் பற்றிப் பேச இதுதான் ஏற்ற நேரமென்று நினைக்கிருயா ?"

''ஆமாம்...... அவர் இப்போதுதான் சப்பாத்து இல்லாமல் இருக்கிருர்.. ..."

★

**அவள் :** நாங்கள் மணந்து கொண்டால், நான் செய்கின்ற வேலையை இழந்துவிடுவேன்.

**அவன் :** அப்படியாளுல் எங்கள் மணத்தை மிக இரகசியமாக வைத்துக் கொள்வோம்.

**அவள் :** ஒரு குழந்தை பிறந்தால் ?

**அவன் :** குழந்தையிடமும் சொல்லிவைப்போம்.

★

**அவன் :** நான் ஓர் ஆராய்ச்சியாளன் என்று வைத்துக் கொள்வோம். நீதான் உலகமாம். உன் தலை வட துருவம்...... கால்கள் தென் துருவமாம்......

**அவள் :** சரி...... ஆனுல், மத்திய கோட்டில் ஆராயாதீர்கள்.

★

**அவள் :** கவனம்... கெதியிலே எனது கணவர் வந்திடுவார்.

**அவன் :** வரட்டுமே... நான் எதுவும் செய்யவில்லையே?......

**அவள் :** அதனுல்தான் சொல்கிறன்...

# யுக்திப் புதிர்

சென்ற மாத யுக்திப் புதிருக்கு 106 விடைகள் வந்திருந்தன. அவற்றில் 20 சரியான விடைகளாக இருந்தன. அதில் அதிர்ஷ்ட சாலியான—

எஸ். விசுவலிங்கம்
களுவாஞ்சிக்குடி
மட்டக்களப்பு

—என்பவருக்கு, பரிசுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சரியான விடை: 'தோள்பட்டையிலிருந்து கையின் நீளம்'

**இம்மாதப் புதிர் :**

ஒரு முஸ்லிம் வர்த்தகர் தனது இரு மகன்களுக்கு ஒரு உயில் எழுதிவைத்து விட்டு இறந்து போனுர். அதில்—

'எனது மக்கள் இருவரும் இங்கிருந்து இரு குதிரைகளில் ஏறி மெக்காவுக்குப் பயணமாக வேண்டும். யார் குதிரை இரண்டாவ தாக மெக்காவை அடைகிறதோ அவரே எனது சொத்திற்கு உரிமையாளராவர்' – என எழுதியிருந்தது

இருவரும் குதிரைகளில் ஏறிப் பயணமாகினர். ஆனல் – பயணம் முடியவில்லை. நத்தை வேகத்தில் குதிரைகள் நகர்ந்தன.

இவர்களை வழிப்போக்கன் ஒருவன் சந்தித்தான். இவர்கள் கூறிய விபரத்தைக் கேட்ட அவன், அவர்களுக்கு ஒரு உபாயம் கூறினுன்.

அதைக் கேட்ட இருவரும் மகிழ்ந்தனர். மறுவிநாடி—

குதிரைகளை நோக்கி ஓடினர். குதிரைகள் காற்ருகப் பறந்தன

வழிப்போக்கன் கூறிய யுக்தி என்ன ?

விடையை ஒரு தபால் அட்டையில் எழுதி கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்பவும்.

**யுக்திப் புதிர்—2**
**விவேகி**
**29, கண்டி வீதி**
**யாழ்ப்பாணம்.**

## ஒலிவர் ருவிஸ்ட்

எழுத்தாளர் ஏ. டி. பொன்னுத்துரை அவர்களுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக இம்மாதத்தில் 'ஒலிவர் ருவிஸ்ட்' வெளி யாகவில்லை. வாசகர்கள் மன்னிக்க. அடுத்த மாதம் வழக்கம் போல் வெளியாகும்.

–செம்பியன்.

## "திங்கள் நங்காய்"



வண்ண ஒளியுமிள் வெண்ணி லவுப்பெண்நீ
வானக் கடலில்நீ ராடுகையில்,
எண்ண மிழந்துஇம் மண்ணை மறந்துளம்
ஏந்திளை யுன்னெழில் மாந்தி நிற்கும்!

தாரகையா மிளந் தோழியர் உன்னெழிற்
கோலத்தைக் கண்டுனைக் கேலி செய்தே
காரிகையே உன்தன் காதலன் யாரென்று
கண்ணைச் சிமிட்டியே கேட்கி றுரோ!

அல்லி மலருன தன்புமிகு தோழி
அங்கந் தளர்ந்திட வாடி நின்றுள்
மெல்லவே நீயுமுன் தண்முகங் காட்டிட
மொட்ட விழ்த்தேநகை பூத்தனள் காண்!

அங்கயற் கண்ணி அருகுடையோன் சிரம்
தங்கிடும் தேசுடைத் திங்கள் நங்காய்!
இங்கித மேதரும் இன்னெளி நல்கியே
இந்நிலத்தில் இன்பம் ஈந்தனை நீ!

குரும்பையூர் ஆ. மகாதேவன்

## எது இன்பம்?

மாடி மனைகள் கட்டிடினும்
மாளிகைகள் பல ஆக்கிடினும்
தேடியே வந்த பாலர்களின்
சிறுவாய் மொழியே இன்பமடா

நெற்றியின் வியர்வை நிலத்தில் விழ
நித்தமும் உழைத்தே காசு பெற்று
உற்றதன் மனைவி கையிலிட்டே
ஒன்றுய் வாழ்த லின்பமடா

மாலையில் கணவனும் மனைவியுமே
மகிழ்ந்து உலாவச் செல்வதிலும்
காலையில் எழுந்தே கடமைதனை
களிப்பாய்ச் செய்த லின்பமடா.

கற்றவர் தம்மைப் பேணுதலும்
கடவுளை நன்கு வணங்குதலும்
உற்றவர் பெற்றவர் யாவரையும்
ஓம்பியே வாழ்த லின்பமடா.

அல்வாயூர் செ. விவேகானந்தன்



# திருவள்ளுவரும் செகப்பிரியரும்

ம. சிவராசன், பீ. ஏ. (ஆனசு)

வான் கவிந்த வையகத்து வளமார்ந்த மொழி படைத்தோர் யாவரும் வள்ளுவரின் குறளமுதைக் கொள்ளரிய நிதியமெனக் கண்டு தம் மொழியில் பெயர்த்துள்ளனர். எம்மதமும் சம்மதமாய் எம்மினமுந் தம்மினமாய்க் கொண்டு உலகோர் யாவரும் ஓம்பும் வண்ணம் வள்ளுவர் தம் நூலைப் படைத்த பான்மையினால் பன்மொழியினரும் இன் தமிழ்க் குறளைத் தத்தம் மொழியில் வார்த்தெடுத்துக்கொண்டனர். அவ்வாறே ஐரோப்பிய மொழிகள் யாவற்றினும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது செகப்பிரியரின் (Shakespeare) நாடகங்கள். ஆங்கில இலக்கியத்திலுள்ள திறனாய்வு நூல்களுள் பாதிக்கு மேலானவை செகப்பிரியரைப் பற்றிய விமர்சன நூல்கள். பிரித்தானிய சாம்ராச்சியமே அழிந்தாலும் சகித்துக் கொள்வோம். ஆனால் செகப்பிரியரின் நூல்கள் அழிந்து போவதைச் சகிக்கமாட்டோம் என்று சேர்ச்சில் கூறியதாகச் சொல்வார்கள்.

உலகம் போற்றும் உயர் தனிச் செந்நாப் புலவர்களாக விளங்கும் வள்ளுவரையும் செகப்பிரியரையும் பக்கத்தில் நிறுத்தி வைத்துப் பார்ப்பதில் இலக்கிய ரசனையுடையோர்க்கு ஒருவகை மனநிறைவு ஏற்படுகிறது. இவ்விருவரின் கவியுலகப் படைப்புக்களிற் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை நோக்கும் முகமாக அவர்களிடையே காணப்படும் உயர்வுதாழ்வுகளைச் சிறிது காண முயல்வோம்.

"வள்ளுவர் நூற் பொருள் யாது?" என்ற கேள்விக்கு 'உலகம்' என்பதே பொருத்தமான பதில். அறம் பொருள் இன்பம் எனத் தம் நூலை வகுத்துக்கொண்டாரேனும் அவர்கூறாதபொருள் உலகத்தில் இல்லை.

"எல்லாப் பொருளுமிதன்
பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும்
இல்லையால்"

என்று மதுரைத் தமிழ்நாகனார் கூறிப்போந்தார்.

செகப்பிரியர் நாடகங்களின் பொருள்யாது? உலகியல்தான். அவர் சிருட்டித்த ஆயிரக்கணக்கான பாத்திரங்கள் யாவும் நாம் அன்றாட வாழ்விற் காணும் குணசித்திரப் பேர்வழிகள்தாம். அவர்கள் நடை உடை சொல் செயல் பாவனை என்பவற்றின் மூலம் உலகின் இயல்பையும் உலகமாந்தர் இயல்பையும் சகல கோணங்களிலிருந்தும் படம் பிடித்துக் காட்டியுள்ளார். வள்ளுவர் உலகில் ஒன்றையும்

தவிர்க்காது எல்லாவற்றையும் காட்டியதுபோல செகப்பிரியரும் தள்ளுவதற் கொன்றுமின்றித் தரணி வாழ்வை முழுமையாக எடுத்துக் காட்டியுள்ளார். செகப்பிரியர்,

"எக்காலமும் அவர் காலம்
எந்நாடும் அவர் நாடு
எப்பொருளும் அவர்-
கையாண்ட பொருள்"

என அவர் கவிமுழுமையை ஓர் அறிஞர் குறிப்பிட்டார்.

(Shakespeare is not of one age but for all ages
Not of one land but for all lands.
Not of one thing but of all things.)

உலகியற்கை, வாழ்வு, வாழ்க்கை நெறி, நல்வாழ்வுக்கு வேண்டிய கல்வி, நட்பு, பொருள் ஆதியனவற்றில் வள்ளுவர், செகப்பிரியர் ஆகிய இருவரும் ஒத்த கருத்துடையவராகவே காணப்படுகின்றனர். நிலையாமையைக் கூறவந்த வள்ளுவர் 'கூத்தாட்டவைக்குழாம்' என்கிறார். செகப்பிரியர் உலகம் ஒரு நாடகசாலை என்று குறிப்பிடுகின்றார்

"All the world is a stage";
"Life is a walking shadow... that struts and frets upon the stage"

"உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்று வாழ்க்கை நிலையாமையின் தன்மையை வள்ளுவர்கூறுகிறார். அவ்வாறே, செகப்பிரியர்.

"நமது வாழ்வு நித்திரையில் நிகழும் கனவு போன்றது" என்று குறிப்பிடுகின்றார். (We are such stuff as dreams are made of; our little life is rounded with a sleep.)

வாழ்க்கையில் கொள்ளரிய உயரிய பொருள் நட்பு. நட்பின் இயல்பு பற்றிக் கூறுமிடத்தும் இரு பெரும் புலவரும் இணைந்தே செல்கின்றனர். 'ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடுதலியலாது; ஆகாது; நட்புக் கொள்ளுமுன் நன்றாக ஆராய்ந்தே கொள்ளல் வேண்டும்' என்னுங் கருத்தை வள்ளுவர்

'நாடாது நட்டலிற்
கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள்ப
வர்க்கு'

என்ற குறளில் வெளியிடுகின்றார். இதே கருத்தை செகப்பிரியர்

"Do not dull thy palm
with friends new-hatched
Those friends thou hast
and their adoption treed
grapple them to thy soul
With hoops of steel"

என்ற வார்த்தைகளில் வெளியிடுகிறார்.

வள்ளுவரின் குறளமுதம் ஒப்பற்ற அறநூலாகவும்ஈடில்லா இலக்கியமாகவும் திகழ்கிறது. இடையிடையே அறக்கருத்துக் கள்மிளிர்ந்திருக்க,அவைதோறும் தெவிட்டாது இன்பம் சுரந்து திகழ்வது செகப்பிரியரின் நாடக இலக்கியம் செகப்பிரியரைவள்ளுவர் போன்ற ஞானிபோன்று சொல்வதற்கில்லை. ஆகவே இரு மேதைகளையும் கவிஞர் என்ற முறையிலே கண்ணோட்டம் செலுத்திப் பார்ப்போம்.

திருக்குறட் காமத்துப் பாலை ஒரு நாடகக் காப்பியம் என்றே

கூறலாம். காமத்துப் பாலில் திருவள்ளுவர் பாக்களைத் தாம் கூறும் சொற்களாக அமைக்காமல் காதலர் இருவர் கூற்றாகவே அமைத்துள்ளார். வள்ளுவர் காதல் நாடகக் களம் அமைத்துத் தலைவன், தலைவி, தோழியென மூன்று பாத்திரங்களைப் பேச விட்டு அவர்களைப் பேசவைக்கும் கலைஞராக விளங்குகிறார். காமத்துப் பாலைக் கற்பவர் நேரே அறவுரையோ பெறும் வாய்ப்பில்லாமல் காட்சிகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கண்டுகளிக்கநேருகிறது. ஆகவே வள்ளுவரின் இன்பப் பாலமாகிய நாடகத்தில் வரும் காட்சிகளையும் பாத்திரங்களின் உரையாடல்களையும், செகப்பிரியரின் நாடகங்களில் வரும் சில காட்சிகளையும், பாத்திரங்களின் உரையாடல்களையும் ஒப்பு நோக்குவோம்.

வள்ளுவரின்காமத்துப்பாலாகிய நாடகத்தில் முதல்வருங் காட்சி தகையணங்குறுத்தல். பொழில் விளையாட்டுவிருப்பால் தன் தோழியரை நீங்கித் தமியளாய் நின்றாள் தலைவி. வேட்டையாடவந்த விடலைப்பருவத்து வேளன்ன காளையொருவன் நீர் வேட்டுஅதேபொழிலிடத்துவந்து தமியளாய் நின்ற தையலைக்கண்டு மையல் கொண்டு நிற்கிறான். இறவாத புகழ் படைத்த காப்பியஞ் செய்த கவிஞர்களெல்லாம் இக்காட்சியைச் சித்திரிப்பதில் தம் கைவரிசையைக்காட்டியுள்ளனர்; அடியார்கள் வரலாற்றைக் கூறும் பேரின்பப் பெட்டகமான பெரிய புராண ஆசிரியர் கூட இப்படியொரு காட்சியைப் புனைந்துள்ளார். ஆலய வழிபாட்டிற்குச் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைக் கண்டு,

கற்பகத்தின் பூங் கொம்போ
காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் நுதல்
பூத்த விரைக் கொடியோ
அற்புதமோ
திருவருளோ அறியேன்

என்று அதிசயித்தார். வள்ளுவர் காட்டும் தலைவன் தலைவியின் எழில் கண்டு.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல்மாலுமென்நெஞ்சு"

என ஐயுறுகின்றான்.

இதேபோன்று செகப்பிரியர் சித்திரித்த காட்சியொன்றைக் காண்போம். அவர் இயற்றிய நாடகங்களுள் பெரும்புயல் (The Tempest) என்பது ஒன்று. அவருடைய இறுதிக் காலத்தில் ஆக்கப்பட்டது. காதலும் கற்பனையும் ததும்பி நிற்பது. தந்தையை மட்டுமன்றி வேறு மானிட உரு



நம்முடைய கொள்கைகளை மற்றவர்கள் மதிக்கவேண்டுமென்று நாம் நினைப்பதுபோல அவர்களுடைய கொள்கைகளையும் நாம் மதிக்க வேண்டும்.

காந்தியடிகள்

வத்யையேகண்டறியாதமிருண்டா என்ற இளவாலேயொருத்தி, தற் செயலாக பேர்டினன்ட் என்ற பேரழகனைக் காண்கின்ருள். மயங்கி நின்ற மங்கை சிறிது தெளிந்து

நான் காண்பது என்ன
கட்டமைந்த வடிவம் ஒன்று
காட்டி நிற்கிறதே

(What is it a spirit it
carries a brave form) என்று
கூறி நிற்கிருள்.

இளவலும் தான் கண்ட எழிலுருவை எண்ணி
திண்ணமாக இது ஒருதெய்
வமே

(Most sure it is a goddess) என்று அவனையுமறியாமல் கூறி நிற்கிருன். வள்ளுவன் படைத்த தலைமகனின் அணங்கு என்ற சொல்லினையும் செகப்பிரியர் படைத்த தலைவன் தலைவியர் கூறிய, Goddess, Spirit என்ற சொற்களையும் எண்ணிப் பாருங் கள். மூன்று பதங்களும் தெய் வம் என்ற பொருளையே பயந்து நிற்கின்றன. அன்றியும்உணர்ச்சி வசப்பட்டார் உரைவேண்டார் என்பதற்கு உரைகல்லாக. செகப் பிரியரும் வள்ளுவரும் படைத்த பாத்திரங்கள் ஓரிருசொல்லிலே தம் உள்ளக் கிடக்கையினையும் உணர்ச்சித் திறத்தையும் புலப் படுத்தி நிற்பதை நாம் பார்க்கி ரேும்; மேலும் இயல்பாகவே சிறப்புடைய பொருளை அதி னுஞ் சிறப்பிக்க வேண்டுவதில்லை. அவ்வாறு சிறப்பிக்கப் புகுந்தால் சீதையின் எழிலை அவள் ஆபர ணங்களே மறைத்தவாறு போல (உமிழ் சுடற் கலன்கள் நங்கை உருவினை மறைப்பதோரார் கம்ப ராமாயணம்) ஆகிவிடும். ஆகவே தான் சொற்செட்டுடைய வள் ளுவர் அடை மொழியெதுவு மின்றி 'அணங்கு' என்றே கூறி யமைந்தார். அவ்வாறே செகப் பிரியரும் 'Spirit, goddess' என் பவற்றை தனியே கையாண்டு தலைவன், தலைவியர் தனிச் சிறப்பையுணர்த்திஞர்.

கவிதைக்குத் தனியழகு தரு வது உவமையணியைக் கையாள் வதில் வள்ளுவரும், செகப்பிரி யரும் ஒப்பார் யார் மிக்கார் யாரென்று தோள்கொட்டிநிற்கி ருர்கள். தலைமகனைக் கண்டு ஆராக்காதல் கொண்டு நாணத் தால் மனங்கட்டுண்டு, தலைமகன் தன்னைநோக்குவதைக் காதள லோடி மீளும் கடைக்கண்ணு லறிந்து அவனை நோக்காதுநிலம் நோக்கி நிற்கிருள் தலைவி. அவன் தோள்களைப் புண்ணுக்கி ஒன்று மறியாதனபோன்று நிலம் நோக் கிய கண்கள் தலைவனுக்குக் குவளை மலரை நினைவுறுத்தின. வண்ணத்தாலும் வடிவத்தாலும் அவ்வரையர மகளிரின் கண் நிகர்த்தன குவளைகள். ஆனுல் குவளைகள் மேல்நோக்கி மலர் வன. இவளுடைய கண்கள் நிலம் நோக்கி நின்றன. காரணம் நாணம். குவளை மலர்க்கும பார்க்கும் ஆற்றல் இருந்தால் அவையும் நிலம் நோக்கியிருக்கும் என்கிருர் வள் ளுவர். ''குவளைக்குஎன்னநாணம் வந்தது?'' என்று எமக்கு ஐயம் தோன்றுமெனஏற்கனவேயறிந்து விடையும் கூறிவிட்டார். தலை மகளுடைய கண்களின் அழகிற் குத் தோற்றுவிட்ட நாணத்

> சமுதாயத்தின் எதிர்காலம் தாய்மார்களின் கையில்தான் இருக்கிறது. பெண்களால் உலகம் அழிந்ததுண்டு. ஆனால் அழிவிலிருந்து காக்கவல்லவர்களும் அவர்களே!
>
> —கவியரசி சரோஜினி

தால் நிலன் நோக்குமென்பது தான் காரணம்.

''காணிற்குவளை கவிழ்ந்து
நிலம் நோக்கும்
மாணிழை கண்ணொவ்வே
மென்று''

லூக்கிறீஸ் (Lucres) என்பவள் ரோமாபுரியின் பேரழகி. அவள்பால்வேட்கை கொண்ட ஒருவன் அவள் எழிலைப் புனைந்துரைக்கிறான். 'அவள் கன்னங்களில் கருத்திழந்தவன், ''ரோசாமலர் இவள் கன்னத்தின் வண்ணத்திற்கு ஆற்றாது வெட்கி மேலும் சிவப்படைந்து விட்டது'' என்று கூறுகிறான்.

(The red rose blush at her own disgrace) இருவரும் உவமையணியை யாண்ட வகைவன்மைக்கு இன்னொருதாரணம் பார்ப்போம்.

தலைமகளிடத்து மாந்திய ஐம்புல நுகர்ச்சியை எண்ணி மகிழ்ந்து பாராட்டுகிறான் தலைமகன். நூல்களைப் படிக்க அறியாமையே மேலிடுகிறது. அதுபோல இப்பெண்ணிடத்து இன்பம் நுகர, நுகர புதிது புதிதாக இன்பம் தோன்றுகிறது.'' என்று கூறுகிறான் தலைமகன். வள்ளுவர் ஆண்ட உவமைச் சிறப்பு எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இறும்பூது பயப்பது [மாணிக்கவாசகரும், திருக்கோவையாரில் 'புணர்ச்சியில் மகிழ்தல்' என்னும் கிளவியில்,

''குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடைத் தோட் புணர்ந்தாற் புணருந்தோறும் பெரும் போகம் பின்னும் புதிதா'' யிருந்ததாகத் தலைவனைப்பாராட்ட வைக்கிறார்.

அறிதோ றறியாமை கண்டற்றே
காமம் செறிதோறும் சேயிழை
மாட்டு

எகிப்திய நாட்டு இளவரசி கிளியோபத்ரா அவளிடத்து மாபெரும் போர் வீரனான அந்தோனி தான் கண்ட இன்பத்தைக் கூறும் போது வள்ளுவரின் தலைவன் கூறிய கருத்தையே வெளியிடுகின்றான்.

Age cannot wither her
Nov custom stale her
infinite variety
Other women cloy the
appetite they feed
But she makes hungry
when she most satisfies

இறுதியாக இருவரது நூல்களிலும் காணப்படும் தத்துவத்தைச் சிறிது ஒப்பு நோக்கி முடிப்போம்வள்ளுவர்ஒழுக்கநெறிகாட்டவே நூலை ஓதினார். அதுவெறும் சன்மார்க்க போதனையன்று நல்வாழ்வுக்குரிய நடைமுறைக் கொள்கையே நூலில் வலியுறுத்தப்படுகிறது. இல்லறத்தார் கடமைகள் அரசியலார் கடமைகள் ஆதின தெளிவாகப் பேசப்படுகின்றன. உலக இன்பங்களை அறநெறியை மீறாது அனுபவிப்பதற்குத் தெளிவான வழிவகைகள் கூறப்படுகின்றன. என்றாலும் வள்ளுவருடைய நோக்கம்,இவற்

## ஜனாதிபதியும் வீதியும்

உலகின் முக்கிய மனிதன் எனக் கணிக்கப்படும் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் தனது இளம் வயதில் வீதி போடும் வேலையில் ஈடுபட்டிருந்தாராம். தனது சொந்த நகரான 'டெக்ஸாலி'ல் ஒரு வீதியைக் காட்டி 'நான் போட்ட ரோட்டு' என்று கூறிப் பெருமைப் படுகிறாராம் அவர்.

★

## இஸ்ரேலும் அரபு நாடுகளும்

உலக நாடுகள் முக்கியமாகக் கவனித்துக் கொண்டிருக்கும் 'மேற்காசிய' பிரச்சினை போராகக் கிளம்பி தற்போது நின்றிருப்பது யாவரும் அறிந்ததே. இப்பிரச்சினை கடந்த இருபது வருடங்களாக ஏற்பட்டுக் கொண்டாலும், தற்போது போராகக் கிளம்பியிருக்கிறது. அரபுநாடுகள் எகிப்து ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான், சிரியா போன்றவை இஸ்ரேல் என்று ஒரு நாடு இருப்பதை அங்கீகரிக்கவில்லை. என்னவாயிருந்தாலும் தற்போது நடந்த போரில் 'இஸ்ரேல், தனது நாட்டைப்போன்று மூன்றுமடங்கு விஸ்தீரணமுள்ள இடத்தைப் பிடித்துள்ளது. இனிமேலாவது 'இஸ்ரேல், என்ற பலம் பொருந்திய நாடு ஒன்று இருக்கிறதை ரபுநாடுகள் ஒத்துக் கொள்ளுமா?

தகவல் : யோகன்

ரோடு மக்கள் நின்று விடவேண்டு மென்பதன்று. வீடு பேறு பற்றி அவர் தனி அதிகாரம் வகுத்துக் கூறுதொழிந்தாரேனும் அதுவே அவரின் குறிக்கோளாகும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு"

என்ற அவருடைய குறளே இதற்குச் சாட்சி.

செகப்பிரியரும் அவ்வாறே உலக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் படம்பிடித்துக் காட்டி, அவற்றினூடே நல்வாழ்வு அமைய வேண்டுமென்பதை விளக்கியுள்ளார். துன்பத்தின் முடிவிலும் தீய சக்திகளின் ஊடேயும் நன்மையைக் காணலாம் என்பது முடிந்த முடிபாகும்.

(There is a soul of goodneess in all things evil)

செகப்பிரியர் ஒரு உலகாயுதர் என்பவர்களுக்கெல்லாம் சாட்டையடி கொடுக்கிறார். இவ்வார்த்தைகளில்,

There are more things in heaven and earth
Than are dreamt of in your philosophy

உலக வாழ்வியல் காட்டியமைந்தவர் செகப்பிரியர். வாழ்வியலூடே மெய்யுணர்வின் மேன்மையைக் காட்டி மெய்யுணர்வே வேண்டப்படுவது என அறுதியிட்டவர் வள்ளுவர். ஞானி என்ற வகையில் செகப்பிரியரினும் வள்ளுவர் மேலானவர் என்றே கூற வேண்டும்.

ஆரா இயற்கைஅவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கைதரும்.

★

சிறுகதை

# மெழுகுவர்த்தி



அம்மா! நினைக்க நினைக்க நெஞ்சே வெடிக்கும் போலிருக்கிறதே அடிவயிற்றைக் கத்தி கொண்டு குடைவதுபோல் வேதனை செய்கிறதே அம்மா! வேதனை செய்கிறதே!...... ஏன் அம்மா எங்களை மறந்து சென்று விட்டாய்?

ஐந்து மாதங்களுக்கு முன் திடு திடுப்பென்று ஒரு நாள் மூட்டை கட்டிக்கொண்டுமட்டக்களப்பிலிருந்து புறப்பட்டுக் கொழும்புக்கு வந்தாயே தள்ளாததேகத்துடன். அப்பொழுது உங்கள் மனத்தில் என்னென்ன எண்ணங்கள் இருந்தன என்பது எங்களுக்குப் புரியாமல் போய் விட்டதே! இப்பொழுது புரிந்து கொண்டு கதறுகிறோம் அம்மா! உனக்குத்தான் எவ்வளவு வைராக்கியம்...

நீ எப்போதுமே இப்படித்தான் அம்மா; உன் பக்கம் எங்களை இழுத்து விடுவாய். உன் கொள்கைகளில் எதை எதிர்த்து எங்களால் வெல்ல முடிந்தது? இறுதியில் உன் கொள்கைகளுக்கு நாங்கள் பணிந்து போனபோது எங்களுக்கும் வெற்றிகிடைத்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டதே. அது எப்படி? உன் சக்தியை நினைத்தால் மலைப்பாயிருக்கிறது. இப்போது எண்ணிப் பார்க்கும்போது இதோ எங்கள் முன் தெரிகிறதே இந்தப் பெருங்கடலின் அளவுக்கு உன் விவேகமும், தியாகமும், திறமையும், பாசமும், அன்பும் விசாலமானவை. ஆழமானவை என்பதை உணர்ந்து மெய்சிலிர்க்கிறோம் பசிபிக் சமுத்திரத்தையும்விட உன் உள்ளம் ஆழமானதம்மா, ஆழமானது!...

இல்லறத்தையே துறவறமாகக் கொண்டு நீ நடத்திய குடும்ப வாழ்க்கையை நாங்கள் அறியமாட்டோமா? அம்மா நாங்கள் உன் குழந்தைகளல்லவா. உன் அறிவாற்றலில் ஒரு சிறு பகுதி கூட எங்களுக்கு இல்லாமலா போய் விடும்? அப்போது நீ பட்டதுன்பங்களை நீயாகச் சொல்லமாட்டாயென்றாலும் எங்களுக்கு ஊகிக்கும் திறனில்லையா? இல்லறத்திலேயே சுவர் மேல் சுவராக எழுப்பி நீ குழந்தைகளோடு தனித்துப் போய் விட்டபோது 'சிவனொளிபாதமலை' அத்தனை வைராக்கியத்துடன் அடுத்தடுத்து எத்தனையெத்தனை புறச்சின்னங்களைத் துறந்து விட்டாய்.

அணிவதற்கு காப்புகளோ வேறுநகைகளோவேண்டாம். சூடுவதற்கு மலர் வேண்டாம். பூசுவதற்கு பொருள்கள் வேண்டாம். உடுப்பதற்கு பட்டாடையோ புத்தாடையோ வேண்டாம். என்று ஒவ்வொன்றாக விடுத்து, வெறும் நூலிலே மஞ்சளைப் பூசிக் கட்டிக் கொண்டாயே அம்மா! இந்தத் தியாகத்தை உன்னைத்தவிர வேறு யார் செய்யப் போகிறார்கள். இத்தனையிலும் மனக்கசப்போ,

ஆரையம்பதி ஆ. தங்கராசா

உயிர்மேல் வெறுப்போ சற்றும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு யாரையும் எந்தக் கட்டத்திலும் காட்டிக் கொடுக்காமல் எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களை ஆளாக்கி நிறுத்திவிட்ட உனக்கு என்ன கூறி நன்றி செலுத்துவோம் அம்மா!

அந்தக் கொடிய அனுபவங்களின்போது எந்தக் கட்டத்திலாவது நீ தளர்ந்து போய் உன் தன்னந் தனியான போராட்டத்தைக் கைவிட்டிருந்தால் நாங்களெல்லாரும் இன்று எங்கேயிருப்போமோ? உன்திறமையால் அல்லவா, என்னை ஆங்கில ஆசிரியனாகவும், தம்பியைப் பட்டதாரியாகவும் ஆக்கிவைத்தாய். இத்தனைக்கும் உங்கள் கணவரை, எங்கள் தந்தையை இளம் வயதிலேயே பறிகொடுத்து விட்டீர்களாமே! கொடிய காட்டினூடே தொண்டர்களை இட்டுச் செல்லும் தலைவனைப்போல், வாழ்க்கைப் பாதையில் எத்தனையெத்தனை சோதனைப் படுகுழிகளையெல்லாம் சமாளித்து எங்களை நடத்திச் சென்றாய்.

வெயிலிலும், மழையிலும் அடிபட்டு புயல்போல் வீசும் 'கச்சான் காற்றுக்' காலங்களிலும் 'மண்முனைத்துறை' யைக் கடந்து கிழக்கு மாகாணத்தின் நெற்களஞ்சியமான 'படுவான் கரை'க்குப் போய்க் கைக்குத்தரிசி வாங்கிவந்து, அதைக் காத்தான்குடிச் சந்தையில் கொண்டு போய்விற்று அதனால் கிடைக்கும் இலாபங்களால் குடும்பத்தையும் நடத்திவந்து, எங்களையும் படிப்பித்து ஆளாக்கி விட்டாயே. அம்மா! நீ செய்த தியாகம் அளப்பரியது அம்மா! அளப்பரியது! அப்போது நீபட்ட மன உபாதைகளையும், உடல் உபாதைகளையும் வெளியில் சொன்னதுண்டா?

நீ தியாகத்தின் வடிவம் அம்மா! வாழ்க்கையில் உன் தேவைகளை எப்படியெல்லாம் குறைத்துக் கொண்டாய். உன்னால் யாருக்கு என்ன செலவு. கிழமை உபவாசம் என்று ஒருத்தர் வாழ்ந்தால் என்னசெலவு? ஏகாதசி, சூரன்போர்க்கிழமை, ஆவணி ஞாயிற்றுக்கிழமை, புரட்டாதிச் சனிக்கிழமை, கார்த்திகைக் கிழமை வெள்ளிக் கிழமை, சிவராத்திரிக் கிழமை............ இப்படிக் கிழமை கிழமை என்று விரதம் பிடித்து வந்தாய். விரதம் என்றால் சாதாரணமா? சூரன் போர்க் கிழமைக்குச் சாப்பிடுவதே கிடையாது. அந்த ஆறு நாளைக்கும்வெறும் 'மிளகை' விழுங்கிப் பச்சத் தண்ணீரைக் குடித்துக் கொள்ளுவாய் காந்தியளவுக்கு உறுதியான கொள்கை காட்டி எங்களை மடக்கி விடுவாய்.

'படுவான் கரை'க்குப் போய் அரிசி வாங்குவதை நாங்கள் உத்தியோகம் எடுத்துக்கொண்ட பிறகும் விட்டாயா? நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் நீ கேட்டாயா? "அதுதான் நம்மிட குடும்ப மானத்தையே காப்பாத்தி உங்களை ஆளாக்கி விட்ட கடவுள்" என்று திரித்து எங்களை மடக்கிவிட்டு உன் வேலையைத் தொடர்ந்தும் செய்து கொண்டு வந்தாயே! எலும்புந் தோலுமாகத்தான் மற்றவர் கண்களுக்குத் தெரிந்

தாய். ஆனால் அம்மா! உன்னிடமுள்ள 'தைரியம்' மற்றவர்களுக்குத் தெரியுமா? ஒரு படம் கிடம், திருவிழா, தீர்த்தம் எது வென்றாலும் பார்க்கப் போவாயா? நாங்கள் எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்தாலும் வரமாட்டாயே! 'கந்தசாமி கோயிலடியில் கூத்தாடினால் மட்டும் இரவு இரவாய்க் கண் விழித்துப் பார்த்து விட்டு வருவாய். அதில் மட்டும் உனக்கு உற்சாகம் இருந்தது.

எனக்கும், தம்பிக்கும் கலியாணத்தைச் செய்வதற்கு நீ பட்டபாடு. கலியாணம் முடிந்ததும் அந்த நிறைவிலே நீ பூரிப்புக்கண்டு மகிழ்ந்த மகிழ்வு. அம்மா! நீ எங்களுக்காக வாழ்ந்தாய். மற்றவர்களுக்கு ஒளியைக் கொடுத்துத்தான் அழிந்துபோகும் 'மெழுகுவர்த்தி' போல் எங்களுக்காக உன் உடலையும் ஆத்மாவையும் அழித்து, எங்களைக் கண்ணீர்க் கடலில் நீந்தும்படி விட்டுவிட்டு எங்கோ கண்காணா உலகத்துக்குப் பறந்து சென்று விட்டாய்.................. இல்லையம்மா! இல்லை! நீ பறந்து போகவில்லை. எங்கள் சுவாசத்தில் சுவாசமாய் நிறைந்து கிடக்கிறாய்.

முதுமைக்கும், எங்கள் தாய்க்கும் சம்பந்தமில்லை என்று நாங்கள் பெருமைப்பட்ட நாளெல்லாம் போய். நீ இறுதியில் படுத்த படுக்கையாகி விட்டாயே!............... இதென்ன கொடுமை அம்மா!

முந்தின நாள் மாலை சோறு, கறியாக்கி எங்களுக்குத் தந்த நீயா, மறுநாள் காலையில் அப்படிக் கிழித்துப் போட்ட நார் மாதிரிப் படுத்துவிட்டாய்? முந்தின நாள் பேசின ப்பேச்சுத்தான் கடைசிப் பேச்சு என்றாகி விட்டதா? அறுபதாண்டு காலம் எண்ணத்தாலும், வாக்காலும், செயலாலும் பிறருக்காகவே வாழ்ந்து உனக்குக் களைத்து விட்டதா? அதனால் தான் படுத்து விட்டாயா அம்மா?

'டாக்டர்' வந்து பார்த்தார்.

''என்னம்மா, கண்ணையே மூடிக் கொண்டு விட்டாய்? களைப்பா?''...........அம்மா? ஏனம்மா குழறினாற் போலப் பேசினாய்? ஐயோ! அதென்ன பார்வை! அதில் எத்தனை பயங்கர அறிகுறிகள்......

என் மனைவி அருகில் வந்து காதோடு ''ஐயோ எனக்கு ஒரே பயமாயிருக்கிறது' என்று சொல்லி அழுதாள். எல்லோரும் தேம்பியழுது கொண்டு நின்றோம். நான், தம்பி, எனது மனைவி, தம்பியின் மனைவி, எங்களது பிள்ளைகள் எல்லோரும் உன் 'சந்நிதியில்' நின்று வணங்கினோம்.

அம்மா! என்னை அவதிப்பட்டு இழுத்தணைத்துக் கொண்டு காதுக்குள் என்னவோ குசுகுசுத்தாய். என் மனநிலையில் அப்பொழுது ஒன்றுமே விளங்கவில்லை.

தூரத்திலிருந்து கோயில் மணி ஓசை துல்லியமாகக் கேட்டது. அதிகாலை நேரம்! பேசிக் கொண்டிருக்கும் போதே குரல் மங்கி அடங்கி விட்டது. புகையிரத நிலையம் வந்தவுடன் 'புகையிரதம்' 'புஸ்' என்று ஓர் ஓசையுடன் நிற்குமே, அது மாதிரி ஊர்வந்து சேரும் நெடுந்

தூரப் பிரயாணி அவசரம் அவசரமாக இறங்கிச் செல்வது போல் நீ உன் உடலை விட்டு இறங்கிச் சென்று விட்டாய். நீ துறந்த இன்பங்கள் ஒன்று, இரண்டா? அதனால்த்தான் உனக்கு இந்த அற்ப உயிரை விடுவது பெரிய காரியமில்லை என்று காட்ட முடிந்ததா? .....

அம்மா! என் பொன்னுன தாயே! உன்னைச் சுட்டுச் சாம்பலாக்கி விட்டோம். அந்தச் சாம்பலைக் கடல் நீரில் சேர்க்கும் போது, ஐயோ! நினைவு அலை ஒன்று திடீரென்று வந்து மனதைத் தாக்குகிறதே! நீ கொழும்புக்கு வந்து சேர்ந்த நாள் முதல் படுத்த படுக்கையாகும் வரை எத்தனை தடவை உன்னை நான் 'காலி முகக் கடற்கரைக்கு' அழைத்தேன்! ''போகலாம், ஒரு நாள் ஆறுதலாய்ப் போய் நிறைய நேரம் அங்கேயே இருந்து புதினம் பார்க்கலாம்'' என்று தட்டிக் கழித்துக் கொண்டு வந்தாயே, இப்படி ஒருநாள் வந்து நிரந்தரமாக இங்கேயே தங்குவதற்காகத் தான் அப்படிச் சொன்னுயா?........இதோ வீடு திரும்புகிறோமே எங்களுடன் நீ வரப்போவதில்லையா?..........

ஐயோ, மெய்யாகவே இங்கே தான் நிரந்தரமாகத் தங்கிவிடப் போகிருயா?...........

அம்மா!...அம்மா!!... அம்மா...!

★

**வண்ணத்தேயிலை :–**

சோவியத் யூனியனில், ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு நல்ல மதிப்பு உண்டு. ஈழத்து தமிழ் சிங்கள எழுத்தாளர்களின் பல படைப்புகள், ரஷ்ய மொழியில் வெளிவந்துள்ளன. கடந்த இரு வருடங்களுக்கு முன்பு. 'வண்ணத்தேயிலை'' என்ற சிறுகதைத் தொகுதியொன்று, குணதாஸ அமரசேகரா, மார்ட்டின் விக்கிரமசிங்கா, செ. கணேசலிங்கன், கனக. செந்திநாதன், கே. டானியல், என். ரத்னபாலா, ஜி. பி. சேனநாயக்கா ஆகிய ஈழத்து தமிழ் சிங்கள எழுத்தாளர்களின் சிறுகதைகளை உள்ளடக்கியதாக வெளிவந்தது.

இச் சிறுகதைத் தொகுதியில், இடம்பெற்ற, சைக்கிள்; நண்பர்கள்; நாசம்; ஒரே இனம்; யாருடைய அன்னத்தை தின்ருய்?; தென்றல்; காதல்; சுபமாக முடியும் யாவும் சுபமே; பிறப்பு; ரகசியம்; தந்தை; புத்தாண்டின் புது முகத்தில்; பெண்; ஆகிய சிறுகதைகள், சோவியத் மக்களை குறிப்பாக, சோவியத் இலக்கிய ரசிகர்களை, மிகவும் கவர்ந்து விட்டன.

# எங்கும் இனிக்க எழும்பு

'அண்ணல்'

சித்திரையில் வந்து சினந்த பரிதியுனை
மெத்தப் பகைத்தேனே வேதனைதான்-இத்தனைக்கு
ஏதென் றெடுத்தே எழும்பும் புது வருடம்
தோதாக்கித் தொண்டு தொடர்

பழையன நீக்கிப் புதியன வாக்கும்
நிலையினை நீ செய்தல் நேர்மை-குழைவாகி
புத்தம் புதிய வளமும் கலைகளுமாய்
சித்திரையோ டெங்குந் தெளி

இலைகள் சருகாக்கி ஈரம் போய் நின்ற
நிலையில் மரங்களது நெஞ்சம்—பிழையேதான்
செவ்வரணை போல சிவந்த தளிரிலைகள்
கவ்வக் களிக்கும் மரம்

பூக்கும் புது வருடம் பூரிக்கும் இவ்வுலகும்
ஏக்கம் தலையை எழுப்பாது-காக்கின்ற
நற் கடமை பூண்டு நலஞ் செய்வாய் சூரியனே
கற்கண்டும் பாகுங் கலந்து

கூவிக் களைத்த குயிலந்தச் சோலையிலே
தாவி வசந்தச் செழிப்பீய்ந்த—பூவினிலே
தேனள்ளித் தின்று திரிய வகை செய்தாய்
வானத்து வாழும் வளம்

வண்டெழுந்தே ஓசை வளங்காட்டி வாயூடே
கொண்டு வரும் தேனை கொடிகளிலே—நின்றுடும்
பூக்கள் வசந்தப் புதுச்சேர்க்கை புத்தாண்டில்
ஏக்கம் எழும்பா தினி

எங்கும் வசந்த மிருக்கும் மலர்கனிகள்
பொங்கும் புதிய வருடத்தில்—எங்களது
அங்க மொத்தவனே ஆதவனே ஆறுதலே
எங்கு மினிக்க எழும்பு

# பயணம்

—இ. இராசரத்தினம்—

பொழுது தலைக்கு மேலே நின்றது. மணி பன்னிரெண்டுக்கு மேலே இருக்கும்.

கணவனைப்பயணம் அனுப்புவதற்காக, வேளையோடு சமையலை முடித்துவிட்டுக் கணவனுடன் கூடவே துணிமணிகளைப் பெட்டியில் அடுக்கிக்கொண்டிருந்தாள் பாக்கியம்.

அவளது கணவன் இரத்தினம் ஊரைவிட்டுப் புறப்படுவதற்கு இன்னும் சில மணிநேரங்களே இருக்கின்றன. இதற்கிடையில் அவன் புறப்பட்டால் தான் குறிப்பிட்ட திகதியில் ஒப்புக்கொள்ள வேண்டிய வேலையை ஒப்புக்கொள்ளலாம். சற்றுப் பிந்தினுல்கூட பிடிக்க வேண்டிய ரயிலைத் தவற விட்டு விடுவான். பிறகு...? பிறகு...?

பிரயாணத்திற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகள் முடிந்து விட்டன. எல்லாம் 'றெடி'.

இரத்தினம் சூட்கேசைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். பாக்சியம் இடுப்பில் இருந்த தனது குழந்தையுடன், தோல்ப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு படலைவரை சென்று அதைக் கொடுத்தாள்.

தோல்ப் பையைக் கையில் வாங்கிக் கொண்ட இரத்தினம், அதைத் தோளில் போட்டுக் கொண்டு மனைவியின் இடுப்பில் இருந்த குழந்தையின் முகத்தைச் செல்லமாக வருடிவிட்டுக் கொண்டே கேட்டான்.

''அப்பாவுக்கு டாட்டா சொல்லடி''

''... ... ... ...''

திரும்பவும் கேட்டான்; ''பிள்ளைக்குப் பயணத்தாலை வரேக்கை விசுக்கோத்தும்இனிப்பும் வாங்கி வருவன் அ பாவுக்கு டாட்டா சொல்லடி''

'அ..ப்..ப..ட த்..ஆ'

மழலை மொழியில் குழந்தை இழுத்துப்பறித்துச் சொல்லி முடித்தபோது, பிஞ்சு முகத்தில் சலனமற்ற மெல்லிய சிரிப்பின் ரேகைகள் ஒளியிட்டு நெளிந்தன.

குழந்தையை அணைத்து முத்தமிட்டுக்கொண்டே, இரத்தினம் கடைக்கண்ணுல் மனைவியைப் பார்க்கிருன். அவளது முகத்தின் பிரிவுத் துயரின் வேதனை அப்படியே அப்பிக் கிடக்கின்றது. ஆனுலும் அதை மறைக்க முனைந்து .. அவள்பட்ட அவஸ்தை!

அவன் அதைப் புரிந்து கொண்டு, மனைவியைச் சிரிக்கப் பண்ணுவதற்காகக் குழந்தையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ''போன உடனே கடிதம் போடுறன். குழந்தையைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்'' என்று சொல்லிவிட்டுத் தெருவில் இறங்கி நடந்தான்.

படலையில் நின்றபடி கணவனையே பார்த்துக் கொண்டு நின்ற பாக்கியம், அவனது உருவம் கண்ணில் இருந்து மறைந்த பின்புகூட தன்னை மறந்த நிலையில் சில நிமிடம் நின்று விட்டாள்.

கணவனது உருவம் கண்ணில் இருந்து மறைய, மறைய பாக்கியத்தின் நெஞ்சில் கணவனை

விட்டும் பிரிந்த துயரத்தின் வேதனை சுமையாக நெஞ்சை அழுத்தியது!

ஆனாலும் அவள் அளவில்லை. அழுதுகொண்டிருந்த குழந்தைக்குச் சிரித்துக் கொண்டே மார்புச் சட்டை ஊசியைக் கழற்றி பால் கொடுத்தாள்.

குழந்தை மலைக்காம்பை வாயிற்குள் வைத்துக் குதப்பிக் கொண்டே, தன் பிஞ்சுக்கால் களை உயர்த்தி தாயின் நெஞ்சில் உதைத்தும், கைகளால் சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டும், சிரித்துச், சிரித்து விளையாடியது.

வாயிற்குள் முட்டிப் பிதுங்கிய பால் கடைவாய் வழியாக வழிந்து கொண்டிருந்தது.

நெஞ்சில் முளையிட்ட பிரிவுத் துயரத்தின் வேதனையைக் குழந்தை பிடுங்கி எறிந்து... இப்போ பாக்கியத்தின் நெஞ்சுக்குள் நிறைந்திருப்பது மழலை இன்பம்!

அழநினைத்தவள் அழும் குழந்தையைத் தேற்றுவதற்காகச் சிரித்தாள். அழுத குழந்தை சிரித்ததைக் கண்டு அவள் அழுவதையே மறந்து விட்டாள்.

இப்படிக் குழந்தை நாள் முழுவதும் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தால் பாக்கியம் கணவனையே மறந்து விடுவாளா?

சிரித்துச் சிரித்து விளையாடிக் கொண்டே, பால் குடித்துக் கொண்டு தன் உறங்கியகுழந்தை விழித்தபோது சிணுங்கிச், சிணுங்கி அழுதது!

அழுத குழந்தையை அணைப்பதற்குத் தூக்கி எடுத்தபோது பாக்கியம் பதறிப்போனாள்.

குழந்தையின் தேகம் அனலாய்ச் சுட்டது!

கணவனைப் பிரிந்துதுயருற்று இருந்தபொழுதுதான் சிரித்துச், சிரித்து தாயைச் சிரிக்கப் பண்ணிய குழந்தை இப்போ...?...

''குழந்தைக்கு நெருப்புக் காய்ச்சல்''

டாக்டர்களது வார்த்தை ஊசிமுனையாகி பாக்கியத்தின் தாய்மை உள்ளத்தை நெருடியது

இதற்கிடையில் எப்படியோ ஐந்து நாட்கள் ஓடி மறைந்து விட்டன.

அவள் பொறுக்க முடியாது துவண்டாள் துடித்தாள். ஆனாலும் பலனில்லை எது நடக்கக் கூடாது என்று இறையை இறைஞ்சினார்களோ, அதுவே முடிவாக முடிந்துவிட்டது.

'இனி... ஐயோ'

சவக்குழிக்குள் குழந்தையின் சடலம் வைக்கப்பட்டிருக்கிறது.

சுற்றி நின்றவர்களில் யாரோ ஒருவர் இரத்தினத்தைப் பார்த்துச் சொன்னார்; ''தம்பி இனிக்கவலைப்பட்டு என்ன செய்யிறது. அளந்தது அவ்வளவுதான் உரிமைக்கு ஒருபிடி மண் அள்ளிப்போடு!''

இரத்தினம் ஒரு பிடி மண் அள்ளிச் சவக்குழிக்குள் போடுகின்றான்.

அப்பொழுது!

அவனது நெஞ்சின் அடித்தளத்தில் ஒரு குரல்,—

'பிள்ளைக்குப் பயணத்தாலை வரேக்கை விசுக்கோத்தும்இனிப்பும் வாங்கிவருவன் அப்பாவுக்கு டாட்டா சொல்லடி'

கண்மடலில் விளிம்பு கட்டி நிறைந்து நின்ற கண்ணீர் மடை திறந்து விழுந்து சிதறித் தெறிக்கின்றது.

★



'மகாகவியின்'

# கலட்டி

### ஓய்வு

வெள்ளி நிலவு நெடு வானவழியில்
மெல்ல நடைபயில வலன தொரு நாள்-
புள்ளி அணையபல வெள்ளி மலர்கள்
பூத்துச் சொரிந்தன அவ் வானில் ஒருநாள்-
மெள்ள அயலினிலே வந்திளைஞரை
மேனி தடவியது தென்றல் ஒருநாள்—
நள்ளிர வானமையி னால், உலகமே
நன்று துயில்கிறது! நல்ல ஒரு நாள்.

"முல்லை விரிகிறது வேலியில்!" என
முந்தி மொழிய அதன் வாசம் உளது.
வல்லை வெளியில் அன்று திருவிழவு;
மழலை மொழி குழலில் வருகிறது!
கல்லில் அமர்ந்தினிய காட்சிகளிலும்,
காதில் விழுகிற அவ்வோசைகளிலும்
செல்லும் மனதில் ஒரு சிலிர்ப்படைந்து
செல்லையன் என்ற அவன் வீற்றிருக்கிறான்.

காட்டை அழித்த செயல் தன்னை நினைந்தான்.
கழனி அமைத்த செயல் தன்னை நினைந்தான்.
ஆட்டை அறுக்கிறது நின்ற துணர்ந்தான்.
அண்டிப் பிழைத்த சிலர் ஆறி இருக்க,
வீட்டை அவர்க்களித்த தன்மை நினைந்தான்.
வேறும் பல நினைவு பாய இருந்தான்.
"நாட்டை உயர்த்துவது நல்ல செயலே
நம்மால் எது முடியும்?" என்று குனிந்தான்.

### அழைப்பு

கண்மணி தனது கலட்டிக் குடிசையில்
படுத்திருக்கின்றனள் புரண்டு;
பாடல் ஒன்றுபண்ணோடு கேட்டதே:-
' மண்ணெண்ணெய் விளக்கருகில்

மணிபோலச் சிறுத்தெரிய,
விண்ணல்ல-புவியினில் ஓர் மின்னலே!
வீழ்ந்து துயில் புரிகிறதோ, தையலே?
பெண்ணல்ல- பெரும் அழகின்
பிறப்பிடம் என் பது தெரிய,
கண்ணல்ல-கயல் இரண்டேன் மூடினுய்?
காதலுக்கு வழி அடைந்தேன் வாடினுய்?

''வெண்ணிலா வெறு வெளியில்
வெறிக்கிறதன் மது சொரிய,
புண்ணெலாம் உளத்திருக்கும் போதிலே,
புரளுகிறதோ சிறுபாய் மீதிலே?
''உண்ணலாம்! உடல் துவள
உறங்கிடலாம்!" என உனக்கோர்,
எண்ணமாம் எனில் இது நன்ருகுமோ?
ஏங்கும் ஒருவனே அணைந்தால், நோகுமோ?

''வெண்ணெய் போல் உடல் உனக்கு!
வெளி உலகு துயில் கிடக்கு;
தண்ணியோ கிணற்றிலே! தாகமோ?
தனிமையிடை யே கிடந்தால், போகுமோ?
எண்ணெயோ முடிகிறதே!
எரிவிளக்கோ அணைகிறதே!
புண்ணியம் பழி அறிவாய்; போ அம்மா!
புள் எழுப்பி நின்றனன், போய்த் தாவம்மா!"

ஒன்றிப்பு

சேலே ஒன்று சரசரப் புற்றது.
திறப்பும் பூட்டும் கறகறப் புற்றன.
வேலியோ கறையான் படர்ந் துள்ளதால்,
மெள்ளமாக அம்மண் உதிர் வுற்றது.
வாழை நட்டுள பாத்தியில் ஈரமாம்;
வைத்த காலிற் சள சளப் புற்றது.
மூலே ஒன்றினில் ஓலேக் கிடுகினே,
முன் விரிக்க, அது நெரி வுற்றது:

பேசுகின்ற இரு குரல் கேட்டன
பிறகு கொஞ்சும் சிரிப்பொலி கேட்டது.
'யோசியுங்கள்'' எனுப் சொல் குதிந்தது.
''யோகம் இன்று!'' எனும் சொற்கள் தொடர்ந்தன.
''வாசியுங்கள்!'' என ஒரு யாழினே
வைக்கத் தந்தி அதிர்வது போலவும்,
ஆசை ஒன்று அலுவற்படல் போலவும்,
அங்கு சிற்சில ஓசை விளேந்தன.

மெய்யி லே சிலிர்ப் பொன்று நடுங்கவும்,
வேறுபட்ட நிலை சென்றெடுங்கவும்,
''தையிலே சடங்கு'' என்று புகன்றவன்
தாகம் ஒன்று தணித்தல் தொடங்கினன்!
கையிலே வளையல்கள் அனுங்கவும்'
கண்ணிலே பெருங் காதல் மினங்கவும்,
'ஐய நுண்ணிடை சென்று வணங்கவும்'
அன்பரோ டொரு நங்கை இணங்கினள்!

உடன்பாடு

செல்லையனை அவன் தந்தை ஒரு நாள்
''நில்லையா;'' என்றறிவை நிகழ்த்தச்,
சொல்லாடல் ஒன்று தொடர்ந்து நடந்ததே!

"இந்தப் படி நெடுக இருப்பது நல்லதல்ல;
இங்கே பல இடத்தில் கேட்கிறர்.
கந்தப்ப பிள்ளை மகள் கறுப்பி என் றாலும், அங்கே
காசு கிடக்குதென்று பார்க்கிறேன்!
சொந்தத்துள்ளே முடித்தால் தொந்தரவில்லை யன்றோ?
சொல்! அவள் மூக்கு முளிக் கோர் குறை
எந்தப் பயல் இயம்ப ஏலும்] சொல் ஏலும் என்றால்?''
என்று செல்லையன் தந்தை கூறினன்.

''அப்பு! கந் தப்பம்மானின் அவளோ அழகுடையாள்;
ஆயினும் என் மனம் அங் கேயில்லை!''–
''சுப்பர் மகன் செல்லப்பர் பெட்டை சுகுணவதி
சுந்தரி; சொல் ஓமெனச்; செய்யலாம்!''–
''இப்போ தவசரமோ? இன்றெரு நாள் உரைப்பேன்!''-
"இல்லை; அதற்கென்ன, சொல் என்னிடம்!
ஒப்புத் தருவை யென்றால் இந்த உலகினிலே
உள்ள சிறந்தவள் உன் காலிலே''–

"குப்பையிலும் கிடைக்கும் குன்றி மணிகள் என்பார்!''–
''கூறிவிடு, வெளியாய்க்; குற்றமா?
தப்புத் தவறு செய்தி ருந்தால் சரிப்படுத்தித்,
தக்க இடத்தினிலே கட்டலாம்''–
''அப்போதே கண்மணிக்கென் ஆணைகொடுத்து விட்டேன்
"ஐயோ இதென்னதம்பி?''–அப்பனின்
ஒப்பை இரந்து நின்றான் பிள்ளை; தகப்பன் உணர்ந்து
"ஓம்!''எனும் வேலை குரல் கம்மினன்.

கலட்டி இளைஞர் கழகம் ஓர் இரவு
பலப்பல பேசியும், பணத்தின்
நிலைமையை ஆய்ந்தும் நெடிதமர்ந்திருந்ததே ;
முத்தையன் என்ற இளையவன் ஒரு
முன்மொழி வோடும் எழுந்தனன்–சிலர்
தத்தம் தனிப்பயன் நாடியே-மனுத்
தன்மை இலாத புரிகிறார் !-கடை
வைத்துப் பிழைக்கிற வேளையில்-எங்கள்
மக்களை வாட்டி வதைக்கிறார்-முழுக்
கொத்தைச் சிறிது செய் துள்ளனர்-நிறைக்
குண்டுகள் தேய்த்துக் குறைத்துள்ளார் !
''பத்துச் சதத்துக்கு வாங்கலாம்–பொருள்
பட்டணத் துக் கடை எங்கணும்–எனில்
பித்தம் பிடித்தவர் போலவும்–தட்டிப்
பேச ஆள் அற்றது போலவும்-இரு
பத்துப் பதினைந் தென விலை–இவர்
பண்ணிப் பணத்தைக் குவிக்கிறார்-ஒரு
சத்த மிடாது நம் மூரவர்–தலை
சாய்த்துக் கடனுள் முழுகுவார் !
''ஒத்துழைப்பால் இந்தக் கீழ்நிலை–தனை
ஓட்டிட லாகும் ! 'என் றோதினன்–இவன்
புத்தகம் கூர்ந்து படிப்பவன்–எங்கு
பொல்லாங் கென் றாலும் பதறுவான்–சொல்வ
தத்தனை யும் செய லாக்கு மோர்-பெரும்
ஆண்மை நிறைந்தவன் ஆதலால்–அன்று
நித்திரை இன்றிக் கலட்டியார் மிக
நீண்டதோர் திட்டம் வகுக்கிறார்.

--அடுத்த இதழில் முற்றும்



# கந்தர் அம்மான்-செல்லாச்சி

கந் : அடியே ''பச்சை விளக்குப்'' படம் வந்திருக்குதாம் பார்க்கப் போவோமா?.

செல் : அப்பாடி நம்மட விளக்கைப் பார்க்க ஆள் இல்லாமல் இருக்கும் போது அவருக்கி ''பச்சை விளக்காம்''

ந. நல்லரெத்தினம்

செல்: இந்தக் காலத்துப் பெட்டையளெல்லாம் முதுகு, முழங்கால் எல்லாம் தெரியச் சட்டை போடுதுகளே!

கந் : இந்தக் கொடும் வெய்யிலிலே அதுகள் என்ன செய்யும் பாவம் .

கைதடி — சு. சிவபாலன்

---

கந் : கேட்டியா செல்லாச்சி நம்மட காத்தாப் போடியார்ர மகன் எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணலல்ல எண்டு நித்திரக் குளிசை போட்டுத்துப்படுக்காளும்?...

செல்: ஒவ்வொரு வருஷமும் எஸ். எஸ். ஸி. பாஸ்பண்ணுதவையெல்லாம் நித்திரக் குளிசையில போட்டுப் படுத்தா ஒரு வருஷத்தால பாஸ் பண்ணிய புள்ளயளுக்கெல்லாம் வலிய உத்தியோகம் கிடைக்கும்

கந் : நல்ல யோசினதான் செல்லாச்சி. இருந்தாலும் நம்மட காத்தாப் போடியார்ரமகன்பெயில்பண்ணின தெண்டுகவலப்படல்ல அவண்ட காதலிக்கு கொடுத்த உறுதி மொழி பிழைச்சுப் போச்செண்டு தான்-

செல்: ஓகோ?... அப்பிடியா இப்படியெல்லாம் பள்ளில தொடர்பு வைச்சா என்ன பின்ன...!

செல் : ஏன் பாருங்கோ!... அந்த மனுஷன் இந்த ரயில் கொழும்புக்குஎப்ப போய்ச் சேரும் எண்டு நெடுகிலும் கேக்குது...

கந் : அது... தயிர் முட்டி ஓட்டையாம்-முழுக்க ஒழுகுறத் துக்குள்ள போய்ச் சேர வேண்டுமாம் அதுக்குத்தான்.

யாழ்ப்பாணம் — ஜெயராசா

---

செல் : எங்கட மூத்தவன் காத்திகேயன் அல்லோ கண்ணுக்குப் போடுறதுக்கு ஒரு கறுத்தக் கண்ணுடி வேணுமாம். வெயிலுக்கு கண் கூசுதாம்.

கந் : அடி விசரி... உனக்கு விசயம் விளங்காது. கறுத்தக்கண்ணுடிபோட்டா, பொட்டையளேநேருக்கு நேரா நிண்டு பாக்கலாம் அதுக்குத்தான் கண்ணுடி.

யாழ்ப்பாணம் — வே. செல்லத்துரை


---

செல் எங்கட பெண்ணு எங்க நடனம் பயின்ருள்.

கந் : எல்லாம் கணவனே ஆட்டிப் படைச்சுப் பெற்ற அனுபவம்தான்.

கண்டி — வி. என் அருட்பிரகாசம்

---



அனுப்ப வேண்டிய முகவரி,

கந்தர் அம்மான், 29 கண்டி, வீதி யாழ்ப்பாணம்



# மீண்டும் மலரும் பூ



து. வைத்திலிங்கம

அம்மாவின் கடிதம் வந்திருக்கின்றது. இதற்கு முன்னும் கடிதங்கள் வந்திருக்கின்றன தான்! ஆனால் இது கொஞ்சம் என்னை சிந்திக்கவல்லவோ வைத்திருக்கின்றது. என் முடிவில்தானும்-தன் உயிர் தங்கியிருக்கின்றதாம்-என் முடிவு சரியில்லாவிடில் தான் உயிர் தரிக்கமாட்டாளாம்! அப்பப்பா இப்படியெல்லாம் கூறி என்னை விரட்டத் தொடங்கிவிட்டாளே இந்த அம்மா! நான் அவளின் செல்லப்பிள்ளை என்றதும்-இந்த மிரட்டலுக்கு எடுபடுவேன் என்று எண்ணிவிட்டாள் போலும்.

ஆயிரம் வெண்பூக்கள் அணிவகுத்துவருவதுபோல் - நுரைகக்கிக்கொண்டு அலைகள் வந்து மோதின. கல்லின்மேல் உட்கார்ந்திருந்த என்மேல் கடல்நீர் சிதறத்தான் செய்தது.

கூ............ ..கூ ..... .........

இருந்தாற்போல், சுற்றுப்புறங்களை புகைமயமாக்கியபடி பூதம்போல் ஓடி மறைந்தது காலிக்குச் செல்லும்கடுகதிப் புகை வண்டி.

என் நினைவுகளும் தறிகெட்ட குதிரையாகி......

பொலிஸ் இன்ஸ்பெக்டராய் இருக்கும் என்னை இச்சம்சார சாகரத்தில் தள்ளிவிட பல புண்ணியவான்கள் முனைந்தனர். பல இடங்களில் இருந்து பெண்பேசி வந்தனர். என்ன காரணத்தாலேயோ நான் எல்லாவற்றையும் தட்டிக் கழித்துக்கொண்டே வந்தேன்.

இப்படியே பிரம்மச்சாரியாகவே வாழ்க்கை முழுதும் இருந்துவிட்டால் என்ன என்று என்னுள் ஒரு உணர்வு! ஏன் என்று எனக்கே விளங்காத நிலை.

''டேய் ரகுநாதா, இலட்சியம் இலட்சியம் என்று வாழ்க்கை வீணாகப் பாழாக்காதே!" இது நண்பன் பாலு அடிக்கடி கூறுவான். அவனுக்கு வேலைக்கே திருமணமாகி-இப்போ அவன் ஐந்து குழந்தைக்குத் தந்தை! நான் மௌனமாகச் சிரித்து மழுப்பிவிடுவேன். ஆனால் விடுமுறையில் வீட்டுக்குப்போனாலோ......

''டேய் ரகுநாதா ஏனடா இப்படி வீண் பிடிவாதம் பிடிக்கிறாய்? நான் சாவதற்கு முன் உனக்கு கல்யாணம் செய்து பார்ப்பேனோ? என்னவோ?

—இது அம்மாவின் புலம்பல். அம்மாவின் தொணதொணப்புக்குப் பயந்தநான் அடிக்கடி ஊருக்குப் போவதையே நிறுத்திக் கொண்டேன்.

மற்றவர்களைப் பற்றி இழிவாகப் பேசும் கலையை இந்த உலகம் எவ்வாறுதான் விருப்புடன் கற்றுக் கொண்டதோ? உலகத்தின் வாயை மூடுவது அவ்வளவு சுலபமல்ல?

''அவனுக்கு கொழும்பிலை ஏதோ தொடுப்பாம்.!''

"இவன் ரகுவுக்கு ஏதோ சரியான வியாதியாம்! அதுதான் கல்யாணம் வேண்டாமாம்!"

என்னை நேரில் பரிசோதித்த டாக்டரே கூறுவதுபோன்ற வைத்திய 'நற்சாட்சிப்' பத்திரம் இது!

"ஓமணை ஓ்ம்! அவன் பொலிசு உத்தியோகம். கண்ட கண்ட இடங்களிலை உத்தியோகம் பார்த்தவன். என்ன கருமத்தைத்தேடினனோ"! இதுபக்கத்து வீட்டு சுப்பம்மாவின் நற்சாட்சிப் பத்திரம். பாவம் அவள்

அவளின் மகள்

பாக்கியநாதன், கண்டிக்குப் பக்கத்தில் அப்போதிக்கரியாய் வேலைபார்த்தவன். கொஞ்சம் சபலபுத்தி கொண்டவன். மனம் போன போக்கில் தன் இச்சைப்படி நடந்து ஏதோ நோயால் பீடிக்கப்பட்டு அதற்கே கடைசியில் இரையாகி இரண்டாண்டுகள்தான் ஆகின்றன.

நரம்பில்லாத நாக்கு! ஊரில் வெற்றிலைபாக்கு வைத்து அழைக்காமலே கூடும் பெண்கள் சபையில் என்னைப்பற்றி இவ்வளவு பேச்சும் அடிபடும்.

என் காதுகளுக்கும் இவைகள் எட்டத்தான் செய்தது. நான் என்ன செய்ய முடியும்?

---

**சாகாத காதல்**

"உனக்கு மூன்று வயதில் ஒரு குழந்தையும் ஒரு வயதில் ஒரு குழந்தையும் இருக்கின்றன. அவ்வாறிருக்க நீ கூறுகிறாய், உனது கணவன் இறந்து ஐந்து வருடம் ஆகிறது என்று. ...அதிசயமாக இருக்கு .."

'நான் சாகவில்லையே?"

---

நிலவுக்குப் பயந்து பரதேசம் போகமுடியுமா? நான் ஆண். அலட்சியமாய் இருந்துவிட்டேன். ஆனல் அம்மாவோ!

தன் பிள்ளைக்கு கல்யாணமாகிக் கண்குளிரப்பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அவள், என்னைப்பற்றி இவ்வளவு கதைகளையும் கேட்டுச் சும்மாயிருப்பாளா?

என் மைத்துனனையும் துணையாக அழைத்துக்கொண்டு கொழும்புக்கே வந்து விட்டாள்.

"டேய் ரகு, நீ என்ன சொன்னலும் இந்த முறை நான் விடமாட்டேன். ஒரு நல்ல சம்பந்தம் வந்திருக்கின்றது. நீ என்னேடு யாழ்ப்பாணம் வா!"

அம்மாவின் பிடிவாதம் மற்ற முறைகளை விட, மிகவும் பலமாக இருந்தது. என்னல் தப்ப முடியவில்லை.

"பொறுத்தனீதானே அம்மா, இன்னும் கொஞ்சக்காலம் பொறுத்தால் என்ன? சம்பளமும் கொஞ்சம் கூட வரட்டுமே அதற்குப் பின் பார்க்கலாம்."

"அதெல்லாம் இப்ப எடுக்கிற சம்பளம் போதும் மறுபேச்சுப் பேசாமல் புறப்படு!

"நான் சொல்வதைக் கேளம்மா! இப்பொழுது கல்யாணம் அவசியமாகப் படவில்லை. என்னை ஏன் வீணகத் தொந்தரவு செய்கிறய்?"

நான் வார்த்தையை முடிக்கவில்லை. அப்பப்பா! அம்மா என்னைப் பார்த்த பார்வை!

"அப்படியென்றல், ஊரார் சொல்வது சரிதானே! ஏனடா உனக்கு இந்தப் புத்தி வந்தது? எங்கள் பரம்பரையில் இல்லாத வேலை........... !"

அவள் பேச்சை முடிக்காமலேயே விம்மினாள். எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. நான் சாக்குப் போக்குக் கூறி தட்டிக் கழிக்கவும், அம்மா ஊரார் கூறும் புரளிகள் உண்மையாய் இருக்குமோ என்று எண்ணிவிட்டாள். அவளைச் சமாதானம் செய்வது எனக்கு போதும்போது மென்றாகி விட்டது.

பின் என்ன? அம்மாதம் யாழ்ப்பாணம் திரும்பிய நான் பெண் பார்க்கும் வைபவத்தில் கலந்து கொண்டேன்.

''எணை அம்மா பெண் எப்படி? உனக்குப் பிடிச்சிருக்குதோ?''

காரில் போகும்போது தாயிடம் மெதுவாகக் கேட்டான் ரகு.

''ஏனடா வடிவாய்கேளன்- நீ ஒரு குறையும் சொல்ல முடியாது! லட்சணமான பிள்ளை எல்லாம் உனக்கேற்ற மாதிரித்தான் பார்த்திருக்கின்றேன்''

''படிச்சவதானே!''

''ஓ! எஸ் எஸ். சி. படிச்சவளாம்! அதுவும் கொழும்பில படிச்சவளாம்!''

ரகுவின் மனம் சிறகடித்தது 'நல்லவடிவு' கொழும்புப் படிப்பு தாயின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவனுக்கு இனித்தது. வாழ்வில் பங்கு பற்ற வரும் நங்கையைக் காணும் ஆவலில் உந்தித் தள்ளியது. எண்ணங்கள் அசைபோட பெண் வீட்டில் முன் ஹாலில் அமர்ந்திருக்கின்றான். கொடிபோல் அசைந்து வந்த பெண்ணை நன்றாக நோக்கினான். அவனின் இதயம் ஒரு முறை நின்றுதான் போயிற்று!

இவள்...... இவளை ரகு எங்கோ பார்த்திருக்கின்றானே! எங்கே..!அவனுக்கு ஒரே அதிர்ச்சி அவன் தான் அடைந்த அதிர்ச்சியினின்றும் தன்னை ஒரு மாதிரிச் சுதாகரித்துக் கொண்டான். அவனுக்குப் புரிந்து விட்டது. மனதில் ஒரு மூலையில் ஒரு மின்னல் கீற்று...!

தேகம் படபடத்தது. முகம். வியர்வைக் கடலில் மூழ்கியது. மிச்ச நேரத்தை முள்ளின் மேல் இருப்பவன் போல் கழித்தான்.

வீட்டுக்கு வரும்வரை தாயிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

''பெண் எப்படி? உனக்குப் பிடிச்சிருக்குத்தானே ;''

''என்னைக் கொஞ்ச நேரம் சும்மா இருக்க விடு அம்மா!''

ரகுநாதனின் குரலில் இருந்த அசாதாரணமான கோபத்தைக் கண்ட, அவனின் தாய் மௌனமாகி விட்டாள். வீட்டில் உள்ளயாவரும் தடுக்க அன்றே கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டான். ரெயில் வண்டி முன்னோக்கி விரைய, அவன் நினைவுகள்...... ..... .....

---

கடவுளே?

''என் அம்மா சொன்னதைக் கேட்டிருந்தால் உங்களை மணந்தே இருக்க மாட்டேன்''

''உண்மையாக உன் அம்மா தடுத்தாவா?''

''ஓம்...''

''ஓ... கடவுளே? அந்த மனிசியைப்பற்றி நான் எவ்வளவு பிழையாக எண்ணி இருந்தேன். எவ்வளவு நல்ல மனிசி...''

---

மூன்று வருடங்களுக்கு முன் "டேய் ரகு உத்தியோகம் உத்தியோகம் என்று சதா மாரடித்துக் கொள்கிறாயே ! ஒரு முறை என்னுடைய இடத்துக்கும் தான் வந்து போவன்"

மீரிகாமத்தில் டாக்டராக பிராக்டிஸ் செய்யும் ரகுவின் பால்ய நண்பன் ஜெயராசன் கொழும்புக்கு ரவியைக் காண வரும் போதெல்லாம் இப்படி அழைப்புவிடுப்பான் . அவனின் அழைப்பை தட்டமுடியாமல் ரகு, மீரிகாமத்துக்கு மூன்று நாள் லீவில் சென்றான்.

பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் செழித்து ஓங்கி இருந்த வயல்; சலசலத்துக் கொண்டு ஓடும் சிற்றாறு, வனப்பளிக்கும் ஓடைகள் இவையாவும் ரகுவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இதையெல்லாம் விட, அவனின் நண்பன் ஜெயராசன் கட்டியிருந்தானே, டிஸ்பென்சரி, அதன் வனப்புத்தான் அவனை மிகவும் கவர்ந்தது. சுற்றுப்புறங்களில் வாழையும் தென்னையும் அசைந்து சாமரம் வீச, அழகுத்தேவதை கொலு வீற்றிருப்பது போல, அவ்வளவு கச்சிதமாக அமைந்திருந்தது அந்த 'லக்ஷ்மி மருத்துவ நிலையம்'

அவன் அங்கு சென்ற இரண்டாம் நாள் மாலை, ஜெயராசனுடன், மருத்துவ நிலையத்துக்கு சென்றான். ஜெயராசன் உள்ளே அலுவலாய் இருக்க ரகு வெளியே வந்து சுற்றுப்புற அழகை ரசித்தபடி தோட்டத்தில் நின்றான். இருந்தாப்போல் பின்பக்கம் நோக்கியவன் திடுக்கிட்டான்.

"இவ்வளவு அழகான பெண் இங்கு இருக்கின்றாள்,' என்று இந்த ஜெயராசன் என்னிடம் சொல்லவில்லையே!" அவன் தன்னுள்ளே எண்ணிக்கொண்டான்.

அவளுக்குச் சுமார் பதினெட்டு வயதிருக்கும். அலைபாயும் கூந்தலும், காதளவோடிய காயாம்பூக் கண்களும், ஆளையே அள்ளி எடுக்கிறமாதிரி அழகும், ரகுவை ஒருகணம் கிறுங்க வைத்தது.

தோட்டத்தின் பின்புறத்திலிருந்து வந்தவள், ரகுவைக் கண்டு ஒரு கணம் தயங்கினாள். அவனின் குறும்புப் பார்வையும் அவளின் மருண்ட பார்வையும் ஒன்றையொன்று சந்தித்தன ஒரே ஒரு கணம்தான் அவள் சடாரென்று உள்ளே போய் விட்டாள்

"டேய் ரகு! எங்கே எல்லாம் உன்னைத்தேடுவது? இங்கே என்ன செய்கிறாய்? ஜெயராசனின் குரலால், அக்கன்னியின் நினைவிலிருந்தும் ரகு விடுபட்டான்.

டேய் ஜெயம் எனக்கு ஒரு வார்த்தை சொல்லவில்லையடா! அடா என்ன அழகு! அலைபாயும் கூந்தல், மானின் விழிகள், மதி வதனம் .."

ரகு, தன்னைமீறிய உற்சாகத்தில்பேசிக்கொண்டேபோனான்

"என்னடா இது பைத்தியகாரன் மாதிரி உளறுகிறாய், ஏதாவது பகல் கனவு கண்டாயா என்ன?" ஜெயராசன் இடைவெட்டிப் பேசினான்.

"நான் கனா காண இல்லை. எல்லாம் நேரிலேயே பார்த்தேன் பச்சைப்புடவைகட்டி நெற்றியில்

குங்குமம் இட்டு ஒரு இளம் பெண் இப்பொழுது, பின்பக் கத்து அறைவழியாகப் போன தை நேரில் பார்த்தேன்! அவள் யார்! அதைச்சொல்லுமுதலில்!''

மூச்சுவிடாமல் பேசி ஞேன் ரகு!

ஆனுல், ஜெயராசன் கூறிய பதிலோ...

ரகு துடியாய் துடித்துப் போனுன்.

ஜெயராசனின், ஆப்த நண் பர் ஒருவரின் மகளாம். கல்லூ ரியில் படிக்கின்ருள். இக்காலப் பெண்களுக்குத்தான் கல்லூ யில் நுழைந்ததும், காதலும் அவர்கள் உள்ளத்தில் புகுந்து விடுகிறதே! இப் பெண்ணும் அந்த வியாதிக்கு பலியாகி விட் டாள். அதன் பலன்... கல்யாண மாகாமலே எய்திய நிலை தாய்மை காதலன் குறுக்கு வழி யில் ஏதே வைத்தியம் செய்யப் போய் உயிருக்க்க ஆபத்தாய் வந்து, கடைசியில் ஜெயராச னின் மருத்துவநிலையத்தில்சேர்க் கப்பட்டாள். இப்பொழுதுதான் குணமாகிவருகிருள். கொழும்பில் இருந்தால் அந்த பெரிய இடத்து ஆட்களின் மரியாதை போய் விடுமாம். அதற்காக மீரிகாமத் துக்கு. கொண்டுவரப்பட்டா ளாம்.

ஜெயராசன் கூறிய விபரத் தைக் கேட்டதும், ரகுவின் உற் சாமம் போன இடம் தெரிய வில்லை. மொனமாகத் தயங்கிய படி நடந்தான்

தொப்பென்று, பக்கத்தில் நின்ற மாமரத்தில் நின்று ஒரு பழம் விழுந்தது. ரகு, கீழே குனிந்து அதைஎடுக்கப்போனுன்.



அவன் : நான் உன்னைக் காத லிக்கிறேன்.

அவள் : மணந்து கொள்கிறீர் களா?

அவன் : கதையை மாற்ருதே.

---

''ரகு அது அணில்கொந்தி விட்டது.அதை எறிந்து விடு!—'' ஜெயராசனின் குரலைத் தொடர்ந்து அதை கீழே வீசி விட்டுச் அவனைப் பின் தொடர்ந் தான் ரகு.

நெடுநாள்வரை அந்தஅழகு முகம் ரகுவின் மனதை விட்டு அகலவில்லை. என்ருலும் அவள் களங்கப்பட்டவள் என்ற எண் ணம் மட்டும் விசுவரூபம் எடுத்து அவளின் நினைவுகளை அழித்து விடும்!

ஆனுல் இன்ருே அந்தக் களங்கப்பட்டவளையே தன் எதிர் கால மனைவியாக்க அம்மா தேர்ந் தெடுத்திருக்கின்ருளே!

ரகுவுக்கு இதை எண்ணவே உடலெல்லாம் படபடத்தது. 'கசங்கிய மலர்...! என்மனைவி யாவதா...?'

—ரகுநாதன் முகத்தை கோணலாக்கிவிட்டுக் கொண் டான்.

'என்ன நடந்தாலும் தான் அப்பெண்ணை மணக்க முடியாது' என்று தாய்க்கு எழுதியும் விட்டாள். "அவளுக்கு என்ன குறை? அவள் மாதிரி ஒரு பெண்ணை வலை போட்டாலும் தேடமுடியாது! உடனே உன் சம்மதத்தைத்தெரிவித்துஒரு கடிதம் எழுது!"

"அவளை வேண்டாமென்றால் விடு! நீ யாரையும் காதலிக்கிறாயா? அதையாவது தெரிவித்துவிடன்! எத்தனை நாளைக்கு இப்படி இருக்கப் போகின்றாய்?"

–இப்படி அவளின் அம்மா அடிக்கடி எழுதத்தொடங்கிவிட்டாள். எல்லாவற்றுக்கும் ரகுநாதன் மௌனம்தான் சாதித்தான்.

மூன்று மாதங்கள் கழிந்துவிட்டன. இரண்டுநாட்களுக்கு முன், நூல் நிலையத்திலிருந்து "காந்தியும் அவரின் போதனைகளும்" என்ற நூலைப் படித்துக்கொண்டிருந்தேன். இருந்தாற்போல் திடீரென்று ஓரிடத்தில் என்பார்வைநிலை குத்தியது.

"ஒரு பாவமும் அறியாத அந்த இளம் பெண்களை நிர்கதியாய் விடக்கூடாது அரக்கத்தனமான மிருகங்களின் வெறிக்கு ஆளாகிபொலிவிழந்து நிற்கும் அப்பெண்களை இளைஞர்களாகிய நீங்கள் திருமணம் செய்து அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கவேண்டும்!"

-பாரத நாடு சுதந்திரமடைந்தபின், கல்கத்தா நவகளனி ஆகிய இடங்களில் இடம் பெற்ற பயங்கரமான இனக்கலவரத்தில் ஏராளமான இளம் பெண்கள், காலிகளின் வெறிக்குப் பலியானார்கள். அவர்கள் சமூகத்தில் ஒரு பாவச்சின்னமாக விளங்கினார்கள். அந்த அவலநிலையைப் போக்க ஒரு பாவமும் அறியாத இளம் பெண்களின் வாழ்வை மலரச் செய்ய காந்தியடிகள் பெரிதும் பாடுபட்டார்.

இப்பொழுதும் மறுபடியும் காந்தியடிகளின் போதனைகள் மனதில் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன அவை என் மனதை மிகவும் கவர்ந்தன அவற்றைப் பூரணமாக மனம் ஏற்றுக்கொள்ளவும் செய்தது. அத்துடன் பெண் பார்க்கச் சென்ற நிகழ்ச்சியும் பசுமையாய், புதுப் புது வடிவில் தோன்றின.

ஆமாம்! அவளில் மாசில்லை! மோசமடைந்தாலும் அது குற்றமல்ல! அறியாமல் பருவத்தின் கோளாறில், ஒருவித மயக்கத்தில் செய்த தவறுதானே! சிறிதளவு என் மனம் பேசிக்கொண்டது. அணில் கோதிய பழம், கீழே விழுந்தால் அதை வீசிவிடத்தான் வேண்டுமா? கோதிய பகுதியை கத்தியால் வெட்டி எறிந்து விட்டு சாப்பிடலாம் தானே!

அப்பெண்ணின் அழகுமுகத்தில் எனக்குமட்டும் தெரிந்த மறு நீங்கி, பூரண நிலவாய் என் அகக் கண்ணில் தெரிகிறது. உள்ளமெல்லாம் வியாபித்தது நினைத்தவுடன் இனம் தெரியாத அருவருப்பை ஊட்டிய முகம் இப்பொழுதே மெதுமெதுவாக இனிக்கவும் செய்தது?

இருட்டி வெகுநேரமாகிவிட்டது. ஆனால் இருள் நீடிக்கவில்லை. நீலவானத்தில்வெண்நிலவுபூரணமாக தன் கதிர்களை வீசி பவனி வரப்புறப்பட்டது. வானம் தெளிவாகத்துலங்கியது.

நாளை மறுநாள் நிச்சயமாக என் பூரண சம்மதத்தைச் சுமந்துகொண்டு ரகு கடிதம் அம்மாவின் கைகளில் சேரத்தான் போகின்றது!

★

# மலரின் கோபம்

—வே. சந்தானலட்சுமி—

மலர் பாடசாலை வந்து விட்டாள். அவளுக்கு இன்றைக்கு அம்மாவின்மீது கோபம். அம்மா அவளுக்கு அடித்து விட்டாள். மோசமாக அடித்துவிட்டாள். மலருக்கு அழுகை வந்தது. அடக்கிக் கொண்டாள் பள்ளிக்கூடத்தில் அழலாமா? தோழிகள் சிரிப்பார்களே.

மலர் ஆறும் வகுப்பிலே படிக்கிறாள். நல்ல கெட்டிக்காரி. சுறுசுறுப்பானவள். ஆசிரியர்கள் அவள்மீது பிரியம் காட்டினர் அவர்கள் அவளுக்கு அடிப்பதில்லை; கோபிப்பதுமில்லை. அப்படியிருக்க இந்த அம்மா அடித்து விட்டாளே. அம்மாவை அவளுக்குப் பிடிக்கவில்லை. அடிபட்ட இடங்கள் வீங்கி இருந்தன. அவள் தடவிப் பார்த்தாள். மீண்டும் அழுகை வந்தது அம்மா இப்படி அடிக்கலாமா?

மலருக்கு வீட்டுக்குப்போக விருப்பமில்லை அவள் சாகவிரும்பினாள். செத்துப்போனால் அம்மா எப்பிடி அடிப்பாள். பிறகு அழுவாள் அழட்டுமே. நன்றாக அழட்டுமே

மலருக்குச் சாவது எப்படி என்பது தெரியும். பாலன் அவள் பக்கத்து வீட்டுக்காரன். அவன் 'பொலிடோல்' குடித்துச் செத்தான். பாலண்ணவைப்போல அவளும் சாவாள். அப்பொழுது அம்மாவால் எப்படி அடிக்க முடியும். பாலண்ணவுக்குத் தகப்பன் அடித்தார். அவன் செத்ததும் அவர் அழுதாரே. அப்படி அம்மாவும் அழட்டும்.

மலருக்கு இப்பொழுது பொலிடோல் வேண்டும். அதை எங்கே பெறலாம்? அவள் யோசித்தாள். அப்பொழுது ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தார். அவர் நல்ல கதைகள் சொல்லுவார். இன்றைக்கும் அவர் ஒரு கதை சொன்னார்.

''பிள்ளைகளே; ஒரு கொடியவன் இருந்தான். அவன் பொய் சொல்லுவான். களவெடுப்பான் எல்லாருக்கும் அடிப்பான் இதை இராசா பார்த்தார். அவருக்கு கோபம் வந்தது அவனைக் கொல்லும்படிகட்டளை இட்டார்

கள்வனைத் தூக்கிலேபோடும் நேரம் வந்தது. தூக்கிலே தொங்க விடுவதற்கு முன்னர் அவன் தனது தாயாரைப் பார்க்க விரும்பினான். தாய் வந்தாள். அவளைக் கண்டதும் அவளிடம் ஓடினான். கட்டி அணைத்தான். அவளுடைய மூக்கைக் கடித்து வெளியே துப்பினான்"

கதையைக் கேட்ட பிள்ளைகள் திடுக்கிட்டார்கள். 'ஏன் அவன் தாயின் மூக்கைக் கடித்தான்?' என்று கேட்டார்கள்.

ஆசிரியர் சொன்னார் ''அவன் சிறுவயதிலேயே களவெடுத்தான். எடுத்த பொருட்களைத் தாயிடம் கொடுத்தான். தாய் அவனைத் தண்டிக்கவில்லை. அவன் கொடுத்ததைப் பெற்றுக் கொண்டாள். ஆகவே அவன் பின்பும் திருடி

ஞன். அவன் முதலிலே திருடிய போது தாய் அவனுக்கு களவு கூடாதென்று சொல்லியிருக்க வேண்டும். அதற்கும் திருந்தாமல் இருந்தால்அடித்துத் திருத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அவனுக்குத் தூக்குத்தண்டனை கிடைத்திருக்காது. ஆகவேதான் அவன் தாயின் மூக்கைக் கடித்தான்''

கதைசொல்லி முடிந்தது. பிள்ளைகளைப் பார்த்து ஆசிரியர் கேட்டார் ''பிள்ளைகளே! நீங்கள் குற்றம் செய்தால் அப்பா, அம்மா அடிப்பதுண்டா?''

எல்லாப் பிள்ளைகளும் 'ஆம்' என்று சொன்னார்கள்.

மலர் பார்த்தாள். தான் மட்டுமா அடிவாங்குகிறாள்? எல்லாப் பிள்ளைகளுமே தண்டனை பெறுகிறார்கள். அப்பா அம்மா அடித்ததற்காக எல்லாப் பிள்ளைகளும் சாக நினைக்கவில்லையே. அவர்கள் [illegible]பா அம்மாவுடன் கோபிக்க[illegible]லையே.

''நீங[illegible] நல்லபிள்ளைகளாக வளரவே[illegible]ம் அதற்காகவே குற்றம்செ[illegible]ால் அப்பா அம்மா உங்களை[illegible] தண்டிக்கிறார்கள். அவர்களு[illegible] உங்கள்மீது கோபம் இல்லை. [illegible]ுப்பில்லை. உங்களிடம் அன்[illegible]டு. உங்களுக்காகத் தானே அ[illegible]ர்கள் பாடுபடுகிறார்கள்'' என்[illegible] ஆசிரியர் சொன்னார்.

நண்பக[illegible]; உணவு வேளை; மணி அடி[illegible]ந்து. மலர் வெளியே வந்தாள்.

அப்பா சை[illegible]கிலுடன் நின்றார்.

''நீ சா[illegible]பிடாமல் வந்துவிட்டாயாமே. அம்மாவும் சாப்பிடவில்லை வா'' என்று சொல்லி அவளைக் கூ[illegible]டிச்சென்றார். இனி மலர் சா[illegible]கவேண்டும் என்று நினைக்கமாட்டாள். வீட்டிலேஇப்பொழுது மலருக்கு அம்மா சோறு ஊட்டுகிறாள். மலர் சிரித்தபடி உண்ணுகிறாள்.

★


## உங்கள் அச்சுவேலைகள்

★ தமிழ்

★ සිංහලම්

★ ENGLISH

★ संस्कृतम्

எந்தமொழியில் செய்யப்பட வேண்டும்?

## ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது

61, பெரியகடை ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்தில் விசாரியுங்கள்

# சாட்சி

எம். ஐ. எம். மஷ்ஹூர்

எண்ணத்தின் உந்தலால் காரியம் நிறைவேறி இனிமையான வாழ்க்கையின் சுவை நிறைந்த சம்பவங்களால் ஆனந்தக் கண்ணீர் வடிக்க வேண்டிய அவளது நயனங்கள், வாழ்க்கையின் எல்லையற்ற துன்பத்தினால் நிராசையடைந்த நிலையில் வெந்நீரை ஓட்டுவதினால் அவளது தலையணை தொப்பாக நனைந்து கொண்டிருந்தது.

'வாழ்க்கையை இனிமையாக்குவதும் அவரவர் மனப்போக்கு என்று எப்பொழுது யாரோ சொன்னது அவளது நினைவுத் திரையில் நிழலாக ஆடினாலும், வாழ்க்கையைக் கண்ணீரால் கழுவி தூய்மைப்படுத்துமளவுக்கு எந்தவிதக் குற்றமுஞ் செய்யவில்லை என்றுதான் அவளது மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

காலங்கடந்த நிகழ்ச்சிகளை நினைந்து, நினைத்து உருகிபடிப் பதிலும் பார்க்க, செத்து மடிந்தவர்களைச் சில நாட்களில் மறந்துவிடுவதுபோல அவைகளை மறந்துவிட வேண்டுமென்று அவள் தனக்குத்தானே உபதேசம் செய்து கொண்டாலும், மடிந்தவர்களிற் சிலரின் நினைவு மறந்துவிடாது இருப்பதைப்போல மன ஆழத்தில் கல்லாய் வீழ்ந்த அந்தச் சம்பவம் அவள் நெஞ்சை விட்டு அகல மறுத்துக்கொண்டேயிருந்தது.

வழிந்தோடும் கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். ஆயினும் அது அணை உடைத்த வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தது.

அவள் பெண். தனிமையிலும், கூட்டிலும் சேவையின் மனப்பாங்கால் தன்னை மெழுகுதிரியாக அழித்துக் கொள்ளவேண்டியவள். இப்பொழுதோ ஒன்றுக்கும் உதவாக் கரையாக கண்ணீரோடு போராடி தன்னை அழித்துக் கொண்டிருக்கின்றாள்.

இன்றா? நேற்றா? அவளைச் சித்திரவதை செய்து கொல்லாமல் கொன்று கொண்டிருக்கும் வருடங்கள் எத்தனையோ கழிந்துவிட்டன.

மனிதனுடையும் இன்பத்திலும், துன்பத்திலும், இலாபத்திலும், நஷ்டத்திலும் காலத்தை இணைத்துப் பேசி ஆறுதல் தேடிக் கொண்டாலும், காலவெள்ளத்தின் ஓட்டத்தில் மனிதன் எதிர் நீச்சலாடிப் பெறும் பெறுபேறுகளின் காரியத் தொடர்பை உணராது தனக்கு வாய்த்த காரணத்தைச் சரியெனக் கண்டு ஆறுதல் தேடிக் கொள்வதுபோல அவளும் தனக்கொரு ஆறுதலைச் சொல்லிக்கொண்டாலும் அந்த ஆறுதல் ஏனோ அவளுக்கு அமைதியைக் கொடுக்கவில்லை.

கடந்துவிட்ட நாட்களில் மூன்றில் ஒருபங்கில்தான் சுதந்திரப் பறவையாக அவள் சிறகடித்துப் பறந்திருக்கின்றாள். மற்ற இரு பங்கிலும் ஓயாத கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கி மூச்சுத் திணறி கரைகாணமுடி

யாத நிலையில் தன்னைத் தத்தளிக்கச்செய்து கொண்டிருக்கின்றாள்.

துளிர்விட்டு வளரும் தளிர் மேனிப் பருவத்தில் துன்ப துயரத்திள் சாயலே அவளில் பட்டதில்லை. படவேண்டிய சூழ்நிலையும் இருக்கவில்லை.

வேண்டும்போது வேண்டியதைக் கொடுக்க தந்தையிடம் இருந்த செல்வமும், பாசத்தை அருவியாக ஊற்றிக் கொண்டிருக்கும் அன்னையின் அன்பும், களையற்ற பயிர்போல நோயற்ற உடலும் அவளது வாழ்க்கையை தகதகவென ஒளிரச் செய்து மலர்ச்சி ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

அந்த இளமைப் பருவத்தின் சொகுசான வாழ்க்கையின் வனப்பு, அவளது எண்ணத்தில் கனவாகப் பட்டுத் தெறித்தாலும், அது பகலவனைக் கண்டபனியாக, மாயையாக மறைந்து, இடையிலேற்பட்டோர் எத்தனையோ பேர்.

பொறாமை உடையோர் மூட்டிய எரிச்சல் தீயினால்தானோ என்னவோ அவளது வாழ்வு கரிந்து சாம்பலாகி விட்டது.

இன்பத்தில் திளைத்திருப்பவர்களைப் பார்த்து பொறாமை கொள்ளாமலும், துயரத்தில் மூழ்கியிருப்பவர்களைப் பார்த்து அனுதாபங்காட்டாமலும்நேரம் போய்க்கொண்டிருந்தது.

நித்திரையின் மயக்கரேகை அவள் இளமைகளிற்படர்ந்தாலும் மனதிற் கொந்தளிக்கும் புயற்காற்றின் வேகம் இமைகளைப் படபடவென அடிக்கச் செய்து நித்திரையைத் துரத்திக் கொண்டிருந்தது.

பூரணச் சந்திரனின் ஒளிக் கதிர்கள் ஜன்னலூடாக ஒளியை எறித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்கவே அவளுக்கு எரிச்சலாகவும் அருவருப்பாகவும் இருந்தது.

பெரு மூச்சுவிட்டுக் கொண்டாள். அவளில் களங்கத்தை ஏற்படுத்தி ஓயாத துன்பத்துள்ளே தள்ளிவிட்டு ஓடியவன், இந்தச் சந்திரனுடைய சாயலாகத்தான் அவளுக்கு அப்பொழுது தோன்றினான். அவனது செக்கச் செவேரென்ற அழகிய முகத்தின் இள நகையை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். எடுப்பான நாசியும், வகிடிட்டு இழுத்த அலையலையான கேசமும் அந்த முகத்திற்கு இன்னும் கவர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தன. இந்த அழகில் மயங்கித்தான் அவனில் தன் மனதைப் பறி கொடுத்தாள். ஆனால் பூரண அழகு நிறைந்த சந்திரனில் கருமை குடியிருப்பது போல அந்த அழகிய வதனமுடைய அவனது அகம் கருமை நிறமுடையதாயிருந்ததென்று அப்பொழுது அவளுக்கு ஞானோதயம் பிறக்கவில்லை.

இளமையின் துடிப்பில் இயற்கையாகத் தோன்றும் ரசிகத் தன்மையால்தான், அவன் அழகில் தேன் குடித்த வண்டாக மயங்கினாள். இல்லாவிட்டால் எத்தனையோ பேர்கள் தடுத்தும் அதை மீறி அவன் மீதுமனதைப் பறிகொடுத்திருப்பாளா?

பூரண நிலவைப் பார்க்காமலே தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். தான் செய்து கொண்ட பிழைக்காக இயற்கையின் நியதியை

நொந்து கொள்வதில் என்ன இலாபந்தானோ தெரியவில்லை.

அனுபவத்தில் முதிர்ந்த வயதானவர்களின் ஆலோசனைகளை அப்பொழுது கேட்டிருந்தால் இந்த நிலைக்கு ஆளாகவேண்டிய தேவை இருக்காது. தான் நினைத்ததே சரி என்ற பிடிவாதக் குணம்தான் அவளை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டது,

நினைவுகள் ஒவ்வொன்றும் அவளைச்சித்திரவதை செய்து கொண்டிருந்தன. நடந்து விட்ட பிழைகளை நினைந்து அதற்கான பரிகாரம் செய்து விமோசனம் தேட இப்பொழுது அவகாசம் இல்லை. அதற்குரிய காலங்களெல்லாம் கடந்து விட்டன.

பிளாஸ்கில் இருந்த பாலை கிளாசில் ஊற்றினாள், இது விஷமாக இருந்தால் கூடப் பரவாயில்லை என்று அவள்மனம் சொல்லிக் கொண்டிருந்தது. வாழ்க்கையில் தோல்வி கண்ட பெலவீனர்கள் தங்கள் வாழ்வை முடித்துக் கொள்ள விஷத்திடம் தஞ்சமடைவது நாளாந்தச் செய்தியாக இருந்தபடியால், அந்தச் செய்தியில் தனது வாழ்க்கையும் ஒரு கலமாக ஆக்கினால் என்ன என்பது தான் அந்தப் பாலைப் பார்க்கும் போது அவளுக்குத் தோன்றியது.

இருந்தபோதிலும் விஷம் என்ற எண்ணத்தின் பயங்கரத் தன்மையால் கிளாசைப் பிடித்திருந்த அவளது கை இலேசாக நடுங்கிக்கொண்டிருந்தது. விஷத்தைப் பார்ப்பது போலவே அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அதைஅருந்தி தன் உயிரை மாய்த்துக் கொள்வது போலவும் அவள் மனம் கற்பித்துக் கொண்டிருந்தது. அதை அருந்தி தன் உயிரை மாய்த்துக் கொள்வது போலவும் அவள் மனம் கற்பித்துக்கொண்டிருந்தது.

இதற்குமுன், தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டுமென்று அவள் ஒரு போதும் எண்ணியதில்லை, அப்படி நினைத்திருந்தால், எப்பொழுதோ செய்திருப்பாள்.

ஒரு முறை அவன் ''நமது வாழ்வை எவர் எப்பொழுது பிரிக்கின்றனரோ அன்று நம் உயிரை விஷமருந்தி மாய்த்துக் கொள்ளவேண்டும்'' என்று அவளுக்குச் சொல்லியதுண்டு, அந்த வழியைக் காண்பித்தவன், அவளைப்பற்றி படுதூறு சொல்லி விட்டு உயிரோடு பிரிந்து வாழும் போது நஞ்சு குடித்து மாள அவள் மனம் எப்படிஇடங் கொடுக்கும்?

அவனால் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் ஆறுப் புண்ணாக இருக்கும்அந்தவடுஇன்னும்காயாமல் இருக்கும் போது, தற்கொலை என்ற கத்தியால் அப்புண்ணைக் கீறிவிட்டு இன்னும் நாற்றத்தைக் கிளப்பி விட அவள்விரும்பவில்லை.

பாலை அருந்தாமலே கிளாசை வைத்துவிட்டாள். அவளது மன எண்ணத்தின் பிரகாரம் அது விஷ்மாகத்தான் அவளுக்குத் தோன்றியது.

தனது மனப் பாரத்தை இறக்கிவைக்க விஷந்தான் தக்க உதவி என்று அவளது மனதின் ஒருபகுதி அவளைத் தூண்டிக் கொண்டிருந்தது. ஆயினும் நிதானத்தை இழந்துவிடாதபடியால் அதிலிருந்து தப்பித்துக்கொண்டிருந்தாள்.

அவளோடு கூடமாட ஒன்ருக விளையாடியவர்கள், கலாசாலையிற் கற்ற ஆருயிர்த் தோழிகள் உடன் ஆசிரியைகள் எல்லாரும் இப்பொழுது இல்லறமென்னும் பசுமையான வயலில் உழுது எரு இட்டு பயிர்செய்து பலன் பெற்றுக்கொண்டிருப்பது அவளுக்கு எந்தவித எரிச்சலையோ, பொருமையையோ ஏற்படுத்தவில்லை. தானும் அவ்விதமாகவே வாழ முடியவில்லையேஎன்ற ஏக்கந்தான் அவளைச் சுற்டெரித்துக் கொண்டிருந்தது.

அவள் வெளியிற் சென்ருலும், பாடசாலைக்குச் சென்ருலும் தலைகவிழ்ந்த நிலையில்தான் செல்ல வேண்டியிருந்தது நிமிர்ந்து நடக்க திராணியற்ற ஒடிந்த நிலை. முன் போல கலகலப்பாக யாருடனும் சிரித்துப் பேசி மகிழ முடியவில்லை பிறரை பற்றி அணுவளவேனும் குற்றங்கண்டு குறைபேச முடியவில்லை. தனக்குத் தானே கண்ணுடியாக இருந்து தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பதால், தன்னிலேற்பட்ட ஒரு குறை மற்ருேரிடத்தில் காணும் எல்லாக் குறைகளுக்கும் சமமாக அவளுக்குத் தோன்றியது.

ஜன்னலூடாக பனிக்காற்று ஜில் என்று வீசிக்கொண்டிருந்தது. மனதைப் பொறுத்த மட்டில் எல்லாவற்றையும் உதறித் தள்ளிய சன்னியாசினியானுலும் இந்தத் தளர்ச்சியடைந்த நிலையில் குளிரை அவளால் தாங்க முடியவில்லை. கம்பளியால் இறுக்கமாகப் போர்த்திக்கொண்டாள்.

அன்ெருருநாள் மாலை மங்கி இருள் கவிந்து கொண்டு வரும் நேரம். மழை சோ வென்று பெய்து கொண்டிருந்தது. வாசலில் யாரோ கதவைத் தட்டிய சப்தம் அவளுக்குக் கேட்டது. ஓடிச் சென்று கதவை திறந்தாள் அவளுக்குத் தெரிந்த ஒருவன் வாசலில் நின்று கொண்டிருந்தான். உடை இலேசாக நனைந்திருந்தது. அவள் கதவைத் திறந்ததும் அவன் உள்ளே நுளைந்து விட்டான். இடைக்கிடை அவன் அங்குவந்து போவதால் அவள் அவனைத் தடுக்கவில்லை.

எல்லாருடனும் அவள் சோசியலாகத்தான் பழகிவந்தாள். அப்படிப் பழகுவது பெருமையாகவும், நாகரீகமாகவும் அவளுக்குத் தோன்றியது. இதனுல், அவளுக்கு இரு சாரார் எப்பொழுதும் இருந்து கொண்டிருந்தனர் ஒரு சாரார் அவள் நடத்தைபற்றி எக்கச்சக்கமாகக் கூறினர். மறுசாரார் அவள் போக்கை போற்றிப் புகழ்ந்தனர். புகழ்ச்சிக்கு மனிதன் இலகுவில் அடிமையாகி விடுகின்றபடியால் அவளது சோசியல் எல்லைகடந்து கொண்டிருந்தது.

வீட்டின் உள்ளே நுளைந்தவன் கைக்குட்டையால் தலையைத் துடைத்தவண்ணம் கதிரையில் அமர்ந்துகொண்டிருந்தான். அவள் உள்ளே சென்று கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். அவன் அதைக் குடித்தான். மழைக்குளிருக்கு மிக இதமாக இருந்தது.

"அப்பா, அம்மா இருவரும் கலியாண வீட்டிற்குப் போய் இருக்கின்ருர்கள். திரும்பிவர

வெகு நேரமாகும் போல் தெரிகிறது'' என்று அவள் சொன்னாள்.

''அப்படியா? தனிமையில் இருப்பது முறையல்ல நான் வருகிறேன்'' என்று சொல்லி அவன் எழுந்தான்.

''முறையும் கிறையும்தான் இந்த மழையில் எங்கே போகப் போகிறீர்கள். மழைவிட்ட பிறகு போகலாம். எனக்கும் பேச்சுத் துணையாக இருக்கும், வேலைக்காரக் கிழவி மூலையில் முடங்கிக் கிடக்கிறாள். பேசாமல் இருங்கள்'' என்று சொல்லி அவன் தோளில் கையைவைத்து அமர்த்தி இருக்கச் செய்துவிட்டு, வாயிற் கதவைச் சாத்தினாள் ஜன்னற் கதவுகளையும் சாத்தினாள்.

அவனது மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டிருந்தது. எத்தனையோ தடவைகள் அவன் இங்கு வந்திருக்கின்றான். அவளை ஒரு போதும் கையால் தட்டிக் கதைக்கவில்லை. ஊரில் நாலுபேர் நாலுவிதமாகச் சொல்லுவது உண்மைதானோ என்று கூட அவன் யோசித்தான்.

''சரியான குளிராக இருக்கிறது இல்லையா? எப்படிப் போர்த்தினாலும் குளிர் கட்டுப் படுகிறதாக இல்லை'' என்று சொல்லி அவன் முன்னிலையியே இருகைகளையும் நீட்டி வளைத்து கம்பளிச் சட்டையை அணிந்து அதை இழுத்துச் சரி செய்து கொண்டாள் அச்சட்டையின் இறுக்கத்தால் அவளது உடலமைப்பின் அங்கங்கள் பிடித்து வைத்தது போல் தோன்றிக் கொண்டிருந்தன.

நேரம் போய்க்கொண்டிருந்தது. மழையும் விட்டபாடில்லை. இரண்டாம் படக்காட்சி முடிந்து சனங்கள் தெருவிலே ஓட்டமும் நடையுமாகப் போய்க்கொண்டிருந்தனர்.

இனி இங்கிருப்பது நியாயமில்லையென்று அவன் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. ஆயினும் எழுந்து செல்வதற்கு மனம் இடம் கொடுக்கவில்லை. இளமையின் எண்ண அலைகள் ஒலிகிளப்பிக் கொண்டிருந்தன.

ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சின் இடையே அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். மயக்க நிலையில் அவனது கண்கள் அரைத் தூக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தன. அவளும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அகலவிரிந்த அக்கண்கள் பார்ப்பதற்கு அழகாகாக விருந்தன. ஒருவரால் மற்றவரின் பார்வையைப் புரிந்துகொள்ள முடியாத நிலை. அவன் திடீரென்று எழுந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டான். அவள் திணறிவிட்டாள். எதிர் பாராத இந்த நிகழ்ச்சியால் ஆவேசங் கொண்ட பேயாக மாறி அவனைப் பிடித்து ஒரே தள்ளாகத் தள்ளினாள். கதவோரத்தில் தடால் என விழுந்தான். அவன் எழுந்து விடுவதற்கு முன்பாக ஓடிச் கதவைத் திறந்து அவனை வெளியே தள்ளிவிட்டு கதவைச் சாத்திவிட்டாள்

இந்தச் சம்பவத்தை அவள் எப்பொழுது நினைத்துக் கொண்டாலும் அவளது உரோமம் சிலிர்ந்து உடல் குளிர்ந்து விடும்.

அவளுக்கு விவாக நிச்சயார்த்தம் நடந்தது. அவள்

யாரை முடித்துத் தர வேண்டு மென்று ஒற்றைக் காலில் நின் ருளோ அவனுக்கு முடித்துக் கொடுக்க பெற்றோர்கள் மன மின்றிச் சம்மதித்தனர்.

அவன் அடிக்கடி அங்குவந்து போய்க் கொண்டிருந்தான். எதிர்காலத்தின் மகிழ்ச்சி தரும் கனவால் நேரம் போவது தெரி யாமல் அவர்களிருவரும் பேசிக் கொண்டிருப்பார்கள்.

வழக்கம் போல அவன் ஒரு நாள் வந்தான். அவனதுபார்வை பார்ப்பதற்கு பயங்கரமாக இருந் தது. இரு கண்களும் ்க்காளிப் பழமாக சிவந்திருந்தன, அவனைப் பார்த்தும் அவள் அரண்டு விட்டாள்,

அவளது கையை இறுக்கமா கப்பிடித்துக்கொண்டான்.

,'அன்று அவன்... மழை நேரத்தில் இங்குவந்தானு?"

''......"

':அப்பொழுது வீட்டில் ஒரு வரும் இல்லையல்லயா?''

''......''

''இரண்டாவது படக்காட்சி முடியும் வரை அவன் இங்கு இருந்தான் தானே?''

''......''

''என்னடி பேசாமல் நிற்கி ருய்! நாயே! நீ வேசி"

பளீரென்று கன்னத்திலறைந் தான். இரு கைகளாலும் நெஞ் சைப் பொத்திக் கொண்டாள். வேசி என்ற வார்த்தை அவளது ஈரற்குலையை அப்படியே வெளி யில் எடுத்து எறிந்ததுபோல் இருந்தது.

மின் வெட்டும் நேரம். அவள் பேசுவதற்கு வாய் திறக்கவில்லை, அவன் தட தடவென்று போய்க் கொண்டிருந்தான். அவளது கண் களிலிருந்து நீர் தாரை தாரை யாக ஓடிக் கொண்டிருந்தது

விடிகாலைச் சேவல் எங்கோ கூவிக்கொண்டிருந்தது. அவளது முகத்தில் ஒருகணம் ஆனந்த ரேகையும் மறுகணம் துன்ப ரேகையும் படர்ந்துகொண்டிருந் தன. நித்திரையிலும் அமைதி குலைந்து கனவு காண்கிருள் போலும்.

அவள் நாலுபேர் மத்தியில் எப்படி சோசியலாக நடந்து கொண்டாலும், அந்த விஷயத் தில்மட்டும் தன் மனதை அடக்கி தற்காத்துக் கொண்டாள். ஆயி னும் உலகம் நம்பவேண்டுமே, மனிதனுடைய கண்களுக்கு வெளிச் செயல்கள்தானே சாட்சி.


# "விவேகி"

திங்கள் இதழ்

| | |
|---|---|
| வருட சந்தா | 4-00 |
| தனி இதழ் | -40 |

நிர்வாகி,

29, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.



# மூன்று முழு நிலவுகள்

செம்பியன் செல்வன்

அங்கம் 3

## காட்சி 1

[விரிஜி நாட்டின் தலைநகர்—வைசாலி. எழிலார் மணி மண்டபத்தின்—நர்த்தன கூடம். சுற்றுப்புற மாடங்களில் இன்னிசைக் கருவிகள் காணப்பெறுகின்றன. நான்கு மூலைகளிலும் பாவ முத்திரை தாங்கிய பெண் உருவச் சிலைகள். மேல் விதானத்து உட்பகுதியில் கவினார் கம்பளம் ஆலவட்டமாகத் தொங்குகின்றது.

[ஆடலரசி அம்பபாலி நடனமாடிக்கொண்டிருக்கிறாள்.]

அம்பபாலி : நாணற் புல்போல் வளைந்திடுவேன்—இந்த
நானிலத்தையே வளைத்திடுவேன்.
மாதவிக் கொடிபோல் மலர்ந்திடுவேன்
மன்னவ குலத்தையே மயக்கிடுவேன்.
தென்றலைப் போலத் தழுவிடுவேன்
தேன் குரல் பிலிற்றி இசைத்திடுவேன்.
காலின் சலங்கை நாதத்திலே
காவிய வாழ்க்கை சமைத்திடுவேன்
ஆடவர் உள்ளம் அல்லலுற
ஆடும் தீபம் நானாவேன்.

[தோழி ஒருத்தி விரைந்து வருகின்றாள்]

தோழி : அம்மா!... இன்னுமா உங்கள் கலைப்பயிற்சி முடியவில்லை? [அம்பபாலி நடனத்தை நிறுத்தி, முகத்தின் குறுவியர்வை களை நளினமாக ஒத்தியபடி ஒப்பற்ற அழகுடன் நிற்கிறாள்]

அம்பபாலி : (சிரித்து) எடி மாதவி... பைத்தியமே... கலைக்கு ஒரு முடிவா .. கலை என்பது ஒரு பொற்சரடு. பயிலப் பயில அறியாமையும், ஆற்றாமையும் மேலோங்கும் பொற்கனவடி ..

மாதவி : அது சரியம்மா!... அதற்காக உங்கள் உடலை இப்படி வருத்திக் கொள்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லையம்மா...

அம்பபாலி : உடலை வருத்தினார்களா?... யார்...நானா?... இல்லையடி இல்லை... உள்ளத்தைப் பண்படுத்துகிறேனடி... கலையிலே மெய்மறந்து சற்று உலகத்து வேதனையை எல்லாம் மறக்கப் பார்க்கிறேனடி... எனக்கு அந்தக் கலை மட்டும் இல்லாதிருந்தால் என்றோ இறந்து போயிருப்பேனடி....

மாதவி : (வியந்து) என்னம்மா!... கூறுகிறீர்கள். உங்களுக்கும் வேதனையா ?... என்றால் நம்பமுடியவில்லையே...

அம்பபாலி : ம்... (என்றபடி ஒரு ஆசனத்தில் அமர்ந்து) உன்னால் மட்டுமென்ன... உலகத்தால் கூட நம்பமுடியாதுதான்... (தன்னைச் சமாளித்து) அது சரி... நீ வந்த விசயம்...

**மாதவி :** அம்மா... உங்களை உடனடியாகப் பார்க்கவேண்டுமென்று லிச்சவப் பிரபு சோணேசர் காத்திருக்கிறாரம்மா?...

**அம்பபாலி :** அப்படியா... ஆனால் அவரை இப்போது பார்க்க முடியாது என்று சொல்...

**மாதவி :** (வியப்புடன்) அம்மா!...

**அம்பபாலி :** என்ன மாதவி!...

**மாதவி :** நேற்று அவரையே அன்புடன் உபசரித்தீர்கள்...அவரளித்த பரிசில்களையும் பெற்றுக்கொண்டீர்கள்.. இதோ... இந்த நெற்றிச் சுட்டிகூட...

**அம்பபாலி :** ஆமாம்.. மாதவி சோணேசர் அளித்த வெகுமதிதான்... அதற்காக அவருக்கே நான் உடமையாகி விடுவதா...அவர் நேற்று மகிழ்திருந்தார். பரிசளித்தார் .. (சிரித்து) அடி... மாதவி ..அவர் பேராசைக்காரரடி

**மாதவி ;** என்ன இருந்தாலும்... லிச்சவகுலத்தின் கணராஜா அல்லவா!...

**அம்பபாலி :** அதற்காக ..அவருக்கே மட்டும் உரியவளாவதா...மாதவி உனக்கு ஆண்குலத்தின் பலவீனமே எதுவென்று தெரியாது... கைக்குக் கிட்டும் ராஜதாமரையை விட்டுவிட்டு, முட்கூட்டங்களிடையே மலரும் நெருஞ்சிப் பூவிற்காக அலைபவர்கள்... நாங்கள் எட்டியிருக்கும் வரைதான் எங்கட்கு மதிப்பளிப்பார்கள் .. நெருங்கிவிட்டாலோ... தூக்கி எறிந்துவிடுவார்கள்.

**மாதவி ;** அதுசரியம்மா...நான்

**அம்பபாலி** ஆமாம்...இப்போது என்னைப்பார்க்க முடியாது என்று சொல்...

[அவள் போகிறாள். அம்பபாலி எழுகின்றாள். மாங்குயில் ஒன்று கூவும் ஓசை கேட்கிறது.]

**அம்பபாலி :** ஆ! மாங்குயிலின் கீதம்...என்ன இனிமை...குயிலே... உன் குரலின் இனிமையை இரசிக்கும் உலகம்...உன்உள்ளத்து ஏக்கத்தை உணருகிறதா ..கீதம் இனிய குயிலே... பிறப்பில் நானும் நீயும் ஒன்றுதான்...

**மாதவி :** (மீண்டும் வந்தபடி) அம்மா!...சோணேசர் போய்விட்டார். ஆனால் மல்லர் குலத்தலைவர் வந்திருக்கிறார்...

**அம்பபாலி :** (கோபத்துடன்) போ! ..போ! யாரையும் பார்க்க நான் விரும்பவில்லை ..என் மனம் ஏனோ அமைதியாயில்லை... போ!.. இந்த ஆடவர்குலத்தையே நான் வெறுக்கிறேன் நில்லாதே போ!

**மாதவி :** (போய்க் கொண்டே) சரியம்மா...நான் போய் எப்படியாவது அவரை அனுப்பிவிட்டு வருகிறேன். (போய்த் திரும்பி வருகிறாள்) அம்மா!...பார்த்தீர்களா...இதனை உங்களுக்கு பரிசாகக் கொடுக்கும் வண்ணம் கூறிவிட்டுப்போகிறார் இரவு வருகின்றாராம்...

* அக்காலத்தின் ஒரு குலத்தின் தலைவரை—கணராஜா என்பர்

**அம்பபாலி :** அதைக் கொண்டுபோய்க் குப்பையில் போடு, என் மனதை மயக்க எத்தனை ஆலவட்டம் போடுகிறார்கள். யாருக்கு வேண்டும் இந்த வைரமாலை...ஆண்கள் பெண்கள் விசயத்தில் வியாபாரிகளாகத்தானிருக்கிறார்கள்.

**மாதவி ;** அம்மா! உங்களை, ஒன்று கேட்பேன் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே!...

**அம்பபாலி :** இல்லை சொல்...

**மாதவி :** உங்களுடன் இவ்வளவு நாட் பழகியும் உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே!...

**அம்பபாலி :** உண்மைதான். உன்னால் எப்படி என்னைப் புரிந்துகொள்ள முடியும். ஏனென்றால் என்னையே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே.

**மாதவி :** என்னம்மா சொல்கிறீர்கள்...

**அம்பபாலி :** ஆமாம் மாதவி!... இந்த ஆண் குலத்தையே மனமார வெறுக்கும் நான்... அவர்களையே மகிழ்ச்சிப்படுத்தும் தொழிலைச் செய்கின்றேன். உனக்கே வியப்பாக இல்லை?... அவர்கள் எல்லாரும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றார்கள். பெண் என்பவளுக்கு உள்ளம் என்று உண்டு... அதுவும் என்னைப் போன்றவர்களுக்கு இயற்கை, இதயத்தையே படைக்க மறந்து விட்டது என்று எண்ணுகின்றார்கள்.

**மாதவி ;** அப்படியானால் உங்களை இவ்வளவு அரசர்களும், பிரபுக்களும் விரும்பவில்லை என்று கூறுகிறீர்கள் ..

**அம்பபாலி :** ஆமாம். அவர்கள் விரும்புகிறார்கள்... நேசிக்கிறார்கள்... என்னையல்ல... என் உடலை .. என் ஆட்டத்தை . என் ஸ்பரிச உணர்வை... என் விரல் வழியே எழும் ஸ்பரிச உணர்வில் சிலிர்த்து எழும் இந்த ஆண்களின் உள்ளம்... என் மனம் மரக்கட்டை போன்று மரத்துக் கிடப்பதை உணரவில்லை... என் இனிய நாதத்தைக் கேட்டு மகிழும் செவிகள், என் இதயத்தின் சோகப் புலம்பலை அறியவில்லை. என் ஆட்டத்தை இரசிக்கும் அவர்கள்என்வாழ்க்கையின் அவலத்தைஉணரவில்லை...

**மாதவி :** அப்படியென்றால் அவர்கள் அளிக்கும் ஆதரவும், அளப்பரிய அன்பளிப்பும்...

**அம்பபாலி :** அவை என்ன என் உள்ளத்தை மகிழ்விக்க வரும் பொருட்களா?...உள்ளம் என்ன விலைக்கு வாங்கவும் விற்கவும் முடிகின்ற பொருளா? கதிரவனைக் கண்டு மலரும் தாமரையை விளக்கு வெளிச்சத்தில் மலரவைக்க முயலும் மகத்தானபேதமை ..காதல் என்பது பூம்புனல்வெள்ளம் அது தானாகவடிந்து கடலுடன் சங்கமிக்கும் இதய வேட்கையின் ஆரவாரிப்பு. அதனை இந்தப் பொன்னாலும் பொருளாலும் பெற்றுவிட முனையும் ஆடவர் சமுகமே விந்தையானதுதான்...

**மாதவி .** அம்மா!.. நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்...

அம்பபாலி : (வேதனையுடன்) ஆமாம்...மாதவி... ஏழ்மையிலும்ஏழ்மை யான ஒருவன் தன் தூய அன்பை என்னிடம் செலுத்து வானேயாகில் ..நான் அவனுக்கு நாயாக உழைத்து சேவை செய்யவும் தயங்கேன். என்னை என்உள்ளத்தை விரும்பும்... எதனையோ தேடி அலையும் .. என் உள்ளத்தை அமைதிப்படுத் தும் தகுதியுடைய ஒருவனை இன்னும் காணேனடி.

மாதவி : ஆடவரை இவ்வளவுக்கு வெறுக்கும் தாங்கள் ஏன் இந்தத் தொழிலிலீடுபட்டீர்கள் ..?

அம்பபாலி : அதுதான் என் விதியடி ..விதி...இல்லாவிட்டால் வான் முட்டும் மாடமாளிகைகளும், தேன்கொட்டும் வண்ணமலர்க் கூட்டங்களும், மா னினமும் புள்ளினமும் அழகோடு உறவாடும் பேரழகும், மலைபடு கடல்படு திர வியம்நிறை களஞ்சியங்களும் பூவுலகின்சொர்க்கமெனப்புகழ்பெறும்இந்நாட்டில்...நான் ஒரு அநாதையடி .. அவமானச் சின்னமடி (விம்முகின்றாள்)

மாதவி : (பதறியபடி) அம்மா...அம்மா...

அம்பபாலி : ஆமாமடி...அழகிருந்தென்ன? கலையிருந்தென்ன? குலமில்லையே .. பிறப்பில் தூய்மையில்லையேயடி...இவ்வளவும் யாரால் வந்தது...இந்த ஆண்குலத்தால்தானே!

மாதவி : அம்மா!...

அம்பபாலி : ஆமாம் மாதவி...என்தாயை ஒரு லிச்சவகுலப் போர் வீரன் காதலித்தானும். கடிமணம் புரிவேன் என்றும் சத்தியம் செய்தானும். பேச்சில் மயங்கிய பேதை என்தாய்... அவனுக்கே தன் உடல் பொருள் ஆவி அனைத்தையுமே அர்ப் பணித்தாள். பாவி... அவள் ஆவியையே எடுத்துச் சென்றி ருக்கலாம். ஆனுல் எல்லாவற்றிற்கும்மேலான அவள் கற்பையே களவாடிச் சென்றுவிட்டான். ஊர் அலருக்கு ஆளான என் தாய்... என்னைப்பெற்று மாஞ்சோலையில் ஒரு மரத்தடியில் கிடத்திவிட்டுப் போய் விட்டாள். அவள் இறந் ாளோ... என்னவானுளோ...யாருக்குத் தெரியும்...ஆனுல் .. (உறுதியு டன்) ஒரு பெண்...தன் தாய்மை உணர்வெனும் மென்னிதழ் களைக் கருகவிட்டுச் சென்றுள் என்றுல்...அவள் மனம் எவ்வளவு ஏமாற்றப் புயலுக்கு ஆளாகி இருக்கவேண்டும்?

மாதவி : (விம்மலுடன்) அம்மா...

அம்பபாலி ; ஆமாம் மாதவி... உலகிற்கே ஆதாரமான அந்தத் தாய்மை உணர்வுகளைக் கூட இந்த வஞ்சக ஆடவர் சமுகம் எந்தளவிற்கு கீழ்ப்படுத்தி விடுகிறது பார்த்தாயா .. தங்களின் கண நேர பலவீனத்திற்காக மங்கையர் குலத்திற்கு மாசையே அளிக்க இது தயங்காது...

மரதவி : பின்பு என்னதாஞுயிற்று?...

அம்பபாலி : என்னைக் கண்டெடுத்தவர்கள்... மாஞ்சோலையில் நான்

காணப் பெற்றதால் அம்பபாலி எனப் பெயரிட்டு வளர்த்து, கலையும் கற்பித்தார்கள். பிறப்புத் தெரியாத என்னை எந்தக் குடும்பம்தான் ஏற்கும். முடிவு...இன்றைய நிலை வந்தது... என் தாய்க்கு ஆடவர் உலகம் இழைத்த தீங்கு கொடிவழியே எனக்கும் வந்துவிட்டது... இப்போது சொல்மாதவி... நான் ஆடவர் குலத்தை வெறுப்பதில் ஏதாவது தவறுண்டா...

**மாதவி :** இல்லையம்மா இல்லை... உங்கள் மனப்புண்ணிலிருந்து சீழ் பிடித்து வழியும் இரத்தத்தின் ஆறுத வேதனை எனக்குப் புரிகிறதம்மா .. அந்த இரணகாயத்தைச் சுத்தப்படுத்தி ஆறுதல் தரவல்ல கை எங்கிருக்கிறதோ... அந்தப் புண்ணிய கரங்கள் யாருடையவோ ... எனக்கு என்னவோ புல்லரிக்கிறதம்மா!...

**அம்பபாலி :** (உணர்ச்சியுடன்) மாதவி...நீயாவது எனக்கு ஆறுதல் தர அருகிருக்கிறாயே .. அதுவே போதுமடி....(தழுவிக் கொள்கிறாள்.)

[வெளியே மணிச்சத்தம் கேட்கிறது]

**அம்பபாலி :** மாதவி!...போய் என்னவென்று கேள்!...

**மாதவி :** போய் வந்து அம்மா! மாஞ்சோலையில் புத்தபிரானும் அவரதுசீடர்களும் வந்து தங்கியிருக்கிறார்களாம் ..

**அம்பபாலி :** என்ன நம் சோலையிலா?...யார் அனுமதித்தது? அதுவும் என் அனுமதியில்லாமல். அது துறவிகளின் மடமென நினைத்துவிட்டார்களா? உலக வாழ்வே அநித்தியம் என்று கூறும் அவர் இந்த வைசாலியில் புகுந்து நம் நாட்டையும் ஒரு சுடுகாடாக்கப்போகிறாரா ...?புறப்படு. வாழவிரும்புபவர்களுக்குத்தான் வைசாலி. துறவிகளுக்கு அல்ல. என் தேரை ஆயத்தம் செய். இதோ வருகிறேன்.

**மாதவி :** அம்மா ...

**அம்பபாலி :** (கோபத்துடன்) பேசாதே... சொன்னபடி செய் போ

திரை

## காட்சி 2

[மாமர நீழலிலே போதி மாதவன் தனது தருமசக்கரப்பிரவர்த்தனத்தை செய்து கொண்டிருக்கிறார் எதிரே சீடர்கள் முண்டிதம் செய்யப்பட்ட தலையுடன் விநய பாவத்துடன் அமர்ந்திருக்கிறார்கள்]

**புத்தர் :** ...ஆகவே நான் கூறுகின்றேன்– நீங்கள் எப்போதுமே விழிப்புடனிருங்கள். விழிப்பு என்பது கண்ணில்மட்டுமிருக்கக் கூடாது மனதிலிருக்க வேண்டும் .. மனம் என்பது நம் மெய் வாய் கண்மூக்குச் செவி ஆகியபொறிகளைக் கட்டும்படுத்தும் உன்னத பீடம் ..எமது செயலின்- விளைவுகள் அனைத்துமே மனதின் இயக்கத்தால் நிகழ்வன. பொறிகளில் ஏற்படும் மாயக்

கவர்ச்சியின் அதிர்வுகள் மனதையே கலக்கின்றன. குழம்பிய நீரோடையில் நீரும் தெளிவன்று ...தெரிகின்ற நிழலும் தெளி வன்று ..ஆதலால் சொல்கிறேன்... நீங்கள் எப்போதுமே விழிப் புடனிருங்கள் என்று ...

['கல் கல்' என்று நூபுரங்கள் பலமாக ஒலிக்கும் சப்தம் கேட்கிறது. சினேந்திரர் நிமிர்கிறார். அம்பபாலி அடங்காத கோபத்துடன் வருவது தெரிகின்றது. அவளின் கவினுருவம் அவரைச் சிந்தனையிலாழ்த்துகிறது.]

**புத்தர் :** (தொடர்ந்து) நீங்கள் உங்கள் வாழ்க்கையை முடிக்கும்வரை இந்த மண்ணிலேயே உழல வேண்டியவர்கள், மண்ணில் இருக் கும்வரை உங்களின் மனதிற்குச் சோதனை காலமாகவே இருக்கும். மனம் என்னும் நுகத்தடியில் பூட்டப்பட்ட காளை களான ஐம்புலன்களையும் கட்டுப்பாடாக வைத்திருங்கள். உலகில் எதுவுமே நிலையானதல்ல. உலகின் அழகு .. பெண்மை யின் நளினம் மலரின் மென்மை .. வானவில்லின் வர்ணங்கள்... எல்லாமே கணநேரத்தில் உதிரும் மாயப் பொடிகள்... அந் தப் பொடிகளில் உங்களை மறந்துவிடாதீர்கள்.

[அம்பபாலி வருகிறாள். அவரின் சொற்கள் அவளின் சினத் தீயை வளர்க்கின்றன]

**அம்பபாலி :** (கோபத்துடன்) பூஜ்யரே!... இதென்ன வேலை?...

**புத்தர் :** அம்மா!... தாங்கள் யார்? என்ன கேட்கிறீர்கள்?

**அம்பபாலி :** (அம்மா என்ற அழைப்பில் மேனி சிலிர்க்க சமாளித்து) நல்ல கேள்வி இது. என் அனுமதியின்றி என் சோலையில் புகுந்ததும், இயற்கையுடன் அமர்ந்து இயற்கையைப் பழிப்ப தும்...

**புத்தர் :** அம்மா இது ஏளனம் அன்று. உண்மையது. உண்மையை உரைப்பது என் கடமை.

**அம்பபாலி :** அதற்காக என் அனுமதியின்றி என் மாஞ்சோலையில் நுழைவதா?

**புத்தர் :** அம்மா... யாருக்கு யார் சொந்தம். எது சொந்தம்? ஏன் உனக்கே நீ சொந்தமில்லையே.

**அம்பபாலி :** (திடுக்கிட்டு) பூஜ்யரே? என்ன சொல்கிறீர்கள்?

**புத்தர் :** (சிரித்து) நான் என்ன சொல்லி என்ன? உன் உள்ளத்திலி ருப்பதைத் தான் சொல்கிறேன்.

[சுற்றுமுற்றும் பார்க்கிறாள். சீடர்கள் தலை குனிந்தவண்ணம் மௌனமாக இருக்கின்றனர். அவளறியாமலே மண்டியிட்டு அமர்கிறாள்].

**அம்பபாலி :** (கனிவுடன்) புனிதரே!...என் உள்ளக்கிடக்கையை அறிவீரா?

**புத்தர் :** அம்மா! உலக மக்களின் மனக்கிடக்கைகளே ஒன்றுதான். அங்கு நிறைவது...ஏமாற்றமும் . விரக்தியுமே ..

**அம்பபாலி :** (கண்ணீர்மல்க) புனிதரே!...

**புத்தர் :** ஆமாம். அம்மா ஆசை என்னும் பெரு நெருப்பை விறகிட்டு வளர்க்கும் மனதில் எஞ்சுவது—விரக்தி ஒன்றே. நிறைவென் பதே என்றும் எட்டுவதில்லையம்மா...

**அம்பபாலி :** உண்மைதான் அறக்கடலே...

**புத்தர் :** அம்மா ...உன்னிடம் செல்வமுண்டு .. அழகுண்டு ..கலையுண்டு,... அனுபவிக்கஇளமையும்உண்டு...ஆனால் ஏன் உள்ளம்எதனையோ தேடி அலைகின்றதே... இதிலிருந்து நீ புரிய வில்லையா இம்மாயா லோகின் நிலைமையை!...

**அம்பபாலி :** புனிதரே!

**புத்தர் :** ஆமாம். மாயத்தன்மை பொருந்திய உலோகாயுத வாழ்வில் உள்ளமும் விற்பனைப்பொருள்தான். அந்நிலையில் உனக்கே சொந்தமில்லை அது நாளடைவில் மலர் வைத்த கூடையாகவே போய்விடும். மணமிருக்கும் மலரிருக்காது. இருப்பது போன்ற நினைப்பிருக்கும். ஆனால் ஒன்றுமிருக்காது.

**அம்பபாலி :** புனிதரே!...நீங்கள் மகாமனிதர். மனங்களைப் படித்தவர் படித்ததினால் உலகைத் துறந்தவர்கள். துறவினால் உலகை உங்களுடன் ஐக்கியப்படுத்த விரும்புபவர்கள். அந்த ஐக்கியத் தில் சாந்தியையும் மோனத்தையுமே கமழவைப்பவர்கள். இந்த அபலைக்கு இனித் தாங்கள்தான் தஞ்சம்...

**புத்தர் :** அம்மா...யார் யாருக்கும் தஞ்சமல்ல. அவன் அவனே தன் விடுதலைக்குப்பாடுபடவேண்டும்...உன்னை என் முதல் பார்வை யிலேயே அளவிட்டு விட்டேன். நீவிரும்பும்எண்ணம் உனக்குத் துறவறத்திலேயே கிட்டும்.

**அம்பபாலி :** மகாப்பிரபு ! எனது இவ்வளவு வருட கால அனுபவத்தில் என்னை ஒரு மானிடப்பிறவியாக மதித்து 'அம்மா' என்ற ழைத்த முதல் சொல்லிலேயே நான் என்னையே மறந்து விட்டேன். என் ஏக்கமெல்லாம் பஞ்சாய்பறந்து விட்டது. மற் றவர்கள் எல்லாம் என்னைப் பார்க்கும் போது ஏதோ விசித்திரப் பிராணியைப் பார்ப்பது போலப் பார்ப்பார்கள் அல்லது 'மோகக்கனல்' வீசும் பார்வையை எறிவார்கள். என் அங்கங்களிலேயே அவர்கள் கண்கள் மேய்ச்சலிடும். என் உள்ளமோ அனலாய் எரியும் ஆனால் தாங்களோ தண்ணெனும் கண்ணருவியை என்மீது சொரிந்தீர்கள். என் ஏக்கத்தை யெல்லாம் போக்கிவிட்டீர்கள்...

**புத்தர் :** அம்மா !.. இந்த இளவயதிலேயே நீ எத்தகைய துன்பங்களை யெல்லாம் அனுபவித்து விட்டாய்...

அம்பபாலி : ஆனால் இந்த துன்பத்தையெல்லாம் காரிருளகற்ற வந்த கதிரவனாக தங்கள் அன்பு மொழி மாற்றிவிட்டது புனிதரே ! எனக்கு ஏதாவது அருளுங்கள் ததாகதரே !...

புத்தர் : அம்மா... நீ உனக்காக வாழாதே... உலகுக்காக வாழ். அப்போது உன் சஞ்சலமும் தொலையும், உலகின் பாவச் செயல்களும் மறையும். இதுவே உனக்கு நானளிக்கும் அறவுரை.

அம்பபாலி : (வணங்கி) உணர்ந்தேன். உண்மையை உணர்த்திய உத்தமரே !... இந்த அடியாளின் ஒரு ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

புத்தர் : (சிரித்து) ஆவலா ?.. ஆசையா?.. அதை விட்டொழிக்க மனம் வரவில்லையா...

அம்பபாலி : இல்லை. மாதவா.. ஆவலல்ல.. ஒரு விண்ணப்பம்...

புத்தர் : என்ன அம்மா அது ?

அம்பபாலி : நாளை தாங்களும், தங்கள் அடியார் கூட்டமும் என்னில்லத்தில் வந்து விருந்தேற்க வேண்டும்.

புத்தர் : அம்மா .. நான் யார் இல்லத்திற்கும் சென்று பிச்சை ஏற்பதில்லையே . இதற்கு மாறாக உன் இல்லத்திற்கு வர முடியுமா?

அம்பபாலி : புனிதரே!...தாங்கள் என் இல்லத்தில் பிச்சை ஏற்பதால் உலகிற்கு என் மனமாற்றம் புரியும். இன்றிலிருந்து நானும் ஒரு துறவியே...

புத்தர் : அப்படியானால் வருகிறோம். ஏனெனில் நீயும் எம் சங்கத்தை சார்ந்தவளாகி விட்டதால்...உன் வீடு நம் சங்கத்தின் வீடாகி விட்டது...

அம்பபாலி : அத்துடன் இன்னொரு விண்ணப்பம்...

புத்தர் : என்ன அது? .

அம்பபாலி : நீங்கள் தங்கியிருக்கும் இந்த மாஞ்சோலையை புத்த சங்கத்திற்கு அளிக்க விரும்புகிறேன்...பிரபு...

புத்தா : நன்றுதாயே. ஏற்றுக்கொள்கிறேன்!.

ஆனந்தர் : சினேந்திரா லிச்சவிப்பிரபுக்கள்வந்துகொண்டிருக்கிறார்கள்

புத்தர் : அப்படியா!...

[அம்பபாலி ஒதுங்கி நிற்கிறாள். லிச்சவிப் பிரபுசோணேசரும் மற்றவர்களும் வருகின்றனர்]

சோணேசர் : வணக்கம் ததாகதரே!

புத்தர் : வணக்கம். வாருங்கள். வந்த நோக்கம்?

சோணேசர் : தங்களைத் தரிசித்துப்போகவே வந்துள்ளோம்.அத்துடன் தங்கள் பொன்னடிகள் எங்கள் அரண்மனையில் படவேண்டுமென்றும் விரும்புகின்றோம். நாளை தாங்கள் எங்கள் அரண்மனைக்கு விஜயம் செய்ய வேண்டும்.

புத்தர் : (சிந்தனையுடன்) அப்படியா? அது முடியாதே!

சோணேசர் : முடியாதா?

புத்தர் : ஆமாம். நாளை இன்னொருவர் இல்லத்திற்கு வருவதாக வாக்களித்துவிட்டேனே!

சோணேசர் : என்ன இன்னொருவரா... வைசாலியின் உயர்தர பிரபுக்களாக நாங்கள் இருக்க எங்களை முந்தி உங்களை அழைத்தவர் யார்...

புத்தர் : ஒரு பெண்.

சோணேசர் : பெண்... யாரந்தப் பெண்?

புத்தர் : அதோ! அங்கே நிற்கிறார்களே அவர்கள்தான்...

சோணேசர் : யாரந்த மரியாதைக்குரியவர்கள் (திரும்புகிறான். அதிர்ச்சியுடன்) நீயா... அம்பபாலி...

அம்பபாலி : ஆமாம். நான் தான் அவர்களை அழைத்துள்ளேன்.

சோணேசர் : அம்பபாலி! நீ அழைத்ததும் சரிதான் ஆனால் உயர்குலத்தவர் நாங்கள் இருக்கும் போது நீ புனிதரை வரவேற்பது எமக்கு அவமானத்தை ஏற்படுத்தும்...

அம்பபாலி : (சீறி) அதற்காக...

சோணேசர் : எங்களுக்கு புனிதரை வரவேற்கும் உரிமையை விட்டுத் தரவேண்டும்

அம்பபாலி : எதற்காக நான் விட்டுத்தரவேண்டும்... நான் அழைத்தது அழைத்ததுதான். புனிதரை முதல் முதலாக நாட்டிற்கு அழைக்கும் பாக்கியம் கிட்டியதே... அதனை நான் எப்படி விட்டுத்தர முடியும்?

சோணேசர் : அம்பபாலி... உனக்குப் பத்தாயிரம் பொன் தருகிறோம். என்னசொல்கிறாய்?

அம்பபாலி : பத்தாயிரமென்ன... பார் முழுதும் உள்ள பல்வகைச் செல்வங்களை நீங்கள் என் காலடியில் கொட்டிக்குவித்தாலும், ஒப்பற்ற செல்வம்... உலகின் ஞானதீபம இப்புனிதரை வரவேற்கும் சந்தர்ப்பத்தை நான் இழக்க ஒப்பேன்...

சோணேசர் : நீ ஒரு விலை மகள்... உனக்கு அதற்கேற்ற புனிதம் கிடையாது...

அம்பபாலி : சீ... வெட்கமில்லை இவ் வார்த்தையைக் கூற,..இந்த விலை மகளின் கடைக்கண் பார்வையைப் பெற என் வீட்டின் கதவருகே கால் கடுக்க நின்ற உங்களுக்கு என்ன அருகதை உள்ளது?

சோணேசர் : முடிவாக என்ன சொல்கிறாய் .. நூறாயிரம் பொன் தருகிறோம்.

அம்பபாலி : (சிரித்து) பிரபுக்களே... நீங்கள் இந்தவைசாலியையே எனக்களித்தாலும் நான்விட்டுத்தர ஒப்பேன்... நீங்கள் நினைப்பது போல் நான் கணிகையல்ல. இன்று முதல் நானும்

ஒரு பிக்குணியே... தபஸ்வினியே... இனி உங்கள் அதிகாரம் இந்த தபஸ்வினியிடம் செல்லாது. என் சேவை இப்புனிதனின் காலடிகளுக்கே உரியது... வருகின்றேன்.

[விரைந்து செல்கின்ருள். லிச்சவிப் பிரபுக்கள் சிலையாக நிற்கிருர்கள். பகவான் மௌனமாக நிஷ்டையில் ஆழ்ந்திருக்கின்ருர். ஆனந்தர் வருகிருர்.]

ஆனந்தர் : ததாகதரே! கபிலவஸ்துவிலிருந்து ஒருசெய்தி வந்துள்ளது

புத்தர் : என்ன அது ?

ஆனந்தர் : மீண்டும் கோலியரும் சாக்கியரும் உரோகிணியாற்று நீருக்காகப் போராடுகிருர்களாம்.

புத்தர் : என்ன!...

ஆனந்தர் : ஆமாம். சினேந்திரா!... மீண்டும் பகைமை தோன்றி விட்டதாம்.

புத்தர் : (நிதானித்து) நான் எங்கிருந்து எதற்காகப் புறப்பட்டேனே... அதுவே மீண்டும் தோன்றி விட்டதா... எனது இத்தனை ஆண்டுகளின் முயற்சியும் பாழா... (மௌனமாகிருர்)

ஆனந்தர் : புனிதரே!

புத்தர் : ஆமாம். நாளை நாம் அம்பபாலியின் விருந்தினை ஏற்றுக் கொண்டதும் உடனடியாக சாக்கிய நாடு போகிறோம்.

ஆனந்தர் : (திடுக்கிட்டு) தாங்கள் இந்த உடல் நிலையில் அவ்வளவு தூரம் பயணமாவது...?

புத்தர் ; உடல் எமக்குச் சுமையே. கடமையை நிறைவேற்ற நாம் புறப்பட்டே ஆக வேண்டும்.

ஆனந்தர் : அப்படியே ததாகதரே...

புத்தர் : (லிச்சவிகளின் பக்கம் திரும்பி) பிரபுக்களே... தங்கள் நாடும் நல்லுள்ளமும் என்னை மெய்மறக்கச் செய்கின்றன. நான் ஒருபோதும் வைசாலியை மறவேன். சந்தர்ப்பம் கிட்டும்போது தங்கள் அழைப்பை ஏற்பேன். தற்போது மன்னித்து விடை தாருங்கள்.

[லிச்சவிகள் வணங்கிப் போகிருர்கள்]

திரை

## காட்சி 3

**[கபிலவஸ்துவின் அரண்மனையில் – யசோதையின் அந்தப்புரம். யசோதை முதிர்ச்சிக் கோலத்தில் விளங்க, இராகுலன் யௌவன வாலிபஞக காட்சியளிக்கிருன்]**

இராகுலன் : அம்மா... என்னை அவசரமாக அழைத்தீர்களாமே!...

யசோதை : ஆமாம் மகனே! நீ அந்த இனிப்பான செய்தியைக் கேட்டாயா ?...

இராகுலன் : (புரியாமல்) எதனைப்பற்றிக் கூறுகிறீர்கள் அம்மா ?...

யசோதை : மகனே! மீண்டும் கோலியருக்கும் நம் சாக்கியருக்கு மிடையில் உரோகிணி ஆற்றின் நீருக்காக ஆரம்பித்த போரைக் கேள்வியுற்று உன் தந்தை மீண்டும் இந் நாட்டிற்கு வந்துள்ளாராம்.

இராகுலன் : அதற்கென்னம்மா?... அவரை வரவேற்பதற்கான ஆயத்தங்களைச் செய்யவா ?

யசோதை : அவருக்கு ஆடம்பரமான அரண்மனை வரவேற்புகள் எதுவுமே பிடிக்காது மகனே... உன் தந்தை என்ற முறையில் அவரைச் சென்று பார்த்து வா என்று கூறவேஅழைத்தேன்.

இராகுலன் : (சிரித்து) என்ன பேதமையம்மா உனக்கு. தந்தை மகன் உறவுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கிறாரம்மா அவர். துறவியான அவர் என்னை வரவேற்பாரா ?... மகனே என் றென்னை அணைப்பாராம்மா!...

யசோதை : இராகுலா!... உனக்குக் கூடவா விருப்பு அற்று விட்டது?

இராகுலன் : இல்லையம்மா!... அவருக்கு பூர்வாசிரமத்திலே இருந்த உறவு நிலை வேறு. இன்றைய நிலை வேறு முன்பு தனிக் குலை ஈனும் வாழையாக இருந்தார். இன்றோ விழுதுகள் பல விட்டோடும் ஆலமரமாகி விட்டார். மரமும் விழுதும் ஒன்றாகி விட்ட நிலையில் வாழ்பவரிடம் நான் உறவு முறை கூறிச் செல்வதா ?...

யசோதை : (பரிதாபக் குரலில்) என்ன இருந்தாலும் இரத்த பாசம் விடுமா ?

இராகுலன் : அப்படியிருந்தால் அவர் என்னைப் பார்க்க அரண்மனைக்கே வந்திருப்பாரே!...

யசோதை : அவர் துறவியடா.. அரண்மனை வாழ்வை வெறுத்துச் சென்றவர் அரண்மனையை நாடி வருவாரா ?...

இராகுலன் : அம்மா... நீ உலோகாயுதம் பேசுகிறாய்! ஆனால் அவரோ முற்றும் துறந்த முனிவர். நான் செல்வதால் அவர் தவப் பெருமைக்கு இழுக்கு நேர்ந்து விட்டால்...

யசோதை : அவர் துறவியான போதிலும் உனக்குத் தந்தை என்பதனை உலகோ, அவரோ எங்ஙனம் மறுக்க முடியும்! ... அவரின் இல்லறச் சோலையில் மலர்ந்த மலர்தான் நீ என்பதனை யார் மறைக்க முடியும்.

இராகுலன் : அம்மா!...

யசோதை : ஆமாம் இராகுலா... வானத்தை திரை போட்டு மறைக்க முடியுமா... முடியாது... நீ போ... அவரைத் தரிசித்து வா.

இராகுலன் : நீரின் நிழல் போன்ற உறவுக்கு துறவிகளிடையே மருந்துக்குக் கூட மதிப்புக் கிடையாது அம்மா ?

யசோதை : உனக்குக் கூடவா இரத்தத் துடிப்புக் கிடையாது. நான்தான் பெண். அஞ்ஞானத்தில் உழலுகிறேன். என்ன இருந்தாலும் அவர் மகன் தானே நீயும்! உனக்கு எப்படி இருக்கும் நெஞ்சில் ஈரம்!

இராகுலன் : அப்படிச் சொல்லாதேயம்மா! அவர் கருணையின்வடிவம் அவருக்கு உலகமே மக்கள், புத்திரர்கள். நான் இப்போது அவரிடம் சென்று என்ன பயனைக் காண முடியும். வேண்டுமானல் கூட்டத்தோடு கூட்டமாக நின்று நானும் அவரைத் தரிசிக்கலாமே!

யசோதை : அது இல்லை மகனே! அவர் உன் தந்தை. உனக்குத் தர வேண்டியது நிறைய உளது. அவரிடம் அவற்றைப் பெற்று வா!...

இராகுலன் : (சிரித்து) அவரிடம் என்னம்மா இருக்கிறது? பிட்சை எடுத்துச் சீவிப்பவரிடம். நான் எதைப் பெற முடியும்?

யசோதை : அப்படியல்லடா மகனே! அவர் பிறக்கும் போது நம் அரண்மனையிலே மாபெரும் பொக்கிஷமொன்று தோன்றியது. ஆனல் துறவறத்தை, அவர்மேற் கொண்டதும் அது மறைந்து விட்டது. அதனை நீ காட்டச் சொல்லிப் பெற்று வா!... உன் ஆட்சிக்கு நிறையப் பயன்படும்.

இராகுலன் : அப்படியா!... இது எனக்குப் புதிய செய்தி. நிச்சயம் என் உரிமையை... எனக்கு உரியதை அவரிடமிருந்து பெற்று வருவேன். அவர் உரோகிணி ஆற்றங்கரையில் தங்கியிருக்கிருர். நான் சென்று வருகிறேன் தாயே.

யசோதை : போய் வா... மகனே... வெற்றியுடன் திரும்பு!

இராகுலன் : அப்படியே!...

திரை

(தொடரும்)

# நங்கிக் கூடல்

## 'செங்கை ஆழியான்'

''உங்கள் கண்களுக்கு நான் சிறுவனாக இருக்கலாம். ஆனால், நான் வயதுவந்த இளைஞன், அப்பா! நானா சிறுவன்...? சித்தப்பா என்னி லும் பார்க்க ஐந்தாறு வயதுதான் மூத்தவர்...''

பரராசசிங்கன் முடிபதியாகவே விரும்புகின்றான் என்பதனையும் அதற்கு அவனது தாய் தூண்டுதலாக இருக்கிறாள் என்பதனையும் அவர்கள் பேச்சுக்களில் இருந்து தீர்க்கமற அறிந்து கொண்ட பரநிரு பர் சிந்தனையில் ஆழ்ந்தார். இளநரையோடிய தன் தலையைத் தடவிக் கொடுத்தபடி மகனைக் கேட்பார்:

''குமாரா, உன் சித்தப்பா மன்னனாவதை நீ விரும்பவில்லையா?''

''விரும்புகிறேன், அப்பா! ஆனால் எனக்கு உரிமையான அரசை அளிக்க நான் விரும்பமாட்டேன்...''

''உன்னால் யாழ்ப்பாண அரசின் முடியைத் தாங்க முடியுமெனக் கருதுகிறாயா?...''

''நிச்சயமாக முடியும்...''

''பரிபாலனம் என்பது பஞ்சு மெத்தையல்ல, குமாரா?''

''அறிவேன், அப்பா!''

''குதர்க்கவாதம் பேசுகிறாய்?''

''உரிமைக்காகப் பேசுவதில் குதர்க்கம் என்ன இருக்கிறது?''

''இன்று அரசைக் கருமேகங்கள் சூழ்ந்துள்ளன, குமாரா''

''வீணாகப் பயமுறுத்துகிறீர்கள். நேரடியாகக் கூறுங்கள்... உனக்கு அரசை அளிக்க விருப்பமில்லை என... அதற்கு ஏன் இவையெல்லாம்...''

''செல்வா, உன்னை நான் பயமுறுத்தவில்லை. உண்மை நிலையை விளங்க வைக்கவே விரும்புகின்றேன். உன்னால் வன்னியர்களை அடக்க முடியுமா? போர்த்துக்கேயப் பறங்கிகளிடமிருந்து அரசைக் காப்பாற் றத்தான் முடியுமா?''

''முடியும்...... நிச்சயமாக முடியும்! பரராசசேகரரின் பேரன் என்ன கோழையா, அப்பா?''

''உன் உரிமை இவ்வரசு எனக் கூறும் உன்னால் அந்த உரிமை யைக் காப்பாற்ற முடியுமா என்பதே என் சந்தேகம். குமாரா! உன் னிடம் ஒன்றை வேண்டுகின்றேன்... என் தந்தை என்னிடம் யாசித் ததை உன் தந்தையாகிய நான் உன்னிடம் யாசிக்கின்றேன். உனக்கு உரிமையானது தான், இவ்வரசு. ஆனால் சங்கிலிகுமாரனை மன்னனாக் குவேனென உன் தாத்தாவிற்குக் கொடுத்த, வாக்குறுதியைக் காப் பாற்ற உதவி செய்...'' என ஏழுரதிபர் பரநிருபசிங்கர் வேண்டினார்.

பரராசசிங்கனின் முகத்தில் ஏமாற்றமும் சினமும் குமுறின. அவன் ஆத்திரத்தோடு தந்தையைப் பார்த்துவிட்டு வெளியேறினான். பரநிருப சிங்கர் மனைவியை நோக்கி கவலையோடு விளிப்பார்:

''தேவி, உனக்குக் கூடவா அரசமோகம்?"

'விருட்'டென்று எழுந்த மாதவிதேவி கணவனை அனல் தெறிக்கப் பார்த்தாள்

"நீங்கள் ஒரு துரோகி! உங்களுக்குச் சொந்தமான அரசை யாரோ ஒரு வைப்பாட்டி மகனுக்கு அளித்தீர்கள்...''

பரநிருபசிங்கரின் முகம் திடீரென மாறியது. தன் சிறிய தாயின் மேல் மாறாத அன்பும் அபிமானமும் வைத்துள்ளவர், பரநிருபர். மனைவியின் வார்த்தைகள் அவரைக் கொதிப்படைய வைத்தன.

''என்ன சொன்னாய்?" என்று குமுறிய பரநிருபசிங்கர், "அடி மாதவி, ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள்...... அந்த வைப் பாட்டியின் மகனையே மன்னனுக்கிக் காட்டுகிறேன்..." என்றார்.

மனதில் எழுந்த சலனங்கள் அறவே அழிந்தன. மாதவிதேவி குமுறிக் குமுறி அழுதாள்.

இவ்வளவையும் பரராசசிங்கன் வெளியே கேட்டுக்கொண்டு நின் றான். அவன் மனதில் தந்தையின் பிடிவாதமும், தாயின் வேதனையும் தோன்றிய, அதே நேரத்தில், யாழ்ப்பாண அரசின் மணி முடியும் தோன்றி ஆசையை ஊட்டியது.

'இதற்கெல்லாம் வழிவகுக்கக் கூடியவர் ஒருவரே' என எண்ணிய பரராசசிங்கன் வேகமாக வெளியே வந்தான்; வந்தவனை நோக்கி அந்த ஒருவர் பல்லக்கில் இருந்து இறங்கி வந்துகொண்டிருந்தார்.



12

## கந்தன் மீது ஆணை.

மந்திரிகளுள் அடியார்க்கு நல்லாருக்கு அடுத்ததாக மிகுந்த செல்வாக்குடையவராக விளங்கியவர் அப்பா முதலியாவர். வயோ திபத்தின் எல்லையினை நெருங்கிக் கொண்டிருந்த போதிலும், கூனல் விழாத முதுகு; கனவுகளும் அறிவும் சேர்ந்து சுடர் விடும் விழிகள்; அடர்ந்து வளர்ந்திருந்த தாடி; இளமை நினைவுகள் இவைதாம் அப்பா முதலி. தொண்டை மண்டலத்தினின்றும் வந்த பிரபுக்களின் வம்சத்தில் ஒருவராக அவர் விளங்கியதால் பழைய சிறப்பின் காரண மாகப் பிறரை அடக்கியாளும் தன்மை இவரிடம் காணப்பட்டது.

இந்த அப்பா முதலியே தனக்கு அரசுரிமை கிடைக்க வழி வகுக்கக் கூடியவர் என்று பரராசசிங்கன் எண்ணியதில் வியப்பில்லை.

எதிரே அவரே வந்தார்.

''வாருங்கள், உங்களிடம் வரவே புறப்பட்டேன்'' என்று விரைந்து எதிர்கொண்டு வரவேற்றான், பரநிருபன் மைந்தன்.

பரராசசிங்கனை நிமிர்ந்து பார்த்தார், அப்பா முதலி.

''என்ன பரராசா, என்னிடமா? அப்படி என்ன விடயம்? சதுரங்கம் ஆடவா?...''

''சதுரங்கம்தான், ஐயா... ஆனால், காய்களை நகர்த்தியல்ல. இங்கு நின்று பேசுவது நல்லதல்ல. உங்கள் மாளிகைக்குச் சென்று பேசுவோம்...'' என்ற பரராசசிங்கனை ஒருவிதமாக ஏறிட்டுப் பார்த்த அப்பா முதலியின் கண்களில், அவன் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் நிழலாகப் படிந்திருப்பது தெரிந்தது.

அவர் எதுவும் பேசாது, தன் பல்லக்கை நோக்கி நடந்தார். அப்பா முதலியின் பல்லக்கோடு பரராசசிங்கனின் புரவியும் மென்னடை பயின்றது.

தன் நீண்ட தாடியை உருவியபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்த அப்பா முதலியின் மன அரங்கத்திலே பல நிகழ்ச்சிகள் நடனமிட்டன; இதழ் கோடியில் நெளிந்த புன்னகை தாடிக்குள் மறைந்தாலும், ஓரளவுணர முடிந்தது. குறுக்கும் நெடுக்குமாக நடந்தவர் திடீரென நின்று, முன்னமர்ந்திருந்த பரராசசிங்கனை நோக்கி, ''பரராசா! சென்ற இரவு இவ்வளவு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளனவா? உன் தந்தை தான் மன்னனாக விரும்பாது, தன் முடியைத் தட்டிக்களிக்க முடிவு செய்ததை என்னால் நம்ப முடியவில்லையே? அதற்காகத்தானா நாளை அரசசபை கூடப்போகிறது? நீ கூறுவது உண்மைதானா? உன் தந்தை முடியை வேண்டாமென்று கூறினார்?' என்று கேட்டார்.

''வேண்டாமென்றுமட்டும் கூறவில்லை, தன் தம்பிக்கு முடி சூட்டுவதாகவும் கூறியுள்ளார்! என்றவன் குரலில் சோகமும், குரோதமும் காணப்பட்டன.

''உனக்குச் சேரவேண்டிய அரசை உன் சித்தப்பனுக்களிப்பதை நீ விரும்பவில்லை! உன்னுரிமை உனக்குத் தேவையென்கிறாய். அப்படித் தானே?''

''ஆமாம்! எனக்கு எப்படியாவது இவ்வரசின் மணிமுடி வேண்டும்! என்தந்தை இதை எனக்குத்தர விரும்பாவிடினும் என் தாய் விரும்புகிறாள், நான் மன்னனாக வேண்டுமென! உங்களைத் தவிர எனக்கு உதவுவார் வேறில்லை! நேர்மைக்கு நீங்களே மதிப்பளிப்பவர்கள்!...''

''பரராசா! நீ என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?'' என்று வினவினார்.

''நீங்கள் செய்யக் கூடியதையே நான் உங்களிடம் கேட்கிறேன். நாளை அரசசபை கூடப் போகிறது! அதில் உங்கள் எல்லாரினதும் அபிப்பிராயங்களும் கேட்கப்படவிருக்கிறது! அடியார்க்கு நல்லார் மன்

னரின் வார்த்தைகளுக்கு மறுக்காது உடன்படுபவர்! நீங்கள்தான் எனக்காக வாதிட வேண்டும்! உங்களது அபிப்பிராயத்தோடு ஒத்துப் போகப் பலர் இருக்கிறார்களே?... என்ன சொல்கிறீர்கள்! இந்த உதவியை எனக்காக நீங்கள் செய்தேயாகவேண்டும்! அதற்காக, உங்களுக்கு நான் எதையும் செய்யக் காத்திருக்கிறேன்!''

''உண்மையில் உரிமையுடையவன் நீதான்! சங்கிலிகுமாரன் உரிமையற்றவன் மட்டுமல்ல, பட்டத்துராணிக்குப் பிறந்தவனுமல்ல-!''

ஒருமையில்பேச முன்பு தயங்கிய அப்பா முதலி இப்போது தயங்கவில்லை... சங்கிலிகுமாரன் மீது மாறாத குரோதமுடையவனாகப் பரராசசிங்கன் இருப்பதையும், அவ்வாறு பேசுவது அவனுக்கு மேலும் குரோதவுணர்ச்சியை வளர்க்குமெனவும் எதிர்பார்த்தபடியே ஒன்றும் பேசாது பரராசசிங்கன் இருந்தான்; அப்பாமுதலியே தொடர்ந்தார்:

''பரராசா! சிறு வயதிலிருந்து நீ என் மாளிகையில் ஓடி விளையாடியவன். என் மகனைப் போல வளர்ந்தவன். உனக்கு உதவுவது என் கடமை. உன்னை எப்படியும் யாழ்ப்பாணச் சிம்மாசனத்தில் அமரச் செய்வேன்......'' என்று பேசியபோது, பரராசசிங்கன் விருட்டெழுந்து அப்பாமுதலியின் கைகளைப் பற்றிக்கொண்டு ''உண்மையாகவா? சொன்ன சொல் தவறமாட்டீர்களே?'' எனவும் கேட்டான்.

''உண்மையாகவே? என் சொல்லில் உனக்கு நம்பிக்கையில்லையா? நல்லூர் கந்தன் மீது ஆணையாகக் கூறுகிறேன், உன்னை மன்னனாக்குவேன்!... ஆனால்...''

அப்பா முதலியின் 'ஆனாலி'ல் அவரது இலட்சியமும், மனோரதமும் அடங்கிக்கிடந்தன! ஆனால், பரராசசிங்கனுக்குப் பேரிடியாக இருந்தது.

''ஆனால்......''

''உன்னை அரசனாக்கினால், எனக்காக எதையும் செய்யக் காத்திருப்பதாகக் கூறினாயல்லவா?...''

''அதிலென்ன...?''

''எனக்காக எதையும் செய்வாயா''

''என்னால் செய்யக் கூடியதையே நீங்கள் கேட்பீர்களென எனக்குத் தெரியும்! கேளுங்கள் உங்களுக்காக எதையும் செய்வேன்!''

அப்பா முதலி பழையபடி திரும்பவும் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினார். சிந்திப்பவரைப் போலக் காணப்பட்டார். அப்பா முதலியின் மன அரங்கிலே இனிய காட்சிகள் பல தோன்றின. பரராசசிங்கன் அவரது இலட்சியச் சதுரங்கத்தின் தலைக் காயாகத் தெரிந்தான். அவர் கண்களின் முன்னே யாழ்ப்பாணத்துச் சிம்மாசனம் தோன்றியது. அதில் அவர் மகள் உதயவல்லி ராணியாக அமர்ந்திருக்கிறாளா?

''பரராசா! உன்னால் முடியக் கூடியதையே உன்னிடம் கேட்கிறேன். உன்னிடம் எனக்கு என்றும் தனியானதோர் அன்புண்டு!...'' என்றார்.

''அறிவேன்! என்னவலைக் கூட்டாது கூறுங்கள்...''

''கூறுகிறேன்! சுருக்கமாகவே கூறி விடுகிறேன்! "நீ மன்னனானால்

என் மகளை உன் பட்டத்து ராணியாக ஏற்றுக் கொள்வாயா ?''

பரராசசிங்கன் கண் முன் அழகே யுருவான உதயவல்லி காட்சி தந்ததோடு, புன்னகையும் புரிந்தாள்; அவளது குறு குறுத்த விழி களையும், சிறிது அதிகமாக மேலுயர்ந்த நெற்றியையும், நெளி நெளி யான குழற் கற்றைகளையும், மாதுளை உதடுகளையும், விம்மிப் பூரித்த மார்பகங்களையும், அளவோடமைந்த இடையினையும், தன் மனக் கண்களில் விளையாடவிட்ட பரராசசிங்கன் மகிழ்ச்சியினால் பின்னால் விளையப் போகிற அனர்த்தங்களையுணராது அப்பா முதலியின் பேச் சிற்கு உடன்பட்டான்.

'நீ மன்னனானால் என் மகளை உன் பட்டத்து ராணியாக ஏற்றுக் கொள்வாயா ?' என அப்பா முதலி பரராசசிங்கனிடம் கேட்டுக் கொண்டதைத் தற்செயலாக, பரவையிடமிருந்து விடைபெற்று வந்த உதயவல்லி கேட்க நேர்ந்தது. அவள் தலை மேல் மாளிகையே இடிந்து விழுந்தது போன்ற பிரமையேற்பட்டதால் கண்கள் இருளவே நிலை தளர்ந்து 'அம்மா' என்றலறியபடி நிலத்தில் சாய்ந்தாள்.



13

## சூழ்ச்சி உருவாயிற்று.

காலை வேளையில் அரச சபை கூடியது. அழகான மண்டபமது. எழிலார்ந்த தூண்கள் மேல்விதானத்தைத் தாங்கி நிற்க, ஆலயம் ஒன்றின் புனிதத் தன்மையோடு அம் மண்டபம் விளங்கியது. சிம்மா சனத்தில் மன்னர் கம்பீரமாக அமர்ந்திருக்க முயன்றும் வயோதிபம் காரணமாக முடியவில்லை. அவரை அடுத்துக் காணப்பட்ட இருக்கை களில் ஏழுரதிபர் பரநிருபசிங்கரும், சங்கிலிகுமாரனும் அமர்ந்திருந் தனர்.

மந்திரிகள் யாவரும் சமுகந் தந்திருந்தனர். முதல் மந்திரி அடியார்க்கு நல்லார் அமைதியாக அமர்ந்திருந்தார். அவரை அடுத்து இருந்த ஆசனங்களில் அப்பா முதலி, முத்துலிங்க முதலி, தனிநாயக முதலி, மழவராயன் போன்ற ஏனைய மந்திரச் சுற்றத்தவர்கள் காணப் பட்டனர்.

மயங்கி விழுந்த மகள், நன்கு தெளியாத நிலையில் மஞ்சத்தில் கிடக்கும் காட்சியும், பரராசசிங்கனுக்கு கந்தன்மீதாணையாக வாக்குப் பண்ணிய காட்சியும் மனதில் எழுந்ததால் அப்பா முதலி அமைதி யில்லாது தவித்தார்.

இனுவில் பேராயிரவன், பச்சிலைப் பள்ளி நீலகண்டன் போன்ற கிராமத் தலைவர்களும், ஒவ்வொரு திசைப் படைத் தலைவர்களும் வந்திருந்தனர். நெடுந்தீவு வெடியரசன் மழவ மாப்பாணனும் வந்திருந்தான்.

தங்களை அரச சபையில் உள்ளவர்கள் காணமுடியாத இடத்தில் அரசகுலப் பெண்டிர்கள் அமர்ந்திருந்தனர். யாவரினது கவனமும் சபையில் நடக்கப்போவதைக் காண ஆவலாக இருந்த வேளையில், பரவையினது கவனமும் உள்ளமும் அரசசபையில் நடக்கப் போவதில் கவனம் செலுத்தியதோடு, சேனாதிபதி சம்பகமாதாக்கருக்கு அருகே கம்பீரமாக அமர்ந்திருந்த கனகராயன் மீதும் நிலைத்திருந்ததை யாரும் கவனிக்கவில்லை.

நல்லூர்க் கந்தனது ஆலயக் காண்டா மணி ஒலித்ததைத் தொடர்ந்து, சபையும் ஆரம்பமாகியது.

மன்னர் பரராசசேகரர் எழுந்தார்.

''சபை கூடிய காரணத்தை ஏற்கனவே நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு இக்கட்டான கால கட்டத்தின் எல்லையில் இச்சபை கூடுகின்றது. யாழ்ப்பாண அரசினை சதிகாரர்களும், ஆதிக்க வெறியர்களும் சூழ்ந்துள்ள வேளையில், நல்லதொரு முடிவெடுக்க நாம் கூடியுள்ளோம்.'' மன்னர் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் அன்றைய நிலையையும், அபாயச் சூழ் நிலையையும் விளக்கினார். "பலம் வாய்ந்த மன்னனொருவன் இன்று நமக்குத் தேவை. உடலுறுதியும் உளவுறுதியும் வாய்ந்த ஒருவன் இவ்வரசின் இன்றைய மன்னனாக வேண்டும் என் கடைசி மைந்தன் சங்கிலிகுமாரனின் வீரத்தை நீங்கள் அறிவீர்கள். நாடே அறியும். அவன் கரங்களில் இவ்வரசினை ஒப்படைக்கில் எதிர்காலம் ஒளி நிறைந்ததாக அமையும்! மூத்தவன் இருக்க இளையவன் பட்டம் சூட்டுவதா என நீங்கள் கேட்கலாம். உங்கள் கேள்வியில் நியாயமுண்டு. ஆனால், பரநிருபசிங்கன் வைத்தியத்துறையில் கூடிய சிரத்தை கொண்டுள்ளான். ஆதலால் அடுத்த யாழ்ப்பாண மன்னன் சங்கிலிகுமாரன் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்..''

சபையில் நீண்ட அமைதி நிலவியது. நிகழப்போகும் விபரத்தை முன்னமே சபையினர் அறிவார்கள். நீண்ட அமைதியின் கழிவில் மந்திரி அடியார்க்கு நல்லார் எழுந்தார்.

''சங்கிலிகுமாரரை மன்னராக ஏற்பதில் நமக்கு மகிழ்ச்சியே. அடுத்த மன்னராக வேண்டிய பரநிருபரே தன்பட்டத்தைத் தம்பியாருக்கு அளிக்க முன் வரும்போது, நம் அபிப்பிராயம் எதற்கு? நமக்கு நல்லவற்றையே மன்னர் செய்வார் என்பதை நாமறிவோம்!''

இவரது பேச்சுக்கள் அப்பாமுதலியின் நெஞ்சத்தில் கனலென விழுந்தன. தன் சகாக்களை ஒரு முறை ஏறிட்டு நோக்கி விட்டு வார்த்தைகளைக் கொட்டத் தொடங்கினார்.

''என் அபிப்பிராயத்தில் வேறுபாடுகள் இருக்கலாம். இருந்தால் சபை மன்னிக்க வேண்டும்.'' என்ற பீடிகையோடு ஆரம்பமான அவரது பேச்சினை சபை கவனித்தது. சங்கிலிகுமாரன் அவர் மீது விழிகளை ஓட்டினன்.

அரச உரிமைகள் பற்றி அப்பா முதலி பேசினர்; அரச பரம்பரை ஒழுங்கு குறித்து அவர் எடுத்துரைத்தார்; ''சங்கிலிகுமாரர் மன்னராவதைப் பற்றி என்னை விட யாருமே மகிழ முடியாது. ஆனல் சபை நன்கு சிந்திக்க வேண்டும். குழப்பங்களையும் பகைவர்களையும் அடக்கி அழிப்பதற்காக, அரச முறை தவறிச் சங்கிலிகுமாரரை மன்னராக்கப் போகின்ருேம். அவரை மன்னராக்குவதால்—உரிமையற்ற ஒருவரை மன்னராக்குவதால், உள்ள குழப்பங்கள் கூடுமேயொழியக் குறையாது. சங்கிலிகுமாரர் பெரும் வீரர்; ஆளுந் திறமையுடையவர். ஆனல்...''

இவ்வேளை பரநிருபசிங்கர் குறுக்கிட்டார்.

''மந்திரியாரே, நீரும் புதிய பிரச்சனைகளுக்கு வித்திடுகிறீர் போலிருக்கிறது. நீர் எண்ணுவது போல மன்னராக உரிமையற்றவனல்லன் சங்கிலி. அவனும் என் சிறியதாய் பிள்ளை என்பதை மறந்துவிட்டீர்...''

'வைப்பாட்டியின் மகன் தானே' எனக்கூற அப்பா முதலியின் உதடுகள் துடித்த போதிலும் அடக்கிக் கொண்டதோடு, பரராசசிங்கனை மன்னனுக்குவதே எவ்வகையிலும் சிறந்தது என வாதித்தார். அவருடைய வாதம் சபையில் சிறிது கலகலப்பை ஏற்படுத்திய போதிலும் வெற்றி பெற முடியவில்லை.

அடிபட்ட புலியானர், அப்பா முதலி.

சங்கிலிகுமாரன் மன்னனுவதையிட்டு மகிழ்ந்த உள்ளங்கள் பல. இருந்த போதிலும், சில பொறாமையினுலும் அசூசையினுலும் கொதித்துக்கொண்டிருத்தன. சங்கிலிகுமாரனுக்கே யாழ்ப்பாண அரசு என முடிவாகத் தீர்மானித்ததைக் கேட்டு பரராசசிங்கன் கொதிப்போடு தன் தாயிடம் சூளுரைத்தான்.

''யாழ்ப்பாண மணிமுடி எனக்குச் சொந்தமானது. அதை எப்படியும் அடைந்தே தீருவேன்''

இவற்றைப் பரநிருபசிங்கர் கேட்க நேர்ந்தபோது, தன் கண்களில் சுரந்த விழி நீரைத் துடைத்துக் கொண்டதோடு, தன் மகனுக்காகப் பச்சாத்தாபமும் அடைந்தார்.

அப்பா முதலியின் மனதில் ஏமாற்றத்தின் எதிரொலி கேட்டுக் கொண்டே இருந்தது. நிம்மதியின்றித் தவித்துக் கொண்டிருந்த போது, பரராசசிங்கன் வந்தான்.

''உங்கள் ஆணை எங்கே, மந்திரியாரே?'' எனப் பரராசசிங்கன் ஏளனமாகக் கேட்டான்

பரராசசிங்கனின் ஏளனம் அவரை வெறி கொள்ள வைத்தது.

'பரராசா! தந்த ஆணையை நான் மறக்கவில்லை! உன்னை எப்படியும் யாழ்ப்பாணச் சிம்மாசனத்தில் இருத்தியே தீருவேன். என்னுயிரின் இறுதித் துடிப்புள்ளவரை, உன்னை யாழ்ப்பாண அரசின் மன்ன

ணாக்குவதற்காக என் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணிப்பேன். உன்னை மன்னனாகக் காண நான் விரும்புவதிலும், உன் பட்டத்துராணியாக என் மகளைக் காண நான் ஆசைப்படுகின்றேன்'' என்று அப்பா முதலி வெறி கொண்டவரைப் போலக் கூறிய போது, 'உங்களால் அது முடியவே முடியாது'' என்ற மூன்றாவது குரல் ஒன்று எழவே, திடுக்குற்ற இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

நின்றவள், உதயவல்லி.



14

## ஒரு மங்கை வந்தாள்.

உதயவல்லியின் மயக்கம் அடுத்த நாள் கூடக் கலையவில்லை. இடையிடையே சுய நினைவு வந்தபோதெல்லாம் பல பயங்கர நினைவுகள் தலைகாட்டி வேதனை தந்தன. பரராசசிங்கனை மன்னனாக்குவதற்காகத் தந்தை செய்கின்ற சூழ்ச்சியை அவள் உணர்ந்து கொண்டாள்.

'பட்டத்து ராணியாக என்னைக் காண ஆசைப்படுகிறாரே? இப்போதுகூடத் தான் சங்கிலிகுமாரனின் பட்டத்துராணியாகப்போவதை அறியாரா? அவரது இலட்சியக் கனவு இதுவானால், எவ்வளவு சுலபமாக நிறைவேற வழியிருக்க ஏன் குறுக்கு வழியில் தலையிட்டு ஆணை செய்ய வேண்டும்?'

உதயவல்லியின் உள்ளத்திலே பலவகை எண்ணங்கள் ஒருங்கே குமுறின.

'உங்கள் மீது குற்றமில்லை. நான் என்றோ உண்மையை உங்களிடம் கூறியிருக்க வேண்டும். என்றோ கூறியிருந்தால் இவ்வளவும் நடந்திராது. இப்போதுதான் என்ன? காலம் கடந்துவிடவில்லை. இப்போதே உங்களுக்கு உண்மையைக் கூறிவிடுகிறேன்'

மஞ்சத்தைவிட்டு மெதுவாக எழுந்த உதயவல்லி வெளியே வந்தாள்; தோழிகள் எவரையும் காணவில்லை. தந்தையின் ஆலோசனை மண்டபத்தை நாடி வந்தவள், மீண்டும் மயக்க நிலையை அடையக் கூடியதாக உள்ளே அப்பாமுதலியின் வெறி கொண்ட குரல் ஒலித்தது.

''பரராசா, தந்த ஆணையை நான் மறக்கவில்லை. உன்னை எப்படியும் யாழ்ப்பாணச் சிம்மாசனத்தில் இருத்தியே தீருவேன். என்னுயிரின் கடைசித் துடிப்புள்ள வரை என் உடல், பொருள், ஆவி அத்தனையையும் உன்னை மன்னனாக்குவதற்காக அர்ப்பணிப்பேன். உன்னை மன்னனாகக் காண விரும்புவதிலும், உன் பட்டத்துராணியாக என்மகளைக் காண ஆசைப்படுகின்றேன் ..''

உதயவல்லி.. அருகிலிருந்த தூணைப்பற்றிக் கொண்டாள். நெடிய மூச்சுக்கள் வெளிவந்தன.

''உங்களால் அது முடியவே முடியாது'' என அலறினுள்.

மூன்ருவது குரலால் திடுக்குற்ற அப்பா முதலியும், பரராசசிங்கனும் திரும்பிப் பார்த்தபோது உதயவல்லியைக் கண்டார்கள். ஒரு கண நேரத்தில் பரராசசிங்கனின் முகம் வெளுத்துவிட்டது.

''உதயவல்லி... எப்படி இங்கு வந்தாய்?''

''யாரும் வரச் சொல்லவில்லை! தங்களது வீண் கனவுகளும் ஆணையும் என்னை இங்கு வரச் செய்தன! உங்களோடு பேசுவதற்காக வந்தேன்''

''வா, உதயா...'' என அப்பாமுதலி மகளை அழைத்துச் செல்ல முயன்ருர்.

''ஆணையை மறந்து விடாதீர்கள்! நான் பின்பு சந்திக்கின்றேன்'' என்று பரராசசிங்கன் விடை பெற்றுச் சென்ருன்.

உதயவல்லி தந்தையின் தோளில் முகம் புதைத்துக் கொண்டு 'கோ'வென்று அழுதாள். மகளின் கூந்தலை அன்போடு தடவியபடி, ''உதயா, ஏன் அழுகிருய்? அழாதே... நீ அழுவதைக் காண என்னல் பொறுக்கமுடியவில்லை'' என்று கூறித் தேற்றினுர்.

அப்பாமுதலி தன் தலைமீது கை வைத்துத் திகைத்துப் போய் இருந்தார். எவ்வளவு தூரம் தங்களையே அறியாமல் விதி வாழ்க்கையில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது, என்பதை அன்று உணர்ந்தார்.

''இதை ஏன் முன்பே நீ எனக்குக் கூற ில்லை?''

''கூறுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லையே, அப்பா!''

அப்பாமுதலியின் உள்ளத்தில் பெரிய போராட்டமே நிகழ்ந்ததால் குறுக்கும் நெடுக்குமாக நடைபயிலத் தொடங்கினுர். 'நான் எவ்வளவு பிழை செய்து விட்டேன்! சங்கிலி உதயவல்லியை நேசிப்பது தெரிந்திருந்தால், பரராசசிங்கனை மன்னனுக்குவதாக வாக்களித்திருக்க மாட்டேனே? வாக்குமட்டுமா அளித்தேன்: நல்லூர்க்கந்தன் மீது ஆணையுமல்லவா செய்தேன்! என்மீது பிழையில்லை. உண்மையை அறியுமுன் பரராசசிங்கனுக்கு வாக்களித்தேன். ஆனல், ஆணை வேறு செய்தேனே? பரராசசிங்கன் என் மகளை மணந்து பட்டத்துராணியாக்குவான். சங்கிலி அதைச் செய்வானு? ஏன் செய்யமாட்டான்? மற்றவர்கள் உடன்படுவார்களா? எப்படியிருந்தாலும், சங்கிலி உதயவல்லியை மணந்து பட்டத்து ராணியாக்கினுல் மட்டும் என் கனவு நிறைவேறிவிடுமா? யாழ்ப்பாண அரசியலே என் எண்ணப்படி நடக்க வேண்டுமானுல், சங்கிலி அதற்கு இடங் கொடான்! பரராசசிங்கன் மட்டும் மன்னனுனல், என் கையில் தான் அரசாட்சி! அப்படியாயின்......? பரராசசிங்கன் முடி சூடவேண்டும்! அவனையே உதயவல்லி மணக்க வேண்டும்!

''உதயவல்லி! சுருக்கமாகக் கூறிவிடுகிறேன்! நீ சங்கிலியை மறந்துவிடு!''

அவளின் முன் அறையே சுழன்றது! திரும்பவும் மயக்கம் வந்துவிடும் போலிருந்தது; மஞ்சத்தை அழுத்திப்பிடித்துக் கொண்ட

ளள், விக்கித்து நின்ருள். தந்தை தன் எண்ணத்திற்கு மறுக்கமாட்டாரென எண்ணியிருந்தவளுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம்?

''என்ன கூறுகிறீர்கள் ''எனத் திகைப்பிலிருந்து மீளாது கேட்கவே, ''சங்கிலியை மறந்துவிடும்படி கூறினேன்!'' என்ருர் அப்பா முதலி.

''அவரிடம் என்ன குறைகண்டீர்கள், அப்பா?''

''குறைகள் பலவுள்ளன! உதயவல்லி! பரராசசிங்கனுக்கு உன்னை மணம்முடித்து வைப்பதாக நான் முடிவு செய்தது மட்டுமல்ல ஆணையும் தந்து விட்டேன்! ! என் சொல்லைக் காக்கவேண்டியவள் நீ ஆதலால், உதயவல்லி! அவனை மறந்துவிடு!''

''உங்கள் வாக்கைக் காப்பாற்ற என்னைப் பலியாக்கப் பார்க்கிறீர்களா? முடியவே முடியாது அப்பா! முடியாது! ஒன்றில் நான் மணப்பது அவராகவிருக்கும்; அல்லது ..''

தன் விருப்பத்திற்கு மகள் இணங்காததனுல் கோபமடைந்த அவரை, உதயவல்லியின் பேச்சு மேலும் கோபமூட்டவே, ''என்னைப் பயமுறுத்துகிருயா ? நான் ஒருவருக்கும் வாக்குக் கொடுப்பதுமில்லை! கொடுத்த வாக்கை நிறைவேற்ருது விடுவதுமில்லை! உதயவல்லி! முடிவாகக் கூறுகிறேன். சங்கிலி மன்னனுனுலும், கேவலம், அவனொரு வைப்பாட்டியின் மகன். அதுமட்டுமல்ல...!" எனத் தொடர்ந்தபோது, தன் காதுகளை மூடிக்கொண்ட உதயவல்லி, ''ஐயோ! அப்பா அப்படி எல்லாம் கூருதீர்கள்!'' என அலறினுள்.

''அதுமட்டுமல்ல, உதயவல்லி! நடத்தை கெட்டவன்''

அப்பா முதலியின் கால்களைக் கட்டிக் கொண்டவள், கண்ணீரால் கழுவியபடி, ''ஐயோ! அப்பா! அபாண்டமான பழிகளையெல்லாம் அவர் மீது சுமத்தாதீர்கள்! ஒன்றுமறியாதவர் அவர்......'' என விம்மினுள்.

''நான் அபாண்டமாகப் பழி கூறவில்லை! மக்கள் பேசிக் கொள்கிருர்கள்!''

''விசமிகளின் செயலப்பா, இது! ...''

உதயவல்லியின் கண்ணீர் அப்பா முதலியின் கடின இதயத்தைக் கரைவிக்கவே செய்தது; என்ன கூறினுலும், மகள் மனம் மாற மாட்டாள் என்பதைத் திடமாக நம்பிய அவர் புதிய வழியொன்றில் அவளை மடக்க முடிவு செய்தார்; ஆனுல் அதற்குள் அதற்குச் சாதகமாக உதயவல்லி பேசினுள்:

''அப்பா!...'' என அழைத்தவள் சிறிது தயங்கிவிட்டுத் தொடர்ந்தாள்! ''என்னை யாழ்ப்பாணத்தின் அரசியாகக் காண விரும்புகிறீர்கள்! நான் அவரை மணந்துகொள்வதால் அவ்வெண்ணம் நிறைவேறுமல்லவா ?''

அரசியாகக் காண மட்டுமா வீரும்புகிறேன்; ஆட்சியே என் கைகளில் இயங்கவல்லவா விரும்புகிறேன்!' எனக் கூருவிட்டாலும் எண்ணிக் கொண்டார்.

''உன்னை அவன் மணந்து கொள்வது சரி! பட்டத்து ராணியாக ஏற்பானா? வேறொரு பெண்ணை அரச குலத்திலிருந்து மணந்து கொண்டால்......''

''இல்லை, அப்பா! இல்லை-! அவர் என்னை நிச்சயம் பட்டத்து ராணியாக்குவார்!"

''அவன் உன்னைப் பட்டத்து ராணியாக ஏற்காவிடில், நீ என் விருப்பப்படி நடப்பாயா?" என அப்பா முதலி கேட்டது, அவளைச் சற்றுத் திடுக்கிட வைத்த போதிலும், சங்கிலி மேலுள்ள திடமான நம்பிக்கையினால் ஒப்புக் கொண்டவள் கல கலவென நகைக்கவே, ''ஏன் சிரிக்கிறாய், உதயவல்லி? உன் எண்ணப்படி நீ சங்கிலியை மணக்க நான் சம்மதித்து விட்டேனென்றா? அரசகுலத்தாரையுனக்குத் தெரியாது, கணப்பித்தம் கொண்டவர்கள்! வாக்குக் கொடுப்பதொன்றும் பெரிதல்ல அவர்களுக்கு! அதை நிறைவேற்றுவதுதான் பெரிது! உதயவல்லி, உனக்குத் தெரியுமா? சங்கிலியின் தாய் மங்கத்தம்மாளை பரராசசேகரர் - சங்கிலியின் தந்தை - அரசராகுமுன் காதலித்தார்! அவளைப் பட்டத்துராணியாக ஏற்றுக்கொள்வதாகவும் வாக்களித்திருந்தார்! ஆனால், பரராசசேகரரின் தந்தை கனகசூரிய சிங்கை ஆரியர் முடி தேவையானால், சோழகுலப் புத்திரியை மணக்கும்படி வற்புறுத்தியபோது, பரராசசேகரரால் மறுக்க முடியவில்லை. மங்கத்தம்மாளை வைப்பாட்டியாக்கிக் கொண்டார்! அந்த நிலையுனக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான்......'' என்று அப்பா முதலி சிறிது நிறுத்தினார்; இப்போதும் உதயவல்லி சிரிக்கவே செய்தாள்.

''அப்பா? வீண் பயம் கொள்ளாதீர்கள்! சங்கிலிகுமாரரை மணப்பதாயின் பட்டத்து ராணியாக்குவதாகச் சம்மதித்த பின்பே மணப்பேன். பட்டத்துராணியாக்குவதாக அவர் எனக்கு வாக்களித்திருக்கிறார்..."

''பரராசசேகரர் கூட மங்கத்தம்மாளுக்கு வாக்களித்திருந்தார்..."

''அப்படிப்பட்டவரல்ல இவர். அப்பா, உங்கள் மகள் கேவலம், மன்னரின் வைப்பாட்டி என்ற இழி பெயரை உங்களுக்குண்டாக்க மாட்டாள், நம்புங்கள்''

''உதயா, திரும்பவும் கேட்கின்றேன்... உன்னை அவன் பட்டத்து ராணியாக ஏற்காவிடில்...?"

''உங்கள் விருப்பப்படி நடப்பேன், அப்பா?''

விதி சிரிப்பாய் சிரித்தது; சங்கிலிகுமாரனதும் உதயவல்லியினதும் மனக் கோட்டைகளும், கனவுகளும் தவிடு பொடியாகக் கூடிய விதமாக, பரநிருபசிங்கரின் தங்கை வடிவம்மையோடும், அவளது கணவன் அரசகேசரியோடும் தொண்டை மண்டலத்திலிருந்து அரண்மனைக்கு அழகே உருவான ஒரு மங்கையாக அரசகேசரியின் தங்கை வந்தாள்.



15

# அரசமாதேவி.

காளிதாசரின் இரகுவம்சத்தை, மூலகாவியமே தமிழாகியது போன்று தமிழாக்கிய அரசகேசரி, தொண்டைமண்டலத்தில் இருந்து தனது மனைவியோடும் தங்கையோடும் யாழ்ப்பாண இராச்சியத்து அரண்மனைக்கு வந்திருந்தார். பரநிருபசிங்கரின் சகோதரி வடிவம்மை தேவியாரே அரசகேசரியின் துணைவியாவார். இவர்களுக்குக் குழந்தைப் பேறில்லாமையினால் தாயற்ற தங்கையாகிய அரசமாதேவிமீது அளவற்ற அன்பைச் சொரிந்தனர்.

பரராசசேகரரின் மகளை மணம்செய்துகொண்டதனால் மட்டும் அரசகேசரி நெருங்கிய உறவினனாக மாறிவிடவில்லை. மணவுறவு ஏற்படுவதற்கு முன்பேயே யாழ்ப்பாண அரசகுலத்தோடு நெருங்கிய உறவினன். பரராசசேகரரின் இரண்டாவது பத்தினியாகிய வள்ளியம்மை தேவியாரின் கூடப்பிறந்த தமையனின் மகனாக அரசகேசரி இருந்தமையினால், சிறு வயதிலிருந்தே நல்லூர் அரண்மனைக்கு இடையிடையே வந்து தங்கிச்செல்வதுண்டு. அவரோடு அரசமாதேவியும் வருவாள்.

அரசமாதேவி பிறந்த சில ஆண்டுகளில் அவள் தாயார் இறந்து போனார். அதன்பின் அரசகேசரியும் அரசமாதேவியும் ஆண்டில் பெரும் பாகத்தை நல்லூரில் கழித்து வந்தார்கள். வருடத்தில் சில நாட்களே தந்தையோடு பொன்பற்றியூரில் தங்குவார்கள்.

இவர்கள் சிறுவயதில் இருந்தே வள்ளியம்மை தேவியாரின் அரவணைப்பில் வளர்ந்தவர்களாதலால், இவர்களில் அரண்மனையில் உள்ளவர்கள் யாவரும் தனியான பாசம் வைத்திருந்தனர். அரசகேசரி மீது வள்ளியம்மை தேவியார் மிக்க அன்பு செலுத்தியதாலேயே, தனது மகளை அவனுக்கு மனைவியாக்கி மகிழ்ந்தார்.

சிறிய தந்தை செகராசசேகரர் மரணமானபின், ஓரளவு மன வேதனையடைந்த அரசகேசரி பொன்பற்றியூர் சென்றிருந்தார். அங்கு அவரது தந்தையும் காலமாகியதால், நல்லூர் திரும்பி வர சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அன்று அரண்மனையில் எல்லாரும் ஒருங்கே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தபோது வள்ளியம்மை தேவியார் மன்னரிடம் கேட்பார்:

“பிரபு அரசமாதேவி எவ்வளவு அழகாக வளர்ந்துவிட்டாள், பார்த்தீர்களா?”

அரசமாதேவி நாணத்தோடு தலைகுனிந்து கொண்டாள்; மலர்ப் பாரத்தால் கொடியென்று தலைசாய்த்து எழிலூர நின்றது.

(தொடரும்)

*Registered at the G. P. O. as a Newspaper in Ceylon*

*வெளிவந்துவிட்டது !* *வெளிவந்துவிட்டது !!*




**உயர் வகுப்புகளில் தாவரவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு உகந்தது.**

**எல்லாப் பிரபல புத்தகசாலையிலும் கிடைக்கும்.**

விலை : ரூபா **16/=**

இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம் 32, கண்டிவீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 27-7-67 இல் பதிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.